# செம்மணி

நிலம் 1 துகள் 18 வள்ளுவர் ஆண்டு 2051, 14 - 20 கார்த்திகை 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

# "இதில் அரசியல் இல்லை"

## சுமந்திரனுடன் ஒரு நேர்காணல்

● பிரேம்



இந்த வாரம் திடீரென மக்களுக்கான நீதி என்கிற சட்டத்தரணிகள் அமைப்பு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டதாகச் செய்திகள் பரபரப்பைக் கிளப்பின. அந்த அமைப்பின் முதல் முயற்சியாகக் கிழக்கில் காணி அபகரிப்பு வழக்கு ஒன்றில் இடைக்காலத் தடை பெறப்பட்டதாகவும் செய்திகள்.

திடீரென ஏன் இந்த அமைப்புத் தோன்றியது என்கிற கேள்வி எழ அதன் சூத்திரதாரியான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைத் தேடிப் பிடித்தோம். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்று கொண்டிருந்தவர் அலைபேசியிலேயே பட்டுப்பட்டென்று பதிலளித்தார்.

**"மக்களுக்கான நீதி" என்கிற அமைப்பை இப்போது தொடங்குவற்கான அவசரத் தேவை என்ன?**

கிழக்கு மாகாணத்தில் நடந்துகொண்டிருக்கின்ற அத்துமீறல்கள் என்று சொல்லக்கூடிய நில ஆக்கிரமிப்புக்கள்தான் இந்த அமைப்பைத் தொடங்குவதற்கான முக்கிய காரணி. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் மகாவலித் திட்டத்தின் கீழ் நடக்கும் சிலவும் உடனடியாக அணுகப்படவேண்டியவையாக உள்ளன.

பல இடங்களிலும் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு மக்கள் சட்ட உதவிகளை நாடும்போது நான் தனியொருவனாக எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் என்னால் இவற்றைக் கையாள முடியவில்லை. பல இளம் சட்டத்தரணிகளின் உதவியை அதற்காக நாடியிருக்கின்றேன். அப்படிப்பட்ட இளம் சட்டத்தரணிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கி, பொறுப்புக்களைக் கையளித்து அவர்களையும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் வகையில் இந்த அமைப்பைத் தொடங்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

கடந்த 20 வருட காலமாக இத்தகைய வழக்குகளை நான் கையாண்டு வருகின்றேன். அதற்குக் காரணம் அப்போது தமிழ் இளம் சட்டத்தரணிகள் அதிகளவில் இருக்கவில்லை. ஆனால் இப்போது நிறையப் பேர் இருக்கிறார்கள். அதனால் இது பொருத்தமானதொரு நேரம்.

இந்த அமைப்பு வடக்குக்கு மட்டுமானதல்ல. யாழ்ப்பாணத்தில் அது தொடங்கப்பட்டாலும் உடனடியாகவே கிழக்கிலிருந்தும் பலர் தாங்களாகவே கேட்டு இந்த அமைப்பில் இணைந்திருக்கிறார்கள். இந்த அமைப்பு வடக்கு, கிழக்கோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது என்பதும் என்னுடைய எண்ணம்.

**நீங்கள் சொல்லக்கூடிய சவால்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய இத்தகைய சவால்கள் இப்போது வந்தவையல்ல. நீண்ட நெடுங்காலமாகவே அவை தொடர்கின்றன. அப்படியிருக்கும்**

(02 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வாதிகாரத்தை நோக்கி?

● ஏகலைவன்

இலங்கையை ஆட்டுவிக்கிறது கொரோனாவின் இரண்டாவது அலை. கொழும்பு நகரத்தினுள் மட்டும் சுமார் 30 ஆயிரம் பேர் வரையிலானோருக்குத் தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என்று மாநகர சுகாதார அதிகாரி மருத்துவர் ருவான் விஜயமுனி எதிர்வுகூறியிருக்கிறார். மேற்கு மாகாணம் முழுவதும் நோய்த் தொற்றால் மிகப் பலமாகத் தாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் கார்த்திகை 11ஆம் நாள் முதல் மேற்கு மாகாணத்தைவிட்டு எவரும் வெளியேற முடியாது என்கிற தடை உத்தரவை கொவிட் - 19 தடுப்புச் செயலணியின் தலைவரான தரைப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்தார்.

அதிபர் கோட்டாபய ராஜபக்சவின் அறிவுறுத்தலின்படி இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். மேல் மாகாணத்தில் தொற்றுப் பரவல் வேகம் அதிகமாக இருப்பதால் அது மற்றைய இடங்களுக்கும் பரவாமல் தடுக்கும் நோக்கோடு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அப்பாடி, இப்போதாவது தடையைப் போட்டார்களே, இனிமேல் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சை ஏனையோர் விட்ட போது, அதனோடிணைந்த பல

(21ஆம் பக்கம் பார்க்க)


## கோவிட் - 19 இற்கான மாற்று மருந்து




விஞ்ஞானத்தினையும் மனிதரையும் ஆட்டிப்படைக்கும் இந்த உலகப் பெருந்துயர் ஓய்விற்கு வரும் நாள் வெகுதொலைவில் இல்லை.



வாசகர்கள், வாழ்க்கையாளர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



## வெற்றியும் பைடனும்




'அமெரிக்க வரலாற்றில் ஒரு சிங்கம்' என்று பைடெனை புகழ்ந்துள்ள பராக் ஒபாமா, 2008 இல் அவரைத் தனது துணை அதிபர் வேட்பாளராக்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# தோல்வியின் பொறுப்பாளிகள் யார்?

தொழில் முனைவோருக்கான காணிகளை வழங்க விண்ணப்பங்களைக் கோரி இருந்தது இலங்கை அரசு. நீடிக்கப்பட்ட விண்ணப்ப இறுதித் திகதி கார்த்திகை மாதம் 15 என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. கொடுக்கப்பட்ட முதல் விண்ணப்பத் திகதிக்குள் கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதாமலிருந்ததன் காரணமாகவே காலக்கெடு நீடிக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு கடந்த சில தினங்களாகச் சில அரசியல்வாதிகள் ஊடகங்கள் வாயிலாகவும் தனிநபர்கள் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் ஊக்குவித்திருந்தார்கள்.

விண்ணப்ப இறுதித் திகதி 15 என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் 14, 15ஆம் திகதிகள் வார விடுமுறை நாள்கள் என்பதால் வெள்ளிக்கிழமையே விண்ணப்பிப்பதற்கான வேலைநாள். இதையடுத்து வெள்ளிக்கிழமை மட்டும் பிரதேச செயலகங்களில் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் குவிந்தன என்று அறியக் கிடைக்கின்றது. தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் இதே நிலைமைதான்.

அபிவிருத்தியை நோக்கிய பாதையில் இலங்கையை வழிப்படுத்தும் நோக்கத்தோடு இந்தக் காணிகள் வழங்கப்படவுள்ளதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். ஆனால், கடந்த காலங்களைப் போலவே இந்த நடவடிக்கையின் பின்னணியில் வடக்கு, கிழக்கு எல்லையோரங்களில் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தும் இரகசியத் திட்டம் ஒன்று இருக்கக்கூடும் என்கிற சந்தேகம் கிளர்ந்ததைத் தொடர்ந்தே கடந்த சில நாள்களில் மட்டும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் குவிந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

அதேநேரம் இத்தகைய திட்டங்கள் குறித்து இளைஞர்களிடமும் அரசியல்வாதிகளிடமும் ஏனையவர்களிடமும் எவ்வளவு தூரத்திற்கு விழிப்புணர்வு இருந்திருக்கின்றது, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதும் கவனத்திற்குரியதொன்று. கடைசி நேரத்தில், எல்லையில் காணிகள் பறிபோகப்போகின்றன என்கிற கோணத்தில் இந்தப் பிரச்சினையை அணுகி ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு தொடக்கத்திலேயே ஏன் ஏற்படுத்தப்படவில்லை? தனது தாயகத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கப் போராடும் ஒரு இனத்தின் விழிப்பு நிலை இந்த வகையிலா இருக்க முடியும்? அத்தகைய ஓர் இனத்தின் அரசியல் தலைவர்கள் இப்படியாகத்தான் செயற்பட முடியுமா?

இந்த விடயத்திலேயே மக்களுக்கு உரிய நேரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை வழிப்படுத்தி தாயகத்தையும் எல்லைகளையும் பாதுகாக்க முடியாது போய்விட்ட இந்த அரசியல்வாதிகள் எப்படி உரிமைகளை மீட்டெடுத்து வடக்குக் கிழக்கை ஒன்றிணைப்பார்கள் என்று நம்புவது?

கடைசி நேரத்தில் அவசர அவசரமாக முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அரைவாசி உண்மையான தொழில்முனைவோரால் முன்வைக்கப்பட்டிருக்காது என்பதும் காணிகளைச் சொந்தமாக்கிக்கொள்ளும் நோக்கத்தோடு பலர் இதனை அணுகியிருப்பர் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஆகமொத்தத்தில் மீண்டும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் இன்றியே விண்ணப்பங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தோல்விக்குப் பொறுப்பானவர்கள் யார்?

இன விடுதலைக்காகப் போராடும் அரசியல் தலைவர்கள் இதுபோன்ற ஒவ்வொரு விடயத்திலும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு இருக்க வேண்டாமா? வாய்ப்புக்களை எல்லாம் விட்டுவிட்டுப் பின்னர் நாடாளுமன்றத்தில் உரைகளை ஆற்றிவிடுவதால் மட்டும் என்ன பயன்?

துன்பியலாகத் தீபாவளித் திருநாள் பரிசாக தமிழ் மக்களுக்குக் கிடைத்திருப்பது இந்த பரிதாபரமான அரசியல் களச்சூழல்தான். தீபாவளியைக் கொண்டாடும் வாசகர்கள் அனைவருக்கும் செம்மண் இதழின் திருநாள் நல்வாழ்த்துகள்.

# இதில் அரசியல் இல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**போது ஏன் இப்போது திடீரென இந்த அமைப்புத் தேவைப்படுகிறது?**

எனக்கு வயசாகிறது என்பதே காரணம்.

90ஆம் ஆண்டிலிருந்து நான் இத்தகைய வழக்குகளைக் கையாண்டு வருகின்றேன். அத்தகைய வழக்குகளைச் செய்வதற்கு ஏனைய சட்டத்தரணிகள் தாங்களாகவே ஆர்வமாக முன்வந்தார்கள் என்று சொல்லமுடியாது. மிகச் சிலரே இருந்தார்கள். இப்போதும்கூட இளம் சட்டத்தரணிகள் பலர் இருந்தாலும் தாங்களாகவே முன்வந்து அத்தகைய வழக்குகளை எடுத்து நடத்துபவர்கள் மிகக் குறைவானோரே.

நாம் அனைவரும் கூட்டாக இயங்கினால், ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க முடியும். பலம் கிடைக்கும். அவர்களும் (இளம் சட்டத்தரணிகள்) தன்னம்பிக்கையடைவர்.

**மக்களுடைய பொது வேலைத் திட்டத்திற்காகச் சட்டத்தரணிகளின் ஒன்றுதிரள்வு இதுவரையில் இடம்பெறாதிருந்ததற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

80களின் தொடக்கத்தில் சட்டத்தரணிகள் சந்திரகாசன், சி.வி.விவேகானந்தன் போன்றவர்கள் செயற்பட்டுள்ளார்கள். அவர்களும் ஓர் அமைப்பாகச் செயற்படவில்லை, தனிநபர்களாகச் சிலர் ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கிறார்கள். வன்முறைகளுக்குப் பின்னர் 90களின் தொடக்கத்தில் சட்டத்தரணிகள் குமார் பொன்னம்பலம், சிறீகாந்தா போன்றவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள். குறிப்பாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக இவர்கள் இயங்கியிருக்கிறார்கள்.

ஆனால் 76ஆம் ஆண்டு ட்ரயல் அட் பார் வழக்கு வந்தபோது அரசியல் உரிமைகள் சார்ந்து 67 சட்டத்தரணிகள் உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிணைந்து இயங்கியதைப் போன்று ஒரு நடவடிக்கை பின்னர் இருக்கவில்லை. 90களின் இறுதியிலிருந்துதான் நான் உட்பட ஒரு சிலர் அதனைச் செய்து வருகின்றோம். எனவே அப்படி ஒரு ஒருங்கிணைவு இருக்கவேயில்லை என்று சொல்லமாட்டேன்.

அதேநேரம், சிலர் அடிக்கடி எழுப்பும் கேள்வி ஏன் இவர் (சுமந்திரன்) மட்டும் தமிழ் மக்கள் சார்பான வழக்குகள் செய்ய வேண்டும் என்பது. அதற்குப் பதிலாக மற்றவர்களும் செய்யலாமே! என்று சொல்லிப் போட்டு விடுவதைவிட இளம் சட்டத்தரணிகளுக்கு ஒரு வழிகாட்டலைக் கொடுத்தால் அது மக்களுக்குப் பெரும் பலமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**இந்த அமைப்பு எத்தகைய வழக்குகளைக் கையாளும்? சட்ட உதவி தேவைப்படும் யார் வேண்டுமானாலும் இந்த அமைப்பை அணுக முடியுமா?**

தனிப்பட்டவர்களின் நலன் சார்ந்த வழக்குகளை இந்த அமைப்பு ஒருபோதும் கையாளாது. பொது நலன் கருதிய, சமூகம் சார்ந்த வழக்குகளைத் தனிப்பட்டவர்கள் சார்பில் முன்னெடுக்கும். அதாவது பெரும்பாலான மக்களைப் பாதிக்கக்கூடிய விடயங்களில் மட்டுமே இந்த அமைப்புக் கவனம் செலுத்தும்.

இது ஒரு மிகக் கட்டிறுக்கமான அமைப்பும் அல்ல. இந்த அமைப்பால் ஒரு வழக்கு முன்னெடுக்கப்படும்போது இந்த அமைப்பில் உள்ளவர்களேகூட எமக்கு எதிர்த் தரப்பில் வாதாடக்கூடும். அதை இந்த அமைப்பு கட்டுப்படுத்தாது. இது ஒரு சட்டத்தரணிகள் நிறுவனம் அல்ல. பொது நலன்களுக்காக சட்டத்தரணிகள் ஒன்றிணையும் ஒரு அமைப்பு மட்டுமே.

குறிப்பாக அரசு பக்கம் இருந்து மக்களுக்குக் கெடுதல் செய்யப்படும்போது உதவி செய்வதற்கான ஓர் அமைப்பு. பொதுப் பிரச்சினைகளில் இந்த அமைப்பு இலவசமாக வழக்குகளைக் கையாளும்.

**அதாவது, மக்களுக்கான நீதி என்கிற அமைப்பு எந்த வகையான வழக்குகளை எடுத்து நடத்தப்போகின்றது என்பதை அந்த அமைப்புத்தான் தீர்மானிக்கும். அப்படித் தானே?**

இல்லை. பொதுப் பிரச்சினை ஒன்றுக்காக ஒருவர் நாடினால் அதனை நாம் பரிசீலிப்போம். ஆனால் தனிப்பட்ட காணிப் பிரச்சினை போன்றவற்றில் நாம் கரிசனை கொள்ளமாட்டோம்.

**அப்படி நாடுவதானால் எங்கே நாடுவது? யாரை நாடுவது?**

அதற்கான தகவல்களை நாம் விரைவில் வெளியிடுவோம். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவர் நியமிக்கவேண்டிய தேவை இருக்கும். அது பற்றிய விவரங்களை நாம் குறிப்பிட்டு அறிவிப்போம்.

அத்தோடு இதில் எந்தவிதமான அரசியல் கலப்பும் இருக்காது. தொடக்க நிகழ்விலேயே, கடந்த தேர்தலில் மூன்று வித்தியாசமான கட்சிகளில் போட்டியிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். நான்காவது கட்சியைச் சேர்ந்த ஒருவரும் வருவதாக இருந்தார், ஆனால் இறுதி நேரத்தில் அவரால் வர முடியாமல் போய்விட்டது.

அரசியல் எல்லாவற்றையும் தாண்டிய, மக்களுக்கான ஒரு சட்டத்தரணிகள் அமைப்பாகத்தான் இது இருக்கும்.

**நீங்கள் இதில் அரசியல் இல்லை என்றால்கூட, அமைப்பின் பெயர் மற்றும் ஏற்கனவே நீங்கள் சார்ந்த கட்சி (தமிழ் அரசு) மற்றும் கூட்டு (கூட்டமைப்பு) என்பவற்றிலும் மற்றைய சில கட்சிகளிலும் இடம்பெற்று வரும் அரசியல் என்பவற்றின் பின்னணியில் இருந்து பார்க்கும்போது இந்த அமைப்புக்கு ஒரு அரசியல் பாரிமாணம் வருவதைத் தவிர்க்க முடியவில்லையே?**

அரசியலே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் கட்சி அரசியலைக் கடந்த ஒரு அமைப்பாகவே இதனை முயற்சிக்கின்றோம்.

**நீங்கள் இதில் கட்சி அரசியல் இல்லை என்று மறுத்தால்கூட, தற்போது உங்கள் கட்சிக்குள் உங்களுக்கு இருக்கும் சவால்களைக் கடந்து வந்து உங்களை நிலைநிறுத்திப் பலப்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக இதனைக் கருதக்கூடாது என்று சொல்ல வருகிறீர்களா?**

ஓம்! அப்படிக் கருதக்கூடாது. இது என்னுடைய அரசியலுக்காகச் செய்யும் நடவடிக்கையே அல்ல இது. கடந்த 20 வருடங்களாக நான் செய்த வழக்குகளைப் பார்த்தாலே அது தெரியும். நான் அரசியலுக்குள் வருவதற்கு முன்பே நான் தமிழ் மக்களின் நலன் சார்ந்த வழக்குகளைக் கையாண்டு வருகின்றேன். அதை ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதுகின்றேன். அதைத் தனி ஆளாகச் செய்ய முடியாது. அப்படிச் செய்வதால் மக்களுக்குத் தேவையான முழுமையான சேவை கிடைக்காது என்பதாலேயே அனைவரையும் இணைத்துக் கொண்டு பயணிக்க முயற்சிக்கின்றோம்.

**அப்படியென்றால், தேர்தல் சார்ந்த அரசியலுக்குள் இந்த அமைப்பின் தலையீடு எப்போதுமே இருக்காது என்று கொள்ளலாமா?**

இருக்காது, இருக்க முடியாது. ஏனென்றால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதில் இருக்கிறார்கள். இந்த அமைப்பு முன்னெடுக்கும் விடயங்களை ஒரு கட்சி மட்டும் உரிமை கோரமுடியாது.

**ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்கப்பட்டுள்ள சட்டத்தரணி மணிவண்ணன் போன்றவர்கள் இந்த அமைப்புக்குள் உங்களோடு இணைவது என்பது ஓர் அரசியல் அணி சேர்க்கையாகத்தானே பார்க்கப்பட முடியும்?**

இல்லை. அந்த அமைப்பில் சட்டத்தரணி செலஸ்ரீன் இருக்கிறார். அவர் பெரமுன சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர். சட்டத்தரணி ரெமீடியஸ் இருக்கிறார். அவர் ஈ.பி.டி.பி. சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர். முதல் கூட்டத்திற்கு அவர் வரவில்லை என்றாலும்

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியும் பைடனும்

● கனிமொழி

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை, என்றாலும் 290க்கு மேற்பட்ட தேர்தல் வாக்குகளைப் பெற்று மக்களாட்சிக் (ஜனநாயக) கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளார். ஜோர்ஜியா, நோர்த் கரோலினா மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. கடைசியாக வெளிவந்த அரிசோனா மாநில முடிவுகள் ஆச்சரியப்படுத்தும் வகையில் பைடனுக்குச் சார்பாக வெளிவந்திருக்கின்றன.

ரிபப்ளிக் கட்சியின் கோட்டையான அரிசோனாவில் கடந்த 70 ஆண்டுகளில் மக்களாட்சிக் கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் வெற்றிபெறுவதென்பது இது இரண்டாவது தடவை மட்டுமே. இதுபோன்ற சில மாநிலங்களில் பைடன் வெற்றி பெற்றதற்குத் தபால் மூல வாக்களிப்பில் நடந்த மோசடிகளே காரணம் என்று ட்ரம்ப் குற்றச்சாட்டியிருக்கிறார். அதனால் அந்த முடிவுகளை எதிர்த்து வழக்குகளைத் தொடர்வதற்கும் அவரது அணியினர் தயாராகி விட்டனர்.

இந்தப் பின்னணியில் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளிவருவதில் இன்னும் தாமதங்கள் இருக்கலாம். வாரங்கள் அல்லது மாதங்கள் செல்லலாம். தேர்தல் முடிந்தபோதும் எதிர்வரும் தை மாதம் 20ஆம் திகதி வரையில் ட்ரம்பே பதவியில் நீடிப்பார். அது அமெரிக்க வழமை. அதன் பின்னரும் அவர் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறமாட்டேன் என்று அடம்பிடித்தால், அதிபரின் பாதுகாப்புக்கான இரகசியப் படையினரால் அவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவார். தேவைப்பட்டால் படையினர் அவரது உடலிலும் கை வைப்பார்கள் என்று அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

பைடன் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டாலும், “திருடப்பட்ட” அந்த வெற்றிக்கு மதிப்பளித்துத் தான் பதவியிலிருந்து விலகமாட்டேன் என்று ட்ரம்ப் அறிவித்திருப்பதைத் தொடர்ந்தே அவரைப் பலவந்தமாக வெளியேற்றுவது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் அமெரிக்காவில் சூடு பறக்க நடக்கின்றன.

அமெரிக்க வரலாற்றில் அதிபர் ஒருவர் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறாமல் இதுவரையில் அடம்பிடித்ததில்லை என்பதால் நாட்டுக்கு இது ஒரு புது அனுபவமாக இருக்கிறது. விறுவிறுப்பான திரைக்கதையின் உச்சத்தைப் பார்க்கும் ஆவல் மனோ நிலையில் என்ன நடக்கப்போகிறதோ என்று எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

தை மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர் பைடன் அதிபராகப் பொறுப்பேற்றாலென்ன, ஏற்காவிட்டாலென்ன ட்ரம்ப் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறவேண்டும் அல்லது வெளியேற்றப்படுவார். அதன் பிறகு சபாநாயகர் நான்ஸி பெலோசி **(Nancy Pelosi)** அம்மையாரே அமெரிக்காவின் இடைக்கால அதிபராக இருப்பார்.

எதிர்பார்க்கப்படும் சட்டச் சிக்கல்களைத் தாண்டி பைடனின் வெற்றியைத் தேர்தல் திணைக்களம் உறுதி செய்த பிறகே அடுத்த கட்டமாக அதிகாரக் கைமாற்ற ஏற்பாடுகள் அதற்குரிய ஒழுங்கில் நடைபெறும்.

பதவியேற்புக்கு முன்பாக ஜோ பைடன், கமலா ஹரிஸ் ஆகியோரது தெரிவுகளை அமெரிக்க நாடாளுமன்றப் பேரவை (காங்கிரஸ்) தை மாதம் 6ஆம் திகதி உறுதி செய்ய வேண்டும்.


**யார் இந்த பைடன்**

அமெரிக்காவின் 46 ஆவது அதிபராக வெற்றிவாகை சூடியிருக்கும் ஜோஸப் ரொபினட் பைடென் **(Joseph Robinette Biden)** 47 வருட கால அரசியல் அனுபவம் கொண்டவர். நவம்பர் 20, 1942 இல் பென்சில்வேனியாவில் வசதியான குடும்பம் ஒன்றில் பிறந்தவர். பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு வியட்நாம் போரில் பங்கெடுத்தவர். பின்னர் அஸ்மா நோய் காரணமாகச் சேவையில் இருந்து விலக்கப்பட்டார்.

1972இல் தனது 30 ஆவது வயதில் டெல்வாரே **(Delaware)** மாநில செனட்டராகத் தெரிவாகினார். அடுத்த சில நாள்களில் - நத்தார் தினத்துக்கு சில தினங்கள் முன்னர் - கார் விபத்து ஒன்றில் அவரது முதல் மனைவியும் கைக்குழந்தையான மகளும் உயிரிழக்க நேர்ந்தது.

செனட்டராகப் பதவியேற்கும் நிகழ்வுக்கு அவர் மருத்துவமனையில் இருந்தே வரவேண்டி ஏற்பட்டது. அதேவிபத்தில் படுகாயமடைந்த மற்ற இரண்டு ஆண் பிள்ளைகளையும் வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்காகத் தனது செனட்டர் பதவியைத் துறக்க விரும்பினார். ஆனால் அன்றைய செனட் குழுத் தலைவரின் வற்புறுத்தலால் பின்னர் அந்த முடிவைக் கைவிட்டார்.

1987இல் குடியரசுக்கட்சி வெள்ளை மாளிகைக்கான போட்டிக்குள் நுழைந்தபோது அக் கட்சியின் சார்பில் அதிபர் பதவிக்குத் தகுதியானோரில் ஒருவராக பைடெனும் இருந்தார். ஆனால் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தலைவராக விளங்கிய நெய்ல் கின்னொக்கின் **(Neil Kinnock)** உரையிலிருந்த கருத்துக்களைத்



திருடித் தனது பரப்புரைக்குப் பயன்படுத்தினார் என்று எழுந்த சர்ச்சை காரணமாகப் போட்டியிலிருந்து அவர் விலக நேர்ந்தது.

தனது அரசியல் பயணத்தில் 1991 இல் செனட் சபையின் சக்திவாய்ந்த நீதித்துறைக்குழுவின் தலைவரானார் பைடென்.

செனட்டின் வெளிவிவகாரக் குழுவின் தலைவராக இருந்த சமயம் 2002ஆம் ஆண்டு ஈராக் போருக்கு அங்கீகாரமளிக்கும் தீர்மானத்தை ஆதரித்தார். அதிபர் சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறார் என்று திரட்டப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போரை ஆதரித்த பைடென், பின்னர் சதாமுக்கு எதிரான அந்தச் சாட்சியங்கள் ஆதாரமற்றவை என்பது தெரியவந்தபோது ‘பின்னோக்கிய பார்வையில் அது ஒரு தவறு’ என்று ஒப்புக்கொண்டார்.

‘அமெரிக்க வரலாற்றில் ஒரு சிங்கம்’ என்று பைடெனைப் புகழ்ந்துள்ள பராக் ஒபாமா, 2008 இல் அவரைத் தனது துணை அதிபர் வேட்பாளராக்கிக் கொண்டார். 2009 இல் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்த ஒபாமாவுக்குக் கடைசி வரை அவரது வெற்றிகளுக்கான வலது கரமாகத் திகழ்ந்தவர் பைடென்.

வெளிவிவகாரம் உட்பட ஒபாமா நிர்வாகத்தின் பல்வேறு முக்கிய அரசியல் தீர்மானங்களுக்குப் பைடெனின் அனுபவ ஆலோசனைகள் காரணமாகின.

ஒபாமாவின் இரண்டு தவணைக்கால ஆட்சிக்குப் பின்னர் 2016 இல் அதிபர் தேர்தலில் களமிறங்குவதற்கு பைடெனுக்கு வாய்ப்பிருந்தது. அமெரிக்கக் கறுப்பினத்தவர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் அச்சமயம் அவருக்குப் பரந்தளவு செல்வாக்குக் காணப்பட்டது. ஆனால் தனது மூத்த புதல்வர் மூளைப் புற்று நோய் காரணமாக உயிரிழக்க நேர்ந்ததால் அச்சமயம் அவரால் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாமற்போனது.

கடைசியில் “தள்ளாடும் வயோதிபர்”, “தீவிரமான மையவாதி” எனப் பலவிதமான விமர்சனங்களுக்கு முகம் கொடுத்தவாறு இந்தமுறை 2020 தேர்தலில் - தனது 77 ஆவது வயதில் - வெள்ளைமாளிகைக்கான போட்டியில் களமிறங்கினார்.

பைடனின் இரண்டாவது மனைவியின் பெயர் ஜில். ஆசிரியையான இவரே இனிமேல் அமெரிக்காவின் முதல் பெண்மணி.

ஜில்லுக்கு பைடன் இரண்டாவது கணவர்தான். அவரது முதல் கணவர் கல்லூரி கால்பந்து வீரர் பில் ஸ்டீவன்சன். ஜில் 1951ஆம் ஆண்டு நியூ ஜெர்ஸி மாநிலத்தில் பிறந்தவர். ஐந்து மகள்களில் மூத்தவர். பிடெல்பியாவில் வளர்ந்தார்.

பைடனின் முதல் மனைவி இறந்து மூன்று வருடங்களின் பின்னர் அறிமுகமாகி 5 தடவைகள் காதலைச் சொன்ன பின்னரே பைடனின் காதலைத் தான் ஏற்றுக்கொண்டார் என்கிறார் ஜில்.

1977ஆம் ஆண்டு இந்த இணையர் திருமணம் செய்துகொண்டனர். இவர்களுக்கு 1981இல் அஷ்லே என்ற மகள் பிறந்தார்.

**தமிழகத் தொடர்பு**

பைடனின் துணை அதிபரான கமலா ஹாரிஸின் தாயார் வழியில் தமிழகத்துடன் தொடர்புபட்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் பைடனுக்கும் தமிழகத்திற்கும்கூடத் தொடர்புகள் இருக்கின்றன என்கிற செய்திகளும் வெளியாகி இருக்கின்றன.

அமெரிக்க மக்களாட்சிக் கட்சியின் அதிபர் வேட்பாளராக ஜோ பைடனும், துணை அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிஸும் அறிவிக்கப்பட்ட தருணத்தில் லண்டன் கிங்க்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வருகைப் பேராசிரியரான டிம் வில்லாஸே - வில்ஸே, ஜோ பைடனின் முன் னோர்கள் சென்னையில் இருந்திருக்கலாம் என சுட்டிக்காட்டி இணையதளத்தில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

ஜோ பைடன் 2013இல் துணை அதிபராக மும்பைக்கு வந்திருந்தபோது, தன்னுடைய முன்னோர்கள் அங்கு வசித்திருப்பதாகக் குறிப்பிட்டார். இதற்குப் பிறகு 2015இல் வோஷிங்டன் டிசியில் பேசிய பைடன், தன்னுடைய மூதாதையர்கள் கிழக்கிந்தியக் கம்பனியில் கேப்டனாகப் பணியாற்றியிருப்பதாகத் தெரிவித்தார். தான் பல ஆண்டுகளுக்கு முன்பாக, 1972இல் செனட்டராகத் தேர்வுபெற்றதும் மும்பையிலிருந்து வந்த ஒரு கடித்தில் இந்தத் தகவல் இடம்பெற்றிருந்ததாகவும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் தேடுதல் நடத்திய பேராசிரியர் வில்ஸே, பைடன் சொல்வதைப் போன்று அவரது மூதாதையரான ஜோர்ஜ் பைடன் என்ற பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியில் எவரும் இருக்கவில்லை என்றும் அதேநேரம் ஹென்றி பைடன், கிறிஸ்தோபர் பைடன் ஆகிய இருவர் இருந்தனர் என்றும் தெரிவித்திருக்கிறார். இவர்கள் இருவரும் சகோதரர்கள். இவர்களில் கிறிஸ்தோபர் பைடன் சென்னையிலேயே தங்கியிருந்தார். அங்கேயே இறந்தார். ஒருவேளை பைடனின் மூதாதையராக அவர் இருந்திருக்கக்கூடும் என்று பேராசிரியர் தெரிவித்திருக்கிறார்.

**சவால்கள்**

அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள பைடனுக்குப் பெரும் சவால்கள் காத்திருக்கின்றன. அமெரிக்காவின் நீண்ட பாரம்பரியங்களையும், விழுமி

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி விண்ணப்பம்!

இனியெழுத ஏதுமில்லை,
இதயத்தில் இரத்தமில்லை,
கண்களிலே நீருமில்லை,
கறைகளுக்கோ எல்லையில்லை,
நம்பிக்கை துளியுமில்லை,
நமைக்காக்க யாருமில்லை,
தலைமைக்கு தகுதியில்லை,
தலைக்குள்ளே ஏதுமில்லை,
இளமைக்கு பஞ்சமில்லை,
இதயத்தில் வீரமில்லை,
இடம்கொடுப்பார் எவருமில்லை,
இனியவரும் இனியில்லை,
ஆசைக்கோ எல்லையில்லை,
பணம்பண்ண வழியோ இல்லை,
பாராளத்தான் ஆளுமில்லை,
வைத்தியரும் சுகமில்லை,
தாதியரும் நலமில்லை,
தனைக்காக்க நாதியில்லை,
எனைக்காக்க யாருளரோ,
மரமண்டை மனிதரிலும்,
கொரோனா கொடுமையில்லை,
வாங்கியே வருகின்றார்,
மஞ்சளோடு கஞ்சாவும்,
கடல்கடந்து கிருமியுடன்,
தமைக்காக்க வழியறியார்,
குழந்தைகுட்டி சிதைக்கின்றார்,
பிணமான பின்னே
பணமெதனை ஆளும்,
புரியாமல் அலைகின்றார்,
சந்தையிலே திரிகின்றார்,
பெருமூச்சு இறைக்கின்றார்,
பல்லையும் இளிக்கின்றார்,
கவசமோ நாடியிலே,
காரியமோ காசிலே,
கடைசியில நடப்பதோ,
கூண்டோட கைலாயம்,
குடிக்காமல் உறக்கமில்லை,
கூத்தைவிட மனமுமில்லை,
அரிசிக்கோ வழியில்லை,
மழையும் பொழியவில்லை,
கல்லரிக்க மில்லிருக்க,
தரமாக்க வழியிருக்க,
கடையினிலே கலக்கின்றார்,
கல்லரிசி தருகின்றார்,
துரோகம் உச்சத்தில்,
தூர்வார யாருமில்லை,
உழுந்து விலையாக,
உமியும் கலந்தாக,
தமிழனே தறிகெட்டான்,
தரணியிலே மோசடியில்,
மஞ்சள் சாயமதை,
மாவிலே கலந்துவிட்டு,
ஆயிரமாய் உழைக்கின்றான்,
ஆசைக்கோர் எல்லையில்லை,
பாசமும் மனதிலில்லை,
பண்பான குணமுமில்லை,
குழந்தைக்கோ நஞ்சளித்து,
தாரத்தை பலியெடுத்து,
பதைபதைப்பு செய்தியினை,
தருகின்ற வழியதனை,
எவரிடத்தில் தான்கற்றான்,
தானாக தரமிழந்தான்,
எழுதிடவும் மனமில்லை,
ஆவணமாய் ஆகிவிடும்,
ஏசிடாமல் இருக்கவும்,
என்னால் முடியவில்லை,
தன்னையும் கொலைசெய்வான்,
தமிழையும் தலைகொய்வான்,
தாயைவிற்றும் பிழைக்கின்றான்,
சேரசோழ பாண்டியனென்று,
தமக்குள்ளே அடிபட்டான்,
தரணியையே இழந்திட்டான்,
வரலாறு தொடர்கிறது,
வஞ்சனைகள் நீண்டிடவே,
நமக்குள்ளே பகையிருக்க,
அடுத்தவனை நோவானேன்,
உசுப்பேத்தி பிழைக்கின்றார்,
உயிரோடு விளையாட்டோ ,
பலவழியில் சிதைந்திங்கு,
போகுமுயிர் கொஞ்சமில்லை,
எப்படி எதையெழுத,
எவன்திருந்தி வாழவழி,
அவனவன் தனைக்காக்க,
புத்திமதி சொந்தமாக,
சிந்தித்து வாழ்ந்திடவே,
சிறப்பான வழிபோலும்,
இயற்கை தனைப்பேணி,
முரண்பாடு இல்லாமல்,
நிதானம் காத்திட்டு,
நிம்மதியை மனங்கொண்டு,
உன்னைநீ காத்துவிடு,
உனைக்காக்க எவருமிலர்,
சந்ததி தனைப்பேணி,
பண்பொழுக பயிற்றிவிடு,
குறுக்குவழி நிலைக்காது,
குறைவின்றி வாழ்வேது,
அரக்கப் பறக்கவே,
ஆவதுவும் ஒன்றுமிலை,
தெய்வமே துணையென்று,
தெய்வமாக வாழ்ந்துவிடு.

**மு.சிவநேசன்.**

# வெற்றியும் பைடனும்....

(04 ஆம் பக்கம் பார்க்க)

யங்களையும் ட்ரம்ப் தேசியவாதம் பேசி உடைத் தெறிந்துவிட்டார் என்கிற குற்றச்சாட்டுப் பலமாக உள்ள நிலையில் அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டியிருக்கின்றது.

இவற்றைச் சரிசெய்யவேண்டும் என்றால், ட்ரம்பின் முடிவை அடுத்து பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து, கடந்த புதன்கிழமை தான், அமெரிக்கா முறையாக வெளியேறிய நிலையி



லிருந்து பின்வாங்கி ஜோ பைடன் இந்த கால நிலை ஒப்பந்தத்தில் மீண்டும் இணையவேண்டும்.

உலக சுகாதார அமைப்பில் இருந்து, அமெ ரிக்கா வெளியேறும் என்கிற ட்ரம்பின் முடிவையும் அவர் திரும்பப் பெறவேண்டி யிருக்கும்.

ஏழு இஸ்லாமிய நாட்டுக் குடிமக்கள் மீதான, பயணத் தடையை ஜோ பைடன் நீக்கவேண்டும்.

சரியான ஆவணங்கள் கொடுக்கப்படாமல், அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த குழந்தை களுக்கு, முன்பைப் போலவே, குடியேறிகள் (Immigrants) என்கிற இடம் வழங்கப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றையும் பைடன் செய்வார் எனப் பட்டியலிடுகின்றன அமெரிக்க ஊடகங்கள்.

கடந்த சனிக்கிழமை, தனது வெற்றி கிட்டத்தட்ட உறுதியான பின், முதல் முறையாக மக்களிடம் பேசினார் பைடன். அப்போது "அமெரிக்காவை குணப்படுத்த வேண்டிய நேரமிது, அமெ ரிக்காவைப் பிரிக்காமல், ஒன்றிணைப்போம். நாம், நம் போட்டியாளர்களை, எதிரி களைப் போல நடத்துவதை நிறுத்த வேண்டும்" என்று கூறினார்.

இந்தச் சவால்கள் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டுக்குள்ளே கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை எடுக்கவேண்டியதே பைடனின் தலையாய கடமையாக இருக்கும். இந்த விடயத்தில் இதுவரை வெள்ளை மாளிகை காட்டி வந்த அணுகுமுறையிலிருந்து பெருமளவிலான மாற்றங்களைத் தான் கொண்டு வருவார் என்று பைடன் ஏற்கனவே கூறியிருக்கின்றார்.

முகக் கவசத்தைக் கட்டாயமாக்குவது, அனைவருக்கும் இலவச பரிசோதனை என் பன அவரது உடனடி நடவடிக்கைகளாக இருக்கும் என்கிறார்கள் பைடனின் அணியினர்.

உலகில் 5 கோடியே 30 லட்சம் பேரைத் தாண் டிச் சென்றிருக்கும் கொரோனா தொற்று விவ காரத்தில் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் அமெரிக்கர்கள். கிட்டத்தட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் அங்கு கொரோனாவால் உயிரி ழந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டு வருவதே பைடன் முன்னுள்ள மிகப் பெரும் உடனடிச் சவாலாக விளங்கும்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்
HIKVISION Mega Store
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு. குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION



Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
hikvisionmegastore@gmail.com
இல - 164, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
164, Palaly Road,
Thirunelvely, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுப் பாதையில் பயணம்!

● ஜெரா

மனிதர்கள் தெருவெங்கும் விழுந்து சாகத் தொடங்கிவிட்டனர். செத்த பின்னர் கொவிட் தொற்று இருப்பதை மருத்துவர்கள் உறுதிசெய்கின்றனர். செத்தொருவர் விழும்போது பதறியோடும் சகபாடிகளைக் காண்கிறோம். சக மனிதர் சாதரணமாய் தும்மினாலோ தூர ஓடும் சந்தேகத்தைப் பார்க்கமுடிகிறது. எனவே இத்தீவை கொவிட் தொற்று அபாயகரமான நிலைமைக்குள் கொண்டு வந்துவிட்டது.

ஆனால் அரசு என்ன சொல்கிறதெனில், "இன்னமும் சமூகத் தொற்று ஏற்படவில்லை. நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது" என்கிறது. அறிவியல் உலகமே கட்டுப்படுத்தத் திணறும் தொற்றினை இறை பிரார்த்தனை செய்தும், மந்திர தந்திரங்கள் செய்தும் கட்டுப்படுத்தலாம் எனப் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறது அரசு.

**முதல் அலை**

இலங்கையில் முதல் முதலாக சீனப் பெண்மணிக்கு கொவிட் தொற்று ஏற்பட்டது. 14 நாள்களில் அப்பெண் குணமாகி நாடு திரும்பினார். அது பெரும் அரசியல் வெற்றியாகக் கொண்டாடப்பட்டதோடு, தொடர்ந்து வந்த முதல் அலையை 14 இறப்புக்களோடு 4 ஆயிரத்திற்குக் குறைவான தொற்றாளர்களுடன் கட்டுப்படுத்திய நாடு எனவும் பரப்புரைப்படுத்தப்பட்டது.

அதற்குள் சூடுபிடித்த தேர்தல் பரப்புரையும் இதற்குக் காரம் சேர்த்திருந்தது. ஒரு தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டவுடனேயே நாட்டை முடக்கினார்கள். மாகாணம் விட்டு மாகாணம் செல்லும் பயணங்களைத் தடைசெய்தார்கள். நாடு முழுவதையும் தொற்றுநீக்கியால் கழுவியெடுத்தார்கள். இதனால் கொவிட் தொற்றின் முதல் அலை ஓய்ந்தது.

**இரண்டாம் அலை**

கொவிற் தொற்றின் இரண்டாம் அலை ஏற்பட்ட வேளையில் தேர்தல் முடிந்திருந்தது. எனவே அரசு இரண்டாம் அலை குறித்து அலட்டிக்கொள்ளவில்லை. இரண்டாம் அலைக்கு முதல் காரணியாக அமைந்த தனியார் ஆடைத் தொழிற்சாலையில் எப்படி தொற்று ஏற்பட்டது என்பதைக்கூட இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. தனி விசாரணைப் பிரிவெல்லாம் அமைக்கப்பட்டது.

மறுபக்கம் முன்னரைவிட மிக வீரியமாக தொற்றுப் பரவியது. பேலியகொட மீன் சந்தை மேல் மாகாணம் தாண்டியும் தொற்றைப் பரப்பியது. நாட்டை முடக்கவெல்லாம் முடியாது, உங்கள் பாதுகாப்பை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், பயங்கரவாதப் பிரச்சினைக்கு மட்டுமே நான் பொறுப்பு என்கிறது மாதிரியான அறிக்கையை அரசு படித்துக்காட்டிவிட்டது. அதற்கு அரச தரப்பில் சொல்லப்பட்ட உதாரணம்தான் ரணகளத்திலும் கிளுகிளுப்பானது. அதாவது கொவிட் தொற்றாளர்களைப் பராமரிக்கும் மருத்துவர்களுக்குத் தொற்று ஏற்படவில்லை, ஏனெனில் அவர்கள் அரசு சொல்லும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அதேபோல மக்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினால் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனச் சொன்னார்கள்.



இது நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை குறித்து அடிப்படை அறிவே இல்லாதவர்களின் புரிதல். ஒரு நாள் மட்டும் அணியக் கூடிய முகக்கவசத்தைத் தோய்த்து, காயவைத்து மாதக்கணக்கில் அணியும் நிலையில்தான் மக்களின் பொருளாதார நிலைமை காணப்படுகிறது. இந்நிலையில் மருத்துவர்களைப் போல மணிக்கொரு முகக்கவசம் மாற்றவும், தொற்றுநீக்கிகளைப் பயன்படுத்தவும் கூடிய வசதிவாய்ப்புக்களை நாட்டு மக்கள் எங்கனம் பெறுவது?

மிகவேகமாக அதிகரித்து வரும் கொவிட் தொற்றுக் குறித்து அரசு தரும் விதண்டாவாதமான பதில்களும், மெத்தனப்போக்கும் மக்களைப் பலியெடுக்கத் தொடங்கியிருக்கிறது. கொவிட் அலையை மறைக்க எதாவது "கொன்ரவேசியலை" உருவாக்கி அரசியல் செய்யவே அரசு முயற்சிக்கிறது.

றிசார்ட் பதியுதீன் கைது, சஹ்ரானின் மனைவிக்குக் கொவிட் தொற்று, கொவிட் தொற்றில் இறக்கும் முஸ்லிம்களின் உடல் தகன விவகாரம் என அனைத்தும் இந்தத் திசை திருப்பல் அரசியலுக்கே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு பொய்யை பொய்யால் மறைக்கத் தொடங்கி முழு நாடுமே பெரும் அபாயத்தை எதிர்கொள்ளப்போகும் நிலைதான் தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது.

இத்தாலி போன்றோ, அமெரிக்கா போன்றோ இந்த அலை மாறுமானால் இலங்கை ஈடு கொடுக்க முடியாத் நிலைமைக்குள் செல்லும். வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுமளவும் பொருளாதார ரீதியிலும்,. மருத்துவ ரீதியிலும் முன்னேற்றமில்லாத இந்நாடு பெரும் அழிவுப் பாதையையே தேர்ந்தெடுத்திருக்கின்றது. ஆகவே இந்த அபாயத்தை உணர்ந்த மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்து, பிறரையும் காப்பாற்ற உதவுவதுதான் அவர்கள் முன்பாக இருக்கும் ஒரே தெரிவு.

> "ஒரு பொய்யை பொய்யால் மறைக்கத் தொடங்கி முழு நாடுமே பெரும் அபாயத்தை எதிர்கொள்ளப்போகும் நிலை தான் தற்போது உருவாக்கப் பட்டிருக்கிறது."

## அமேசோன் எனும் பெருந்திரை!

*2006 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட அமேசோன் என்கிற இந்த இணையச் சேவை விரிவடைந்து பிரைம் சந்தாவின் வளர்ச்சியின் பின்னர் பிறைம் வீடியோ உறுப்பினர்களைச் சேர்த்தது. பின்னர் அது பல நாடுகளிலும் தனது சேவைகளை மேம்படுத்தி விரிவுபடுத்தியது. 2016ஆம் ஆண்டு டிசெம்பரில் பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், இந்தியா, அயர்லாந்து, இத்தாலி, ஸ்பெய்ன், போலந்து, பிரேசில் ஆகிய நாடுகளில் கால்பதித்தது.*

*2016ஆம் ஆண்டின் கடைசி மாதத்தில்தான் இந்தியாவில் கால்பதித்ததன்மூலம் அது எமக்கருகில் வந்தது. அது இந்தியாவில் கால்பதித்து நான்கு வருடங்களில் இந்தியாவின் முன்னணி ஸ்ட்ரீமிங் தளமாக அது வளர்ந்து நிற்கிறது. குறிப்பாக இந்தப் பெருந்தொற்று முடக்க காலத் தில் அனைத்து நாடுகளிலும் திடுதிப்பென வளர்ச்சி கண்டுள்ள இணைய நிறுவனங்களுக்க மத்தியில் அமேசோன் பிறைம் வீடியோ அதன் அடுத்த பாய்ச்சலுக்கும் தயாராகி வருவது தெரிகிறது. டிஸ்னி ஹொட்ஸ்டார் விளையாட்டுக் களங்களை அதிலும் குறிப்பாக கிரிக்கெட் - ஐ.பி.எல். உட்பட்ட பெரும்பாலான போட்டிகளை ஒளிபரப்பி வருகிறது. சில வெளிநாட்டுப் போட்டிகள் மட்டும் சொனி லிவ்வில் ஒளிபரப்பாகின்றன. இப்போது இந்தக் களத்தில் கால்பதிக்கத் தயாராகிவிட்டது அமேசான் பிறைம் வீடியோ. அது மேற்படி மற்றைய இரண்டு ஜாம்பவான்களுக்குப் போட்டியாகவும் அமையவிருக்கிறது. இதுவரைகாலமும் பல நாடுகளில் பிறைம் வீடியோவில் விளையாட்டுகள் நேரடி ஒளிபரப்பாக இருந்து வந்தாலும் நியூசிலாந்தில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கான உரிமத்தைப் பெற்று இந்தியாவில் முதல்முறையாக "லைவ் ஸ்போர்ட்ஸ்" பிரிவில் முதல்முறையாக அது ஒளிபரப்பவிருக்கிறது. இதற்காக நியூசிலாந்து கிரிக்கெட் வாரியத்துடன் ஒப்பந்தம் ஒன்றையும் அது போட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு முதல் 2025 - 26 சீசன் வரை அங்கு நடக்கும் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளையும் இனி அமேசோன் இந்தியாவில் தங்கள் தளத்தில் ஒளிபரப்பும். பெரும்பாலானவர்கள் பிறைம் வீடியோவுக்காகத்தான் பிறைமின் சந்தாவில் இணைகின்றனர். இனிவரும் இந்த 'லைவ் ஸ்போர்ட்ஸ்' இன்னும் அதிக சந்தாதாரர்களை பிறைமின் பக்கம் இழுத்துவரும் என நம்பலாம். திரைப்படங்கள், இணையத் தொடர்கள், விளையாட்டுகள் என எல்லை தாண்டித் தங்கள் தளத்தை விரிவுபடுத்த அமேசோன் தயாராக இருக்கிறது என்பது மட்டும் இதன் மூலம் தெளிவாகிறது!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக பரீட்சைப் பரிதாபங்கள்

● அன்னலிங்கம் ஆதிரையன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பரீட்சைகளை உரிய காலத்துக்குள் நடாத்தி முடிப்பதிலும், முடிக்கப்பட்ட பரீட்சை முடிவுகளை வெளியிடுவதிலும் காணப்பட்ட குறைபாடுகள் முறைகேடுகளை ஒவ்வொன்றாக ஆராய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட குழு பலவற்றையும் கண்டறிந்துள்ளது. எனினும் தோல் இருக்கச் சுளை விழுங்கும் பலர் இன்னமும் நிர்வாகத்தின் கழுகுப் பார்வைக்குள் அகப்படாமல் இருப்பது ஆச்சரியத்தைத் தர வைக்கிறது என்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளுக்குத் தண்டனை வழங்குவது இப்போதைய நிர்வாகத்தின் நோக்கமல்ல. எனினும் தவறுகளை ஆய்ந்தறிந்து, இனிவரும் காலங்களில் அத்தகைய தவறுகள் இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்பதே நோக்கம் என்கின்றன நிர்வாக வட்டாரங்கள். தற்போதைய துணைவேந்தர் பதவிக்கு வந்த பின்னர், அடையாளம் காணப்பட்ட பல பரீட்சை முறைகேடுகள் பற்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டிருக்கின்றன என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளில் பெரும் பங்கு கலைப் பீடத்துக்கே உரியது. அத்தகைய முறைகேடுகள் - சம்பவங்கள் பற்றிக் காலத்துக்குக் காலம் தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், இவ்வளவு நாளும் இருந்த நிர்வாகங்கள் இத்தகைய பரீட்சை விதிமீறல்களைக் கண்டும் காணாமலும் இருந்துள்ளனவாம். அவற்றை மூடி மறைப்பதற்கு முயன்ற நிலையில், இப்போது அவை வெளிவந்திருக்கின்றன. பரீட்சைகளில் மட்டுமல்லாது நியமனங்களிலும் பல ஒழுங்கீனங்கள் இடம்பெற்றமையும் தெரியவந்திருக்கின்றது.

**தவறுகள் என்ன?**

கடந்த காலங்களைச் சொல்லிக் கொடுக்கும் துறை ஒன்றில் இறுதியாண்டு மாணவர்கள் பலரது விடைத்தாள்கள் காணாமல்போயிருக்கின்றன. அவற்றைக் கண்டு பிடிக்கும் வழி எதுவும் தெரியாத துறைத் தலைவர் மாணவர்களுக்கு தன்பாட்டில் புள்ளியிட முனைந்தமை வெளிவந்ததை அடுத்து, அதற்கான விசாரணைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோலவே, பரீட்சை ஒன்றில், வினாத்தாளுக்குப் புள்ளியிட்ட முறையில் ஏற்பட்ட தவறும் சுட்டிக்காட்டப்பட்டி ருக்கிறது. வழங்கப்பட்ட ஐந்து வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தால்போதும் என்ற வழிகாட்டலுக்கமைய மாணவர்கள் விடையளித்திருக்க, மதிப்பீட்டின்போது, ஐந்து வினாக்களின் அடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. இதனால் பரீட்சைக்குத் தோற்றிய அத்தனை மாணவர்களும் அரைவாசிக்கு அண்மித்த சராசரிப்புள்ளிகளையே பெற்றுக்கொண்டனர். மிகத் தாமதமாகவே, முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னரே இந்தத் தவறு அவதானிக்கப்பட்டு புள்ளியிடல் முறைமை மீளாய்வு செய்யப்பட்டிருக்கிறது.

இவையனைத்தும் மாணவர்களின் கல்வியில் குறித்த விரிவுரையாளர்கள் எவ்வளவு அக்கறையாக இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டான சம்பவங்களாகும். விரிவுரையாளர்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாகவே - ஏனோ தானோ என்ற மனப்பாங்கினாலேயே விடைத்தாள்களைக் கவனமாகக் கையாள முடியாமல் போயிருக்கிறது.

இதேபோல, தாய் மொழித் துறையில் பல விதமான விடைத் தாளுக்கு மேலதிகமான பலவும் புள்ளிகளைத் தீர்மானிப்பதான குற்றச்சாட்டுத் தொடர்பிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அந்தந்தத் துறைத் தலைவர்கள் இத்தகைய விடயங்களில் கண்ணுக்குள் எண்ணையை விட்டுப் பார்த்திருந்தாலும், அந்த விடயத்தில் மன்னர்களான விரிவுரையாளர்கள் தமக்கு வேண்டியவர்களுக்குப் புள்ளிகளை அதிமாகப் போடுவதும், தம்மைக் கவனிக்காதவர்களுக்குப் புள்ளிகளைக் குறைத்துப் போடுவதும் வழக்கமாக இருந்து வந்துள்ள குற்றச்சாட்டுப் பலமாக எழுப்பப்பட்டுள்ளது.

> **தோல் இருக்கச் சுளை விழுங்கும் பலர் இன்னமும் நிர்வாகத்தின் கழுகுப் பார்வைக்குள் அகப்படாமல் இருப்பது ஆச்சரியத்தைத் தர வைக்கிறது என்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.**

அதேபோலவே பரீட்சைக்கான வினாத் தாள்களைத் தயாரிக்கும் ஒரு சிலர் தங்களுக்குத் தேவையானவர்களுக்கு மட்டும் தாராளமாக நடந்து கொள்கின்றனர் என்பது மாணவர் தரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் ஒன்று. விரிவுரையாளர்களுக்கு இசைந்து போகும் இளசுகளுக்குக் கிட்டத்தட்ட விடைத்தாள்கள் முற்கூட்டியே கிடைத்துவிடும் என்று சொல்கிறார்கள் அவர்கள்.

விஞ்ஞான பீடத்தில் இத்தகைய சம்பவங்கள் ஒப்பீட்டளவில் குறைந்திருந்தாலும், முகமன் பார்க்கும் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று சொல்லப்படுகிறது. விஞ்ஞான பீடத்தைப் பொறுத்தமட்டில் செயன்முறைப் பரீட்சைகள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. செயன்முறைப் பரீட்சைகளின்போது பார்த்துப் பாராமல் புள்ளியிடும் கைங்கரியங்கள் பல இடம்பெற்றுள்ளன. கலைப் பீடத்தைப் போலவே ஒரு சிலர் விடைத்தாள்களைத் தவறவிடுவதும், தமக்குக் கிடைத்த செயன்முறைப் புள்ளிகளைத் தவறவிடுவதும் இங்கும் சகஜமானவை எனப்படுகிறது.

இவையனைத்தும் பரீட்சை குறித்த பொறுப்பின்மையினாலும், கவனக்குறைவினாலுமே ஏற்படுகின்றன. விரிவுரையாளர்களின் மெத்தனப் போக்கு ஒரு புறமிருக்க, பரீட்சை தொடர்பில் பணியாற்றும் அதிகாரிகளும் அவர்களைக் கேள்வி கேட்க முடியாத நிலை இருந்ததனாலேயே இத்தகைய நிலைமைகள் தோன்றியிருக்கின்றன என்று விரிவுரையாளர்கள் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தற்போது பேரவையினால் அறிவிக்கப்பட்டிருக்கும் பொறிமுறையாவது இவர்கள் அனைவரையும் பொறுப்புள்ளவர்களாக மாற்றும் என்று நம்புவோமாக! ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிலமிழக்கும் தமிழர்கள்...!

● வி.அருணாசலம்

அரச காணிகள், தனியார் காணிகள், விவசாய நிலங்கள், கைவிடப்பட்டு - பராமரிப்பாளர்களற்ற காணிகள், கரையோர நிலங்கள் மற்றும் மீன்பிடிக் கரைகள் எனப் பல காணித் துண்டங்களையும் அளவிடுகின்ற நடவடிக்கைகளைப் புதிய அரசு முன்னெடுக்கத் தொடங்கிவிட்டதான செய்திகள் வருகின்றன. ரணில் - மைத்திரி கூட்டு அரசின் காலத்தில் கொஞ்சம் தணிந்திருந்த இந்த நடவடிக்கை இப்போது மீண்டும் வீரியம் பெற்றுள்ளது போன்று தோன்றுகின்றது.

மறுபுறம் விவசாய மற்றும் கைத்தொழில் முயற்சிகளுக்குக் காணி தேவையாகவுள்ள இளையோர், தொழில் முனைவோர்களை அதற்காக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும் செய்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்க, திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரச அலுவலர் ஒருவர், திருகோணமலை சிங்களவரின் கைகளுக்கு மாறியதற்குத் தமிழ் அதிகாரிகளும், தமிழ் அரசியல்வாதிகளுமே காரணம் என்று சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது. "திருகோணமலைத் துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள், ஏனைய சிறு தொழில் புரிவோர்கள் என அதிக மக்கள் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்குக் குடும்பத்துக்கு நான்கு பரப்புக் காணி வழங்கியிருந்தால் கூட அவர்கள் அங்கு பலப்பட்டிருப்பார்கள். அவர்களின் சந்ததி நிலைத்திருக்கும். அவர்களுக்கு காணிகளை வழங்கி நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிடக்கூடாது என்பதில் மேட்டுக்குடி அரச அதிபர்களும், காணி சார்ந்த ஏனைய உயரதிகாரிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் இணைந்து செயற்பட்டதால் அந்த மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்." என்று மேலும் தெரிவித்துள்ளார் அவர். இதனால்தான் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களுக்குச் சொந்தமாக ஒரு துண்டு நிலம் கூட அங்கு இல்லாது போயிற்று.

### கிளிநொச்சியிலும் அதே நிலை

திருகோணமலையைப் போன்றதொரு நிலையே கிளிநொச்சியிலும் ஏனைய குடியேற்றப்பட்ட பகுதிகளிலும் காணப்படுகிறது. திருவையாறு, விசுவமடு விவசாயத் திட்டங்கள், யாழ்ப்பாணத்து விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. அதில் பெரும்பாலும் 2 ஏக்கர் காணிகள் அவர்களுக்குக் கிடைத்தன. ஆனால் சட்டத்தரணிகள் வைத்தியர்கள் மற்றும் உயர் பதவியில் இருந்தவர்களுக்கும் மத்திய தர வர்க்கத்துக்கான காணி வழங்கல் என்ற பெயரில் விவசாயமே செய்யாத மேட்டுக்குடியினர் சிலரும் அதில் தமக்கும் காணி பிடித்துக் கொண்டார்கள்.

அதேவேளை 1977 - 1983 காலப்பகுதியில் கிளிநொச்சிக்கு வந்த மலையக மக்களுக்கு இவ்வாறான வளமான காணிகள் (நீர்ப்பாசனத்தடன் கூடிய) வழங்கப்படவில்லை. அந்த மக்களை மத்தியதர வர்க்கத்தினரின் காணிகளில் கூலிகளாக வைத்திருந்தார்கள். ஏற்கனவே கூலிகளாக மலையகத்தில் ஒடுக்கப்பட்டட மக்கள் மீண்டும் ஒடுக்கப்பட்டனர். காணிகளைத் தம்வசப்படுத்திய மத்திய தர வர்க்க மேட்டுக்குடியினர் 1983இன் பின் நாட்டைவிட்டு ஓடிவிட ஏழை மக்கள் மட்டுமே மண்ணின் மைந்தர்கள் என்ற பெயரில் போருக்கும், இடப்பெயர்வுக்கும், இழப்புகளுக்கும் முகம் கொடுத்துக் கடைசியில் ஒரு துண்டு காணியும் இல்லாமல் வாழ்கின்றனர்.

### பெருமைபேசும் பண்ணையர்கள்

எனது அம்மாவின் உறவுக்காரர் இருவருக்கு ஒலுமடுவிலும் (பாலரட்ணம்) கேப்பாபிலவு கொண்டைமடு வீதியில் (சோமசுந்தரம்) பத்து ஏக்கர் பண்ணைக் காணிகள் உண்டு. இவ்விருவரும் ஒருபோதும் விவசாயம் செய்து அனுபவம் உள்ளவர்கள் அல்லர். தமக்குப் பத்து ஏக்கர் பண்ணையுண்டு என்று பெருமை பேசுபவர்கள்.

1983இன் பின் இவர்கள் குடும்பமாக வெளிநாடு சென்றுவிட்டனர். இவர்களின் நோக்கம் பண்ணை வைப்பது அல்ல. காணி பிடிப்பது. இவ்வாறான சிலர் 2006இன் பின் முகமாலையில் ஏ9 வீதி மூடப்பட்டதன் பின்னர் வவுனியா, கொழும்பு, இந்தியா, வெளிநாடுகள் என ஓடித் தப்பினர். 2009இல் போர் முடிந்து மீள்குடியேற்றம் நடந்தபோது தமது காணிகளை அவர்கள் மீளவும் கையகப்படுத்திக்கொண்டார்கள்.



**அஷ்ரப் தீகவாபி விகாரைக் காணிகளையே தமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் அளவுக்கு முன்னேறியிருந்தார்.**

இவ்வாறான மத்தியதர வர்க்கத்தினர் விட்டுச் சென்ற காணிகளில் ஒரு காலத்தில் பல குடும்பங்களைப் புலிகள் குடியேற்றினார்கள். அக்காணிகளைப் பெற்ற மக்கள் தென்னை, மா, பலா எனப் பயன்தரு மரங்களை நாட்டி வளர்த்து வந்தார்கள். போர் முடிவுற்றதும் வெளிநாடுகளில் இருந்து வந்து குதித்த காணிச் சொந்தக்காரர்கள் அந்தக் குடும்பங்களை வெளியேறுமாறு கோரி வருகின்றனர்.

சில காணிச் சொந்தக்காரர்கள் குடியேறியுள்ள மக்களிடம் பணம் பெற்றும், சிலர் தமது காணிகளை நன்கொடையாகவும் குடியிருந்த மக்களுக்கு வழங்கிய சம்பவங்களும் உள்ளன. ஆனால் அதிகமானவர்கள் தமது காணிகளைத் திருப்பிக் கேட்கிறார்கள்.

### தேச வழமைச்சட்டத்தின் நோக்கம்

தற்போது வட மாகாணத்தில் காணியற்ற மக்கள் அதிகம்பேர் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலுள்ள தேச வழமைச்சட்டம் வேளாளர்களைக் காணி உடமையாளர்களாக மாற்றுவதற்குக் காரணமாக இருந்தது. இது பற்றி "கேரள டயர்ஸ்" என்ற நூலில் அருளினியன் இவ்வாறு குறிப்பிடுகிறார், "யாழ்ப்பாணத்து வெள்ளாள முதலிகள் 12 பேரின் உதவியுடன் 1707ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தச் சட்டம் வேளாளருக்கு எல்லையில்லாத அதிகாரங்களை வழங்கி அவர்களைச் சாதியின் உச்சத்தில் நிறுத்தியது" மேலும், "யாழ்ப்பாண நிலங்கள் எல்லாம் ஆண்டாண்டு காலமாக வெள்ளாள நிலச்சுவாந்தர்களிடமே இருந்தன. இந்த நிலங்கள் வெள்ளாளரிடமிருந்து கைமாறிப்போகாமலிருப்பதைத் தேச வழமைச்சட்டம் பல வழிகளில் உறுதி செய்தது. தேச வழமையின்படி முதுசெம், சீதனம், தேடிய தேட்டம், உரிமை என்ற நான்கு கூறுகளும் யாழ்ப்பாணத்து நிலங்கள் மரபு வழியாக வேளாளரிடம் இருப்பதை உறுதி செய்கின்றன. இவற்றையாவது மரபு வழி வந்த நிலங்கள் அடுத்த மரபு வழி வந்த சொந்தங்களுக்குச் செல்கின்றன எனக் கொள்ளலாம். ஆனால், முன்னுரிமைச் சட்டம் என்ற தேசவழமையின் கூறுகளில் ஒன்று நிலச்சுவாந்தர்களான வேளாளர்கள் தங்களது காணிகளை வெளியாட்களுக்கு விற்கும்போது அது மீண்டும் வெள்ளாள சாதிக்கே கிடைப்பதை உறுதி செய்கிறது" என முடிக்கிறார் அருளினியன்.

நல்ல வளமான வெள்ளம் ஏறாத நிலங்களை வேளாளர் தம் வசம் வைத்துக்கொண்டு தாழ் நிலங்கள், உவர் நிலங்கள், தரிசு நிலங்கள், சுண்ணாம்புப் பாறைகள் உள்ள கலட்டிக் காணிகளை ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தள்ளிவிட்டார்கள். பின்னாள்களில் இலங்கை அரசின் அபிவிருத்தி நடவடிக்கையின்போது விவசாயம் செய்ய முடியாத இந்தக் காணிகள் பிரதான வீதிகளுக்கு அருகிலும் முக்கிய பொருளாதார மையங்களுக்கு அருகிலும் பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அருகிலும் இருப்பதால் பெறுமதியாகிவிட்டன.

### காணி பிடிக்கும் தந்திரம்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடந்தபோது வெலிஓயாவைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒரு கருத்தைச் சிங்க மக்களிடம் முன்வைத்தார். "நாம் எல்லைகளை நோக்கி நகராவிட்டால் எல்லைகள் எம்மை நோக்கி நகர்ந்துவிடும்" என்றார். இப்படியிருக்க இங்கோ தமிழர்கள் பலர் நாட்டை விட்டே ஓடிப்போனார்கள். தமிழ் அரசியல்வாதிகள் தாம் காணிகளைக் கையகப்படுத்த முனைந்தார்களே தவிர மக்களுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை.

### முஸ்லிம் தலைவர்களின் கரிசனை

எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களுக்குக் காணிகள்

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரரைப் போற்று : திரைப் பார்வை

தங்கு தடை எல்லாம் தாண்டி, தீபாவளிக் கொண்டாட்டமாக வந்திருக்கிறது சூரியாவின் சூரரரைப் போற்று திரைப்படம். வானூர்தி நிலையங்கள், வானூர்திகள் எல்லாம் வாடகைக்கு எடுத்து பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட்டது என்கிற கதையாடல்களின் மத்தியில் அமேசான் பிறைம் இணையத் தளத்தின் ஊடாக வெளிவந்திருக்கிறது.

இணையத் தளம் வாயிலாகப் பணம் கொடுத்து இந்தப் படத்தைப் பார்க்கலாம். கன்னடரான கொரூர் ராமசுவாமி ஐயங்கார் கோபிநாத் என்பவரின் சுயசரிதத்தில் இருந்து தயாரிக்கப்பட்டது இந்தப் படம்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வான் பயணங்களைச் சாதாரண மக்களுக்கும் சாத்தியமாக்கும் நோக்கத்துடன் கோபிநாத் ஏயார் டெக்கான் வானூர்தி நிறுவனத்தைத் தொடக்குவதற்கான போராட்டம்தான் இந்தக் கதை.

இறுதிச் சுற்று என்கிற வெற்றிப் படத்தை இயக்கிய சுதா கொங்கரா இந்தப் படத்தையும் திரைக் கதை அமைத்து இயக்கியிருக்கிறார். சூர்யா, கேரள நடிகையான அபர்னா பால முரளி, ஊர்வசி, தெலுங்கு நட்சத்திரம் மோகன் பாபு, ஹிந்தி நடிகர்களான ஜாக்கி ஷெராப் மற்றும் பரீஷ் ராவல் என்று படத்தில் பெரும் நட்சத்திரப் பட்டாளமே உண்டு.

கோபிநாத் பிறந் தது என் னவோ தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் அவரது தந்தையார் பாடசாலை ஆசிரியராக இருந்ததுடன்



கன்னட எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.

இந்தியத் தரைப்படையில் இணைந்து கப்டன் தரத்திற்கு உயர்ந்தவர். பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷைப் பிரிப்பதற்கு நடந்த சண்டையில் இந்தியப் படையில் பங்கெடுத்தவர். படையில் இருந்து முன்கூட்டியே ஓய்வு பெற்றுக்கொண்டு வந்த அவர் குறைந்த கட்டணத்தில் அனைத்து மக்களுக்குமான வான் பயணம் என்ற நோக்கத்துடன் தொடங்கியது தான் ஏயார் டெக்கான்.

அந்தப் பயணத்தை அவர் ஏன் தொடங்கினார், அதை அடைவதற்கு அவர் பட்ட துன்பங்கள், தாண்டிய தடைகள் என்பவற்றை வரிசையாக விவரிப்பதுதான் சூரரைப் போற்று.

கோபிநாத்தின் 'சிம்ளி பிளை: டெக்கான் ஒடிஸி' என்கிற சுயசரிதை நூலினைத் திரைப்படமாக்கும் உரிமையைப் பெற்றுத்தான் சுதா இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார் என்றாலும், சுயசரிதத்தினை அவர் அப்படியே எடுத்து விடவில்லை.

இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஒரு தொழில்முனைவோனின் வெற்றிகரமான போராட்டமாகவே திரைக் கதை நகர்த்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அடுத்தடுத்து ஒரு மனிதன் எவ்வளவு துயரங்களை எதிர்கொள்ள முடியும் என்று ஆச்சரியப்படுத்தும் வகையில் சவால்களும், தடைகளும், தடங்கல்களும் மூச்சுவிட முடியாதளவிற்கு வரிசை கட்டி நிற்கின்றன படத்தில்.

எல்லாச் சவால்களையும் முறியடித்து, வானோடி பெரு நிறுவனங்களுக்கெல்லாம் சவால் விடுத்து டெக்கான் ஏயார் பறக்கத் தொடங்குவதுடன் படம் நிறைவடைகிறது. ஆனால், கோபிநாத்தின் உண்மைக் கதையில் ஏயார் டெக்கான் பின்னர் விஜய் மல்லையாவின் கிங்பிஷர் நிறுவனத்திடம் விற்கப்பட்டுவிட்டது. படத்தில் விஜய் மல்லையா கேட்ட போதெல்லாம் அதை விற்க மறுத்துவிட்டதாகவே உணர்ச்சியூட்டும் காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளன.



அளவுக்கு மீறிய உணர்ச்சிகளின் கொந்தளிப்பாகவே திரைக் கதை நகர்த்தப்படுகின்றது. இயக்குநர் சுதா சொன்னதைப் போலவே, உண்மைக் காட்சிகளை திரைக் கதைக்காக நாடகப் பாணியாக்கியிருந்தாலும் அவை பல இடங்களில் அளவுக்கு மீறியிருக்கின்றன. பணம் இல்லை என்று தவித்து நிற்கும் போது கிராமத்து மக்கள் பணம் அனுப்பி வைத்து விட்டு தொலைபேசியில் பேசுவது, அப்பா இறந்த பின்னர் அவர் எழுதிய கடிதங்களைப் படிப்பது என்று அளவுக்கு மீறி உணர்ச்சிகளை வடிய விட்டிருக்கும் காட்சிகளைக் குறைத்திருந்தால் படம் இன்னும் நம்பகத் தன்மையுடையதாக இருந்திருக்கும்.


படத்தில் சூர்யாவின் நடிப்பை இயக்குநர் பல நேர்காணல்களில் புகழ்ந்து தள்ளியிருப்பார். படத்தில் சூர்யாவைப் பார்க்க முடியாது மாறாவையே (படத்தில் சூர்யாவின் பெயர்) பார்க்க முடியும் என்றெல்லாம் சொல்லியிருப்பார். ஆனால், அப்படித் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுமளவிற்கெல்லாம் சூர்யாவின் நடிப்பைக் காண முடியவில்லை. பல இடங்களிலும் மாறாவை விடச் சூர்யாவே கண்ணுக்குள் துருத்துகின்றார்.

படத்தில் நடித்த இருவர் மிகச் சிறப்பான நடிப்பைக் கொட்டியிருக்கிறார்கள். ஒருவர் ஊர்வசி. மற்றவர் ஹிந்தி நடிகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பரிஷ் ராவல்.

நம்பிகை தரக்கூடிய திரைக்கதை, போராட்டக் கதைக்களம் என்று நிச்சயம் ஒரு தடவை பார்க்கவேண்டிய படம்தான் சூரரைப் போற்று.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கப்டன் கோபிநாத் டெக்கான் ஏயார் நிறுவனத்தைத் தொடக்க முன்னர் தொடங்கிய டெக்கான் ஹெலிக் கொப்டேர்ஸ் நிறுவனம் இலங்கையிலும் பல அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மீட்புப் பணிகளிலும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது என்கிறது விக்கிபீடியா தளம். எந்த வகையான மீட்புப் பணிகள் என்பதை அது சொல்லவில்லை.

**விமர்சனம் செம்மண் குழு**




## எழுத்துக்கு எழுந்த எதிர்ப்பு...?

*இந்தியாவின் மத்திய மாநிலங்களின் பெருங் காட்டுப் பகுதிகளில் மவோயிஸ்ட்கள் எனப்படுகின்ற போராட்டக் காரர்களின் ஆதிக்கம் இருந்து வருகிறது. அவர்களைப் பயங்கரவாதிகள் என்று இந்திய அரசு சுட்டுகிறது. 2010ஆம் ஆண்டு அந்தக் காட்டுப் பகுதிகளுக்குச் சென்ற இந்தியப் பெண் எழுத்தாளர் அருந்ததி ராய், மாவோயிஸ்ட்டுகளின் அனுபவத்தையும் ஆயுதம் ஏந்துவதற்கு அவர்கள் சொன்ன காரணங்களையும் தொகுத்து புத்தகமாக எழுதினார். 2011ஆம் ஆண்டில் வெளியான அந்தப் புத்தகம், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் முதுகலை ஆங்கில மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் 2017ஆம் ஆண்டில் இடம்பெற்றது. இப்போது அதற்கு எதிர்ப்பு எழுந்து பாடத்திட்டதிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய புத்தகம் படத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டது குறித்துக் கேட்டபோது, கவலையைவிட மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால், அது பாடத் திட்டத்தில் இடம்பெற்றதே எனக்குத் தெரியாது. இத்தனை ஆண்டுகளாக அது கற்பிக்கப்பட்டது சந்தோஷம்தான். அது நீக்கப்பட்டிருப்பது குறித்து எனக்கு பெரிய அதிர்ச்சியோ ஆச்சரியமோ இல்லை. ஒரு எழுத்தாளராக எழுதுவது மட்டும்தான் என் வேலை. பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இடம்பெறுவதற்காக போராடுவது என் வேலையில்லை என்று கூறியிருக்கிறார் அருந்ததி ராய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

6

வழிகாட்டல் என்பது ஒருவனைத் தான் சார்ந்தும் தனது சமூகம் சார்ந்தும் உடல், உள ஆரோக்கியத்துடனான பயனுறுதிப்பாடுடைய ஒரு வாழ்வை வாழ்வதற்காக அவனுக்கு வெளியேயிருந்து வழங்கப்படுகின்ற ஊக்கவிசை அல்லது ஊக்குவிப்பு எனக்கொள்ளமுடியும்.

இங்கு வழங்குவோனதும் பெறுவோனதும் தேவைகளின்பால் எழுகின்ற உள வெளிப்பாட்டிற் கமைய நேர் - மறை விளைவுகளாகப் பெறுதிகள் அமையும் என்பது கவனிக்க வேண்டியதொன்று.

இந்த ஓர் அறிமுகத்துடன்தான் வழிகாட்டல் தொடர்பான பார்வைகள் உள்ளனவா? இந்த வினா மூலமாக எமக்கு நாமே விடை தேட வேண்டியுள்ளது.

எமது சூழலில் வழிகாட்டுதல் என்பது பல விதங்களில் உள்ளது. எல்லா விடயங்களுக்குமே மதத்தலைவர்கள், மூத்தவர்கள், படித்தவர்கள், பதவியிலுள்ளவர்கள், அனுபவசாலிகள் (ஊரடிபட்டவர்கள்) என்று ஏராளம் பேர் பிறப்பு முதல் இறப்பு வரை வழிகாட்டுதல் அல்லது வழிப்படுத்துதல் வழங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.


இதுவும்கூட முறைசார் வழிப்படுத்தல் என்றும் முறையில் வழிப்படுத்தல் என்றும் நோக்கத்தக்கதாகவே இருக்கிறது. இவ்வகைகள் ஒவ்வொன்றும் சாதக பாதக விளைவுகளைத் தந்தவண்ணமுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

முறையில் வழிப்படுத்தலெனப் பண்பாடுசார், தொழில் முயற்சிசார் பிரயோகங்கள் வழியாகத் தலைமுறைகளுக்கூடாகப் பிரயோகம் அல்லது புழக்கம் எனும் விதமாகக் கடத்தப்படுகின்ற விடயங்களை உதாரணம் கொள்ளமுடியும். இதனூடாக சடங்குகள் உறவுமுறைகள் போன்ற விடயங்கள் மட்டுமன்றித் தொழில்சார் நுட்பங்களும் முன்னைய காலங்களில் சரியான முறையில் செயற்பாடுகளுக்கூடாக இயல்பாக அதாவது வாழ்க்கை என்பதன் ஓர் அங்கமாகப் பயிலப்பட்டு வந்தன.

சமூகம் கட்டுக்கோப்போடு முன்னகர்ந்தது. ஆனால் சில புறநடைப்பட்ட விடயங்களாகப் புகை - மதுப் பழக்கங்கள், பாலியல் தொழில், சண்டை சச்சரவுகள், சாதிப் பிரிவினைகள் என இருந்தே வந்துள்ளன. அவைகூடத் தவறான முன்னுதாரணமாகப் பின்பற்றப்பட்டிருந்தமையையும் காணமுடியும். எனினும் அவை விலக்கப்பட்டவை அல்லது தீயவை எனும் குற்றஉணர்வோடுதான் இருந்துள்ளன.

இன்றுள்ள சூழலானது முறையில் கல்விபோன்றே மறுக்கப்படுகின்ற ஒன்றாகவே வழிகாட்டலும் அமைந்துள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் குறுக்கப்பட்ட உலகில் ஒரே வீட்டினுள்ளேயே மிகத் தூரமாக வாழும் நிலைமையே உள்ளது என்பதை எத்தனை பேர் மனதார உணர்ந்திருக்கிறோம்?

இந்த நிலையில் எமது நேரடித் தொடர்புறவைப் பிரித்து வைத்திருக்கும் அதே தொழில்நுட்பம் எத்தனையோ வகைப்பட்ட தவறான உதாரணங்களை முன்வைத்திருக்கிறது என்பது தொடர்பான விழிப்புநிலை எம்மிடம் எந்தளவிற்கு உள்ளது என்பது விடைகாணமுடியா வினாவாகவே துருத்திக்கொண்டிருக்கிறது என்பதையாவது உணர்ந்துள்ளோமா?




அறிவியல் வளர்ச்சி உலகோடு ஒத்தோடுதல் என்று ஓடிக் காணாமலாகிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணரவைத்த ஒரு வழிகாட்டியாக நிச்சயம் நாம் கொவிட-19ஐக் கொண்டாட முடியும் என்கின்ற ஒரு கூற்று மறுதலிக்கமுடியாதளவிற்கு வலு வானதே.

நாம் வியந்து கொண்டாடிப் பின்பற்ற முனைந்த அத்தனையாலும் கொவிட்-19ஐக் கட்டுப்படுத்தவோ எம்மைப் பாதுகாக்கவோ முடியவில்லை என்பதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வோமா? அதை விடுத்து கொவிட்-19 உடன் வாழப்பழகி இன்னுமொரு வைரசுக்குப் உயிரைக் கொடுப்போமா? வழிகாட்டல் பிழைத்துப் போனதன் ஒரு விளைவாகக்கூட இது இருக்கலாமல்லவா?

முறையில் வழிப்படுத்தல் மறக்கடிக்கப்பட்ட அல்லது வலிந்து மறைக்கப்பட்டிருக்கின்ற இன்றைய சூழலில் முறைசார் வழிப்படுத்தலின் நிலை என்ன? வழிப்படுத்தலை வழங்குவோர் யார்? ஆர்களின் நிலை என்ன? எப்படி அல்லது எவ்வாறு வழிப்படுத்தல் நடைபெறுகிறது? இப்படியாக நீளும் வினாக்களிற்குப் பொருத்தமான, யதார்த்தமான விடைகளைத் தேடவும் அவை பற்றிச் சட்டகங்களுக்கப் பால் நின்று யதார்த்தமாகச் சிந்திக்க வும் செயலாற்றவும் எத்தனை பேர் தயார்?

முறைசார் வழிப்படுத்துதல் எனும்போது உளம் சார்ந்தும் தொழிலுலகு சார்ந்தும் பயிற்றப்பட்ட ஒரு தொகுதியினரால் வழங்கப்படும் வாழ்க்கை முற்னேற்றத்திற்கான (உள - உடல் தேவைகளை நிறைவு செய்தல்) பொறிமுறைகள் தொடர்பான ஊக்குவிப்பு எனக்கொள்ள முடியும். இதிலும் வழங்குநர் - பெறுனரினது உள - உடல் தேவைகளின்பால் எழும் உளவெளிப்பாடுகளும் ஏற்கனவே கொண்டிருக்கும் புரிதல், அறிதல் சார்ந்தும் பெறுதிகள் சாதகமாகவோ பாதகமாகவோ அமைகின்றன.

சாதக விளைவு அல்லது பெறுதியைப் பெறுதல் என்பது வெறுமனே வழிப்படுத்துவோன் பெறுவோனோடு மட்டும் தொடர்புடைய ஒரு விடயமல்ல என்பதைக் கவனத்திலெடுக்கின்றோமா? தனி மனிதன் அல்லது தனியன் என்று ஒருவன் (யதார்த்தத்தில்) உள்ளானா? ஒருவன் மீதான குடும்ப சமூக (நட்பு வட்டம் - கிராமம் - நாடு - உள்ளிட்ட) தொழிலுக ஆதிக்கம் அல்லது செல்வாக்குத் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றனவா?

இங்கே வழிப்படுத்தல் அவசியமாகத் தேவைப்படும் இடம் அல்லது இடங்கள் (உளம் மற்றும் உலகு சார்ந்தவை) சரியான பொருத்தப்பாடுடைய முறையில் அடையாளப்படத்தப்பட்டுள்ளனவா என்பதிலிருந்து வழங்கப்படும் வழிப்படுத்தல்கள் விடயங்கள் பொருத்தமுடையனவா? அவசியமானவை தானா? வழங்கப்படும் முறைகள் பொருத்தமானவையா? நீளும் வினாக்களிற்கு விடைகாணாமல் செய்யப்பட்டன, செய்யப்படுகின்றன. இனிமேலும் செய்யப்படும் என அறிக்கைகளோடு திருப்திப்பட்டுக்கொள்ளலாமா?


(தொடரும்)

## ஒளிரும் ஆபத்து!

பூமியின் துணைக்கோளான நிலவே ஒளிவீசும் தன்மையுடையது என்று இதுவரை இருந்து வந்த கருத்தை வியாழனின் துணைக்கோள் ஒன்று மாற்றியமைத்துள்ளது. வியாழனின் துணைக்கோள்களில் ஒன்று இரவில் சிறியளவு பிரகாசத்துடன் தென்படுகிறது. வியாழக் கோளுக்கு இருக்கின்ற 66 துணைக்கோள்களில் ஒன்றான யூரோப்பாவே (ஐரோப்பா) இவ்வாறு பிரகாசிக்கிறது.

குறித்த துணைக்கோளில் படிந்துள்ள பனிதான் அதற்கு இந்த ஒளியைக் கொடுக்கிறது என்று கருதப்படுகிறது. பச்சை அல்லது நீல நிற வெளிர் பிரகாசமாக அந்தத் துணைக்கோள் காட்சியளிக்கிறது. அதன் மேற்பரப்பில் இருப்பதாகக் கருதப்படும் பல்வேறு வகையான உப்புகளுடன் கூடிய பனியே இவ்வாறு பளபளப்பான வண்ணங்களாகக் காட்சியளிக்கிறது. இரவில் பிரகாசமாகத் தெரிகின்ற பூமியின் துணைக்கோளான சந்திரனைப்போல பிரகாசிக்கின்ற இந்த வியாழனின் துணைக்கோள் ஆச்சரியத்துக்குரியதாகப் பார்க்கப்படுகிறது.

இந்த ஒளிர்வு குறித்து அறிந்துள்ள நிலையில், அடுத்த சில ஆண்டுகளில் யூரோப்பாவை நெருங்கிச் சென்று ஆராய்வதற்கு நாசா திட்டமிட்டுள்ளது. பூமியின் வளிமண்டலமும் காந்த ஈர்ப்பலைகளும் உள்வரும் கதிர்வீச்சிலிருந்து பூமியைப் பாதுகாக்கின்றன. இதனால் ஒளிரும் தன்மை இல்லை என்று குறிப்பிடுகின்ற ஆராய்ச்சியாளர்கள், இதற்கு நேர்மாறாக, யூரோப்பாவுக்கு வளிமண்டலம் இல்லை, வியாழனின் கடுமையான மற்றும் மகத்தான காந்தப்புலத்திலிருந்து வரும் கதிர்வீச்சின் சிக்கலில் அது சிக்கியுள்ளது. அழகாகப் பிரகாசிக்கின்ற அந்தத் துணைக்கோளில் பாதுகாப்பற்ற நிலையில் யாராவது நின்றால் இறப்பு நேரிடுமாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஏன் இப்படிச் செய்கிறாள்?

● இணுவையூர் சிதம்பர பாரதி

சில்லென்ற காற்று .... வானத்து நிலா..... ரம்மியமான சூழல் ஆனால் மலரின் மனம் எதிலுமே லயிக்கவில்லை. தொலைபேசியில் குறுஞ்செய்திக்கான பதில் வராத பதற்றம் அவளுள்... இத்தோடு ஒரு ஐம்பதுமுறை மன்னிப்புக் கேட்டிருப்பாள். ஆனால் லவனி அவளை மன்னிப்பதாக இல்லை 'லவனி' நல்ல நண்பி.

பல்கலைக்கழக ஆரம்ப நாட்களில் பெரிதாக நெருக்கம் இல்லை. சிறிது காலத்திலேயே மலரிற்கு ஏனோ அவளைப் பிடித்துப் போனதால் தானாகவே போய் ஒட்டிக் கொண்டாள். மலரது அன்பும் கரிசனமும் லவனியையும் மலர்பால் ஈர்த்தது. ஆரம்பகாலம் விடுதி வாழ்க்கை மலரோடு உறவானதால் அவளது நெருங்கிய தோழி அபியுடனும் லவனி நெருக்கமானாள்.

காலையில் அபி எழுந்து மலரை எழுப்புவாள். மலர் லவனியை எழுப்புவாள். லவனிக்குத் தேநீர் போடத் தெரியாது என்பதனால் மலர்தான் பழக்கினாள். ஆரம்பத்தில் மலர் போய் போட்டுக் கொடுப்பதும் உண்டு. பின்னர் லவனி தேநீர் போட நன்கு பழகிவிட்டாள்.

இப்படி விடுதிக் காலம் பெரிதாக எந்த ஊடலும் இன்றி சிறு வட்டத்திற்குள் மகிழ்வாய் போய்க்கொண்டிருந்தது. இரண்டாம் வருட ஆரம்பம் எல்லோரும் வாடகைக்கு வீடு பார்த்தாக வேண்டும் என்பதனால் அபியும் லவனியும் மலரோடு இன்னும் ஒன்பது பேர் சேர்ந்து வீடெடுத்துக் கொண்டார்கள். அதிலும் லவனி மலர் மற்றும் அபியோடு பள்ளிக்கால தோழி பானுவும் சேர்த்து நான்கு பேருக்கும் ஓர் அறை.

இரண்டு பெரிய கட்டில்கள் யார் யாரோடு எனும் குழப்பம் வருவதற்குள் மலராகவே கூறினாள் "நான் லவனியோடு" என்று. அவள் அவ்வாறு முடிவெடுக்கக் காரணம் தானும் அபியும் சேர்ந்தால் மற்றைய இருவரும் தம்மை விலக்கிவிட்டார்கள் என்று நினைத்து விடுவார்கள் என்பதே. தானும் அபியும் வேறு வேறு கட்டிலெனில் அந்தப் பிரச்சினை வராதென்று நினைத்தாள். ஆனால் அந்த முடிவு அபியை மிகவும் பாதித்தது என்பது நெடுநாட்களிற்குப் பின்பே மலருக்குத் தெரிந்தது.

யாரோடும் ஒன்றாகத் தூங்க விரும்பாத மலரிற்கு லவனியின் நெருக்கமான உறவால் அது பிடித்தமானதாகவே இருந்தது. அதனோடு லவனி மிகவும் மெலிவு என்பதால் மலருக்கு இன்னொருவரோடு ஒரே கட்டிலில் தூங்குவது போன்ற உணர்வே வரவில்லை.

சிறிது காலம் அத்தனை சந்தோசமாகக் கழிந்தது. அப்படி இருக்கும்போதுதான் எல்லோரைப் போலும் மலரிற்கும் காதல் அழைப்பு வந்தது. அவளிற்கும் பிடித்துப்போக அப்பாவின் சம்மதத்தோடு அந்த உறவை ஏற்றுக்கொண்டாள்.

புதிதாக உருவான அந்த உறவு அவளிற்குப் புதுவிதமான அனுபவத்தையும் சந்தோசத்தையும் தந்தாலும் அவளுள் தன் நண்பிகளுடனான உறவில் இடைவெளி வந்துவிடுமோ என்ற ஏக்கமும் தொற்றிக் கொண்டது. நண்பிகளுடனான உறவில் ஒரு சிறு குழப்பம் நிலவி இடைவெளி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே அவள் தன் காதலனுக்காக செலவிடும் நேரத்தை வெகுவாய் குறைத்துக் கொண்டிருந்தாள்.

நாட்கள் செல்லச் செல்லக் காதலின் இனிமை அவளைக் காதலனோடு அதிகம் நெருக்கமாக்கியது. நேரமும் அவனுடனேயே அதிகம் கழிந்தது. நண்பிகளுடன் நேரத்தைப் பகிர்வது இயல்பாகவே குறைந்தது. அதனால் தன்னை தன் நண்பிகள் புறக்கணிக்கின்றார்களோ என்ற எண்ணமும் அவளுள் கொஞ்சம் கொஞ்சமாகப் பதியத் தொடங்கியது.

மலர் விரிவுரை முடிய காதலனோடு இருந்து கதைத்து விட்டு சற்று தாமதமாகவே வீடு வருவாள். நண்பிகள் முன்னதாகவே வந்து அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். இடையில் வந்து இவளும் அதில் சேர்ந்துகொள்வாள் என்றாலும் அதனுள் லயித்துப் போக முடிவதில்லை. அதுவே நாட்கள் செல்லச் செல்ல தான் இல்லாத நேரம் தன்னைப் பற்றியும் கதைப்பார்களோ என்ற எண்ணத்தையும் அவளுள் விதைக்கத் தவறவில்லை.



அந்த எண்ணமே அவளது நிம்மதியைச் சுக்குநூறாய் உடைத் தெறிந்தது காதலனுடன் கதைக்காமல் முன்னதாகவே வந்து விட்டால் இந்த பிரச்சினை வராதே என்று நினைத்தாலும், நின்று கதைக்காவிட்டால் அவர் கோபித்துக் கொள்வாரே என்றிருந்தது. மலரது நிலை இருதலைக் கொள்ளி எறும்பானது.

அன்று வழமைபோல மலர் சற்றுத் தாமதமாக வந்தாள். அவள் வீட்டின் வாசலிற்கு வந்தபோது நண்பிகளின் அரட்டைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவள் அறையினுள் நுழையவும் அவர்கள் கதையை நிறுத்தவும் சரியாக இருந்தது. அதனை வைத்துக்கொண்டு இவள் தன்னைப்பற்றி தான் இவர்கள் கதைத்தார்கள் என்று முடிவே எடுத்துவிட்டாள்.

அவளது கோபம் அதிகமாக லவனியிலேயே இருந்தது. ஆரம்பத்தில் யாருடனும் பெரிதாகப் பழகாத லவனிக்கு மலரினாலேயே இத்தனை நண்பிகள் கிடைத்தனர், அப்படி இருக்க அவளும் சேர்ந்து எப்படித் தன்னைப் பற்றிக் கதைக்கலாம் என்ற ஆதங்கம் வலுத்தது.

எதனையும் பெரிதாக மனதில் வைத்துக் கொள்ளாத மலர் இதனால் குழம்பிப் போனாள். வலனியிடம் நேரடியாக "அடி! என்ன கதைக்கிறது எண்டாலும்... எனக்கு நேரச் சொல்லணும். சரியா!" என்று சட்டெனக் கூறிக்கொண்டே தனது வேலைகளில் மூழ்கத் தொடங்கினாள்.

அவள் அப்படிக் கூறவும் லவனியின் முகம் மாறிப்போனது. "உன்னைப்பற்றிக் கதைக்கேல்ல" என்று சுருக்கமாக முடித்துக்கொண்டாள்.

தூங்குவதற்காகக் கட்டிலிற்கு வந்து படுத்தபோது லவனியின் நடவடிக்கையில் சிறு மாறுதலைக் கவனித்தாள். இவளை விலத்தி ஓரமாகப் படுத்திருந்தாள். இவளில் முட்டிவிடக்கூடாதென அதிக சிரத்தை எடுத்துப் படுத்திருந்தாள். ஒரு பத்து நிமிடம் படுத்துப் பார்த்தாள். மலரால் தாங்க முடியவில்லை. எழுந்து மொட்டை மாடிக்குச் சென்றுவிட்டாள்.

புதிய குறுஞ்செய்தி சத்தம் கேட்கவே ஆவலோடு தொலைபேசியை நோக்கினாள் "மலர் நான் உன்னோடு பழகியதில் நீ என்னை புரிந்து கொண்டது இவ்வளவும்தான்... நீ செய்தது பிழைதான்" என்பது அந்தக் குறுஞ்செய்தி.

இன்னும் அவள் மலரை மன்னிக்கவில்லை. அதற்கு மேல் மலரால் மன்னிப்புக் கேட்கவும் இயலவில்லை. காரணம் எவ்வளவு இறங்கிப்போய் மன்னிப்பு கேட்க லாமோ அவ்வளவிற்கு கேட்டுவிட்டாள். இப்படி ஒரு சூழ்நிலையில் எவ்வாறு அவள் அருகே போய் தூங்குவது?

மலரது மனம் நிலையில்லாமல் தவித்தது. இப்படி மன்னிப்பு கேட்டும் அவள் என்னை மன்னிக்கவில்லையே. ஏன் அவள் என்னை மன்னிக்கவில்லை? ஏன் இப்படிச் செய்கின்றாள்? மலர் யோசிக்கத் தொடங்கினாள்.


லவனிக்கு மலர் நல்ல நெருக்கம். எனவே நிச்சயம் மலர் தன்னை பற்றிய புரிதலை கொண்டிருப்பாள் என லவனி நினைத்திருப்பாள். தனது நெருக்கமானவர்களிடம் ஏதும் பிரச்சினை என்றால் லவனி அவர்களிடமேயே நேரடியாகக் கதைப்பாள். அது அவளது குணம். எனவே லவனி ஏதும் என்றாலும் நேரடியாக மலரை கேட்டிருப்பாள். அதை ஏன் மலர் யோசிக்கவில்லை என நிச்சயம் லவனி நினைத்திருப்பாள்... அதனைவிடமுக்கியமாகச் சிலவேளை லவனி அந்த அரட்டையில் பங்கு பெறாமல்கூட இருந்திருக்கலாம்... இவ்வளவும் இருக்க மலர் வந்து சம்பந்தம் இல்லாமல் அப்படிச் சொன்னது லவனியை நிச்சயம் காயப்படுத்தியிருக்கும், பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும். இவ்வாறு யோசிக்கையிலேயே மலரிற்குள் சிறு தெளிவு பிறந்தது....

[illegible] தூக்கியெறிந்து விட்டு தூங்குவதற்காகச் சென்றாள்.

# நிறம் மாற்றும் பூக்கள்...

பூக்கள் தமது நிறத்தை மாற்றி வருகின்றன என்று அண்மைய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இது ஏன்? எப்படி அவை தமது நிறத்தை மாற்றிக் கொள்கின்றன? இதற்குக் காரணம் என்ன? என்று தேடிக் கொண்டு போகையில் முடிவு மனிதர்களின் தலையில்தான் வந்து விழுந்துள்ளது.

அதாவது காலநிலைப் பாதிப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அதிகரித்துள்ள சூரியக் கதிர்களிலிருந்து தப்பிப்பதற்காகவும் பூக்கள் தமது நிறத்தை அடர்த்தியாக்கி வருவது தெரியவந்துள்ளது. மாத்திரமல்லாமல் இந்தப் பருவநிலை மாற்றங்கள் காரணமாக உலகளவில் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்துமே தத்தம் இனப்பெருக்க முறைகளையும் மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றனவாம். அவற்றுடைய வாழிடங்களை மாற்றிக்கொண்டிருக்கின்றன. ஏற்படுகின்ற பருவநிலை மாற்றங்களுக்குத் தகுந்த வகையில் தம் தோற்றங்களிலும் சில மாற்றங்களை உயிரினங்கள் செய்துகொள்கின்றன. இதில் தான் இந்தப் பூக்களும் அடக்கம். கடந்த 75 ஆண்டுகளில், புவியின் வெப்பம் அதிகரிப்பதற்கு ஏற்ப, வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படலம் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பதால், பூக்களில் இருக் கின்ற புற ஊதா நிறமிகளும் அதிகரித்துள்ளனவாம்.



1941ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், மலர்களிலுள்ள புற ஊதா நிறமிகள் ஆண்டுக்கு 2 சதவிகிதம் என்ற கணக்கில் அதிகரித்திருப்பதை ஆய்வுகளும் நிரூபித்துள்ளன. வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவிலிருந்து வறண்ட தாவர மாதிரிகளை அறிவியலாளர்கள் சேகரித்தனர். அதாவது 42 வகையான தாவரங்களிலிருந்து ஆயிரத்து 238 வகையான பூக்களின் மாதிரிகளைச் சேகரித்தனர். 1941 முதல் இதுவரை பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தாவர மாதிரிகளும் அதில் அடக்கம். அவற்றின் நிற மிகளை, புற ஊதாக் கதிர்களைப் படம் பிடிக்கக்கூடிய ஒளிப்படக்கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்தார்கள்.

பூவின் இதழ்களில் நிறமி அளவு காலப்போக்கில் மாறியிருப்பது அந்த ஆய்வின் மூலமே தெரிய வந்தது. பிறகு, மாதிரிகள் சேகரிக்கப்பட்ட பகுதிகளை அந்தந்த இடங்களில் நிலவிய தட்பவெப்பநிலை மற்றும் ஓசோன் அளவு குறித்த தரவுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தனர். இரண்டு மாற்றங்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்திப் போயின. தாவரப் பெருக்கத்திற்கு மிகவும் முக்கியமான மகரந்தச் சேர்க்கையைப் பாதுகாப்பதற்காகப் பூக்கள் தம் மைத் தகவமைத்துக் கொள்கின்றன. அத்தகையதொரு தகவமைப்புத்தான் இந்த நிற மாற்றம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்



## தும்மல்

தும்மினேன் நூறென்றாய் அன்று
இன்று தும்மினேன்
நீ முன்போலில்லை தூர விலகினாய்
போ என்றாய் அன்பே
கொரோனா கொல்லமுன்
கொன்றதுன் சொல்

தும்மினால் வாழ்த்துகின்ற காலம் ஒன்றிருந்தது, இன்று தும்மினால் அச்சத்துடன் உங்களைவிட்டு மற்றவர்கள் விலகுவதை காணலாம்.

இது கொரானாவின் அறிகுறியாகச் சொல்லப்படுவதால் நீங்களே அச்சமடைய வேண்டியிருக்கும் ,

ஒவ்வாத உணவுகள், குளிரான காலநிலை, சுவாசிக்கும் வளி மாசடைந்திருத்தல் மற்றும் வைரஸ் போன்ற நுண்ணுயிர் தாக்கங்களினாலும் தும்மல் ஏற்படலாம்.

பெரும்பாலோனருக்கு ஏற்படும் சாதாரண தும்மலுக்கு அச்சப்பட தேவையில்லை. பெரிய மருந்துகள் இன்றி இயற்கையாகவே கிடைக்கும் மூலிகைகளினால் இதில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

குடிநீர், நசியம், ஆவி பிடித்தல் போன்ற மருத்துவ முறைகள் சித்த மருத்துவத்தால் தும்மலுக்குச் சிபாரிசு செய்யப்படுகிறது

1. சுக்கு, மிளகு, திப்பலி மூன்றையும் தூள் செய்து கசாயமாகக் காய்ச்சி தேன் விட்டுப் பருக தும்மல், சளிப் பிரச்சினைகள் விலகும்.

2. மஞ்சள் கிழங்கை விளக்கெண்ணெய்யில் அமிழ்த்தி வைத்து அதை நெருப்பிலே சுடும்போது வெளிவரும் புகையைச் சுவாசிப்பதால் தும்மல், மூக்கடைப்பு என்பவற்றில் இருந்து நிவாரணம் பெறலாம்.

3. துளசி, தேசியிலை, நொச்சி இலைகளைச் சிறிதளவு எடுத்து தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து ஆவி பிடிப்பதனால் தும்மல், மூக்கடைப்பு என்பான நீங்கும். நெற்றியின் சுவாசக் கோளங்களில் இருக்கும் சளி இளகி வெளியேற இந்த ஆவி உதவுவதால் தலை வலியும் குணமாகிறது ..

4. இதைவிட, தொடர்ச்சியாய் இருக்கும் இருமலுக்கு தாளி, சாதி, சூரணம், ஆடாதோடைப்பாணி, சுவாசகுடோரி போன்ற மருந்துகளைச் சித்த மருத்துவர் ஒருவருடைய ஆலோசனையின்படி அருந்திக் குணம் பெறலாம்.






யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
(ஆடியபாதம் வீதி - கே.கே.எஸ். வீதிச் சந்திக்கருகில்) - 0212052419 / 0750415858

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944
https://www.facebook.com/tamilcomics/


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீனும் பூனையும்

ஈரானியப் படங்களின் சிறப்பு என்னவென்றால், மனித உணர்வுகளையும் அவர்தம் வாழ்வியல் சிக்கல்களையும் யதார்த்தமாக விவரிப்பதே. அத்தகு திரைப் படங்களுக்குப் பெயர்போன ஈரான் திரைக் கலை ஞர்களிடமிருந்து திகில் வகைப் பாணியிலமைந்த ஒரு திரைப்படம் உருவாகியிருப்பது வித்தியாசமானது.

அந்த வகையில் 2013ஆம் ஆண்டு வெளியாகிக் கவனிக்க வைத்த திரைப்படம் இது. மாத்திரமன்றித் தொடர்ச்சியான ஒரே நீளக் காட்சியாகப் படமாக்கப்பட்டிருப்பதும் இதன் சிறப்பு. கதை சொல்லப்பட்டிருக்கிற விதம்கூட வித்தியாசமானதுதான்.

ஷக்ராம் மோக்ரி என்பவர் இயக்கியிருக்கும் இந்தத் திரைப்படம் 134 நிமிடங்களையுடையது. மட்டுமல்ல வெனிஸ் திரைப்பட விழாவில் 2013ஆம் ஆண்டில் திரையிடப்பட்டுச் சிறப்பு விருதைப் பெற்றது. 2014ஆம் ஆண்டில் ஃப்ரி போர்க் பன்னாட்டுத் திரைப்பட விழாவில் விருது வென்றது. 88ஆவது ஒஸ்காரின்போது சிறந்த பன்னாட்டுத் திரைப்பட வகைப்படுத்தலுக்கு ஈரான் சமர்ப்பித்த பத்துப் படங்களுள் ஒன்றாகவும் இடம்பிடித்தது.

**உண்மைக் கதை**

சில காலங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்து உணவகங்களில் உணவில் முறைகேடு கண்டறியப்பட்டதாகக் கதையாடல்கள் பிரபலம் பெற்றிருந்தன. மாட்டிறைச்சிக்குப் பதிலாக நாய்களைக் கொன்று அவற்றை மாட்டிறைச்சி என்று உணவாக்கி விற்பனை செய்யப்பட்டது என்றும், கொல்லப்பட்ட நாய்களின் தலைகள் உணவகத்தில் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அந்த உணவகம் மூடப்பட்டதுடன், ஏனைய பல உணவகங்களில் அது குறித்துத் தேடல்கள் நடந்தன என்றும்கூடச் சில செய்திகள் வெளியாகி இருந்தன. சில காலம்வரை அந்தச் சம்பவம் பெரும் பேசு பொருளாகவே இருந்தது. உணவகங்களில் தஞ்சமைடைந்திருக்கின்ற பலரும் இதனால் பாதிக்கப்பட்டு அல்லாடிப் போயிருந்தனர். இன்றுவரை மறக்கமுடியாதளவுக்கு அனைவர் மனதிலும் உறைந்திருக்கிறது அந்தச் சம்பவம். இப்படியிருக்க, ஈரானில் உள்ள உணவகம் ஒன்று இதற்கு ஒருபடி மேலேபோய் மனிதர்களைக் கொன்று அவர்களை இறைச்சியாக்கியுள்ளது. உணவாக்கியுள்ளது. அது குறித்த உண்மைக் கதையே இந்த மீனும் பூனையும்.



**கதை**

பெரியதொரு ஏரியை ஒட்டிய பகுதியில் வருடா வருடம் நிகழும் காற்றாடி பறக்கவிடும் நிகழ்ச்சிக்குக் கல்லூரி மாணவர்கள் வந்திருக்கின்றனர். அந்த ஏரிக்கு அப்பாலுள்ள ஒரு சிறிய உணவகத்தில் உள்ள நபர்கள் சந்தேகமான வகையில் அவர்களைச் சுற்றி வருகின்றனர். பூடகமான பல சம்பவங்கள் நிகழ்கின்றன. மனித நடமாட்டமற்ற வீதி ஒன்றின் அருகில் இருக்கின்ற அந்த உணவகத்தில் வேலை செய்கின்ற சமையல்காரர்களான பாபக் (பாபக் கரிமி) மற்றும் சயீத் (சயீத் இப்ராஹிமிஃபர்), ஆகிய இருவருமே அவர்கள்.

கல்லூரி மாணவர்களான அங்கு வந்த இளைஞர்கள் தங்கள் பகுதி எல்லைக்குள் ஓடுவதை இவர்கள் கவனிக்கிறார்கள். ஒரு தெளிவற்ற நேரமாகக் கமரா சமையல்காரர்களைப் பின் தொடர்கிறது, அவர்கள் காடுகளின் வழியே, கையில் கத்திகளுடன் இரகசியப் பேச்சுகளுடன் நகர்கிறார்கள். குரூரமான காட்சிகளை வெளிப்படையாகக் காட்டாமலேயே அதன் குரூரத்தைச் சித்திரிக்கின்ற ஒலி - ஒளிப்பதிவு களைத் திரைப்படுத்திப் பாரவையாளர்களுக்கு உணவகத்தின் உண்மைக் கதையை நிறுவுகிறார் இயக்குநர்.

**கதை சொல்லப்பட்ட உத்தி**

தொடர்ச்சியான ஒரே நீளக் காட்சியாக எடுக்கப்பட்டது மாத்திரம் இதன் சிறப்பல்ல. ஒரு மாய வட்டமான புதிர்ப் பாதைக்குள் பயணிப்பதைப் போன்ற அனுபவத்தைத் தருகிறது இத் திரைப்படம். இது போன்றதொரு பரிசோதனை முயற்சியிலான ஒரு திரைக்கதையை யோசிப்பதற்கும் அதைச் செயலாக்குவதற்கும் அபாரமான துணிச்சலும் கலையுணர்வும் தேவை. இதற்காக இரண்டு மாதங்கள் ஒத்திகை பார்த்திருக்கிறார்கள். திகில் திரைப்படமென்றாலும் கூடக் காட்சிப்படுத்திய விதத்தில் எந்த வன்முறையும் பயங்கரமும் இல்லை. பின்னணி இசையின் பங்கு மகத்தானது. சற்றுச் சலிப்பை ஏற்படுத்தும் திரைக்கதை என்றாலும், கதை சொல்லப்பட்ட உத்தியின் வகையில் இது முக்கியமான படம்.

மனிதர்களைக் கொன்று தயாரிக்கப்பட்ட இறைச்சியை இரகசியமாக வழங்கிய ஒரு உணவகத்தைப் பற்றிய ஒரு உரை முன்னுரையுடன் ஆரம்பிக்கின்ற படம்,

ஒரு கட்டத்தில் மறைந்திருக்கும் மர்மங்களை திறக்கிறது. ஆனால் அதைக் காட்சியாக்குவதற்குப் பதிலாக, ஒளிப்பதிவாளர் மஹ்மூத் களாரியின் உதவியுடனும், இசையமைப்பாளர் கிறிஸ்தோப் ரேஷையின் திற



மையாலும் இயக்குநர் மோக்ரி, மாயத்தோற்றங்களையும், புதிரான இசைக் கோர்வைகளையும் புகுத்தி மெல்லிய காட்சிகளை உருவாக்குகிறார். அதன் மூலம் பதற்றத்தைத் தூண்டுகிறார். பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறான இந்தந் திசைதிருப்பல் ஒரு வித்தியாசமான அனுபவத்தை அளிக்கிறது. அத்தோடு அதிகப்படியான காட்சிகளையோ, உருவகப்படுத்தல்களையோ கொண்டிராமல், சந்தேகத்திற்கிடமான சம்பவத்தைப் பார்வையாளர்கள் உய்த்துணர வேண்டும் என்ற இயக்குநரின் நோக்கமும் வெற்றியளிக்கிறது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம் முதல் எதிரி யார்?

● சாம் - ரமேஷ்குமார்

ஒரு கை தட்டினால் எப்போதும் சத்தம் வராது. ஆனால் இரண்டு கைகள் தட்டினால் நிச்சயம் எதிரிக்கே குருதி வழியும். இதுவே மனித சமுகத்தின் ஒற்றுமைக்காகக் கூறப்படும் பொதுவான கருத்து.


இங்கு எதிரி, குருதி என்று எல்லோரும் பரவலாகப் பேசிக் கொள்கின்றோம். நம் எல்லோருக்கும் பொதுவான எதிரி யார்? நம் முதல் எதிரி இனமையாகி விடும்.

இன்னும் சொல்லப் போனால் நம் வீட்டைக் காவல் காக்கும் வளர்ப்பு நாய் போல நம் மனம் மாறிவிடும். அப்படி அது மாறினால் நம்மை எந்நேரமும் பாதுகாப்பதிலேயே எப்போதும் விழிப்பாகச் செயலாற்றும். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதனால்தான் பொதுவாக ஆன்மீகத்தில் உங்களை எதிர்ப்பவர்களை மன்னியுங்விடும்.

இறைவனை நாடும் எண்ணற்ற ஞானிகள் பிறர் செய்யும் தவறுகளை பொறுத்து மன்னித்து விடுகின்றார்கள். தங்கள் மனதில் பிறரைப் பழிவாங்கும் உணர்ச்சிகளை வளர்க்கக் கூடாது மனம் எதையும் தாங்கி மறக்கும் சக்தியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

சற்றுக் கோபம் கொண்டாலே



வாதமா? மதவாதமா? அல்லது சாதியா?

இவை எல்லாவற்றுக்கும் மேலான ஒரே பொது எதிரி மனம்தான் என எண்ணத் தோன்றுகிறது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அந்த எதிரியே இவ்வுலகில் நமக்கு சில தனிப்பட்ட எதிரிகளை அல்லது பொது எதிரிகளை உருவாக்கித் தருகின்றது.

எதிரிகளை உருவாக்குவதில் மட்டுமே நம் மனம் திருப்தி கொள்ளாமல், சில சமயங்களில் முரண்பாடுகள் ஊடாக நம்மைக் கொலைக்களம் வரையும் அது அழைத்துச் செல்கின்றது. நம் தனிப்பட்ட எதிரிகள் எல்லாம் நம் மனதின் எதிரிகளே!

எதிரிக்கு எதிரி நமக்கு நண்பன் என்ற முறையில் நம் மனம் உருவாக்கிய இவ்வுலகின் புற எதிரிகளை நாம் நட்பாக்கிக் கொண்டால் நம் மனமான முதல் எதிரி நமக்கு அடி பணிந்து விடும் அல்லது அடி

**இவ்வுலகின் புற எதிரிகளை நாம் நட்பாக்கிக் கொண்டால் நம் மனமான முதல் எதிரி நமக்கு அடி பணிந்து விடும்.**

கள் அல்லது ஆசிர்வதியுங்கள் என்று ஞானிகள் கூறுகின்றார்கள். நீங்கள் உங்கள் மனதையும் மீறி இந்த மகத்தான செயலைச் செய்தால் உங்கள் மனம் தானாக[illegible] பட்டுப் பரிபக்[illegible]

'கர்ம வினை' மலையளவு வளர்ந்துவிடும். பின்னர் பிறப்பும் இறப்பும் எண்ணற்ற தடவை நடந்துவிடும் என்பதில் அவர்கள் எப்போதும் தெளிவாக இருக்கின்றார்கள். இதில் மனிதர்களாகிய நாம் தெளி வற்று இருக்கின்றோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் மனிதனுக்கு மனிதன்தான் எதிரியென்றால் எதிர்காலத்தில் மனித இனமே வாழ முடியாத சூழ்நிலை உருவாகி விடும். மனித இனம் எல்லாவற்றுக்கும் பொதுவான எதிரி நம்முடைய மனம்தான் என்பதை அறிவால் அறிந்து கொண்டால் சண்டைகள், போர்கள் எல்லாமே தடுக்கப்பட்டுவிடும்.

இது ஒரு தனிப்பட்ட இனமோ, மதமோ, சாதியோ புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டிய கருத்தல்ல. இவ்வுலகில் வாழும் மனித சமுதாயம் முழுவதும் புரிந்துகொண்டு [illegible] மகத்[illegible]

## அவளுக்கு மட்டும்

1
ஒளி என அகம் நிறை ....
உன் புன்னகையால் என்னைப் போர்த்து...
அன்பினைத் தூவித் தூங்கவை
கனவினில் வந்து மீள எழுப்பு...
கண்கள் கீறிய வானவில்லை
என் கைகளில் தா...
வாழ்வு முழுவதும் உன்னோடு
- கூட்டிச் செல் ....
தந்து விட்டேன் என்னை

2
மழை தூவி மோகம் பெருக்கும்...
மின் மினிபோல் கண் மலரும்...
காதின் முன்குழலில் காதல் தூங்கும்...
மென் மொழியில் பஞ்சும் நோகும்...
தேகம் பட்ட இடம் சிலிர்க்கும்...
நின் வட்ட முகம் வண்ணக்கண்
- காணக் காண
கெட்ட தடி மனசு என் செல்லத்தங்கமே...

3
நீயே என் வானம்
என் நிலவு
மென் இசை
இன் சுவை, தேன் இரவு, நீள் கனவு,
நீயே என் கவிதை, கருணை,காதல்,
- இல் வாழ்வு
நான் இன்று நீயானதே
என் வாழ்வின் பேரின்பப் பேறு

- அஞ்சு

## கொரோனா ஸ்பெஷல் ஸ்பைடர்மான்



மார்வெல் - சொனி நிறுவனங்களுக்கு இடையே நீடித்த உரிமப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு படப்பிடிப்புக்கு வந்துவிட்டது 'ஸ்பைடர்மான் 3' திரைப்படம். அதில் தோன்றுகின்ற தனது ஒளிப்படத்தை அந்தப் படத்தின் நாயகன் டாம் ஹாலண்ட் வெளியிட்டுள்ளார். அதில் ஸ்பைடர் மானான அவர் முகக் கவசத்துடன் இருக்கிறார். ஏற்கனவே ஸ்பைடர் மான் கவசத்துடன் இருக்கும் அவர் மேலதிகமாக மற்றொரு முகக் கவசமும் அணிந்திருப்பது பலரையும் ஈர்த்துள்ளது. 'ஸ்பைடர்மான் 3' படப்பிடிப்பு நடந்து வரும் நிலையில்தான் டாம் ஹாலண்ட், படப்பிடிப்பிலிருந்தபடியே இந்த ஒளிப்படத்தைத் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த ஒளிப்படத்தில் ஸ்பைடர்மான் உடையில் இருக்கும் ஹாலண்ட், அதன் மேல் ஒரு முகக் கவசத்தையும் அணிந்திருக்கிறார். அனைவரும் 'முகக்கவசம் அணியுங்கள், நான் இரண்டு அணிந்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டுப் பதிவிட்டுள்ளார். கொரோனா காலத்தில் ரசிகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே அவர் இப்படிப் பதிவிட்டிருக்கிறார் என்று பலரும் விவாதிக்கத் தொடங்கியுள்ளனர். 2021ஆம் வருடம் டிசம்பர் மாதம் இந்தத் திரைப்படம் வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைதியாக நிகழும் மிகப் பெரும் இடப்பெயர்வு

● பொன்வண்டு

ஆர்ட்டிக் என்கிற வடதுருவப்பகுதிக் கடலில் பயணித்த ரஷ்யாவின் கடற்படைப் படகு ஒன்றை அந்தப் பகுதிக் கடலில் வாழ்கின்ற பெரிய தொரு விலங்கினம் தாக்கியது. 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடந்த இந்தச் சம்பவத்தின் போது அந்தக் கடற்படைக் கப்பலி லிருந்த மாலுமிகளும், விஞ்ஞானி களும் ஆபத்தான நிலையிலிருந்து மீட்கப்பட்டனர்.

ரஷ்யக் கடற்படைக் கப்பலான அல்தாய் மீட்புக் கப்பலில் இருந்த அவர்கள் சிறிய இறப்பர் படகு ஒன் றில் ஏற்றப்பட்டுக் கரைக்குக் கொண்டு வரப்பட்டனர். அந்தக் கடல்பகுதி யில் தான் ஈன்ற குட்டிகளைப் பாது காப்பதற்காக அந்தப் பகுதியில் வாழும் கடல் உயிரினம் ஒன்றே அந் தக் கப்பலைத் தாக்கியது என்று கண்டு பிடித்தார்கள். தாக்கியது பெண் விலங்கு என்றும் கருதப்படுகிறது.

ஆங்கிலத்தில் "வால்ராஸ்" என்று அழைக்கப்படுகின்ற அந்தக் கடல் வாழ் விலங்கு தனது குட்டிகளைப் பாதுகாப்பதற்கு எடுத்த முயற்சியே இது என்று பிரிட்டனில் இருந்து வெளிவருகின்ற "இன்டிபென்டன்" என்கிற இணையப் பத்திரிகை அன்று செய்தி வரைந்தது. அந்தச் செய்தி வெளியாகிக் கிட்டத்தட்ட ஒரு வருட நிறைவில் நடந்திருக்கிறது மீளவும் ஒரு சம்பவம். ஆனால், இம்முறை மனிதர்கள் வென்று "வால்ராஸ்"கள் தோற்றுள்ளன.



தாக்கப்பட்ட ரஷ்யக் கப்பலும் மீட்புக் கப்பலும்.

### "வால்ரஸ்" என்கிற பனிக்கடல் யானை

"வால்ரஸ்" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற குறித்த விலங் கினத்தைக் கடல்பசு, பனிக்கடல் யானை என்று தமிழில் பல பெயர் களில் அழைக்கிறார்கள். இது கடல் பாலூட்டிகளில் உள்ள துடுப்புகாலி கள் (கால்களைத் துடுப்பாக வலித்து நீந்தக் கூடியன) இனத்தில் பெரியது.

கடற்பசு என்று பலராலும் அழைக் கப்பட்டாலும், இந்த விலங்கிலுள்ள தந்தம் போன்ற நீண்ட பற்கள் காரண மாகவும், குளிரும் பனிக்கட்டிகளும் நிறைந்த வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் வட துருவப் பகுதி களில் இவை அதிகம் காணப்படுவ தாலும் பனிக் கடல் யானை என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்படு கின்றன.

பனிக்கடல் யானைகளுக்கு முகத் தில் உட்பொதிந்த காதுகள் உண்டு. பின்னங்கால்களால் நன்கு நீந்தும் ஆற்றல் கொண்டது. மேலும் துடுப்பு கள் போன்ற கால்களால் தரையிலும் தவழ்ந்து செல்லும். இதன் தோல் அரை அடி வரையில் தடிப்புடை யது. இதனால் கடும் குளிர் கொண்ட பனிக் கடல்களில் இவை உயிர் வாழ்கின்றன.

### நீண்ட தந்தப் பற்கள்

இந்த விலங்கின் நீண்ட தந்தம் போன்ற பற்கள் எதிரிகளைத் துரத்தி அடிப்பதற்கும், பனிக்கட்டிகளைத் துளையிட்டுக் கடலில் புகுவதற்கும், கடலிருந்து - கடலில் மிதக்கின்ற பனிக்கட்டிகள், பனிப் பாறைகளின் மேல் தாவி ஏறுவதற்கும் பயன்படு கிறது.

பனிக்கடல் யானைகளின் பற்கள் 15 ஆண்டுகள் வரை வளரக்கூடி யன. ஆண் பனிக்கடல் யானைகளின் பற்கள் 102 சென்ரி மீற்றர் நீளமும் பெண் பனிக்கடல் யானைகளின் பற்கள் 76 சென்ரி மீற்றர் நீளமும் கொண்டவை. இந்த நீண்ட தந்தம் போன்ற பற்கள் பனிக்கரடி மற்றும் திமிலங்களிடமிருந்து இவற்றைத் தற்காத்துக் கொள்ளவும் உதவுகின் றன. கடல் சிங்கத்தை விடப் பனிக் கடல் யானை பெரியதும்கூட.

### காட்டு யானைகளின் கதியே இவற்றுக்கும்

மனிதர்கள் தாம் குடியிருப்பதற் காகவும், பயிர்ச் செய்கைக்காக வும், இதரபல தேவைகளுக்காகவும் காடுகளை அழித்துவருவதாலும், காடுகளை [illegible] குள்ள [illegible] அல்லாடுகின்றன. அதிலும் குறிப் பாக மிகப் பெரிய விலங்கினமான யானைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு சொல்லி மாளாதது.

இலங்கையிலும் இது இயல்பாக நடந்து வருகிறது. ஆனால், இந்த யானைகளுக்குத் தாங்கள் இழைத்த அநீதிகள், அவைபடுகின்ற அவலங் கள் குறித்துப் பேச மறுக்கின்ற மனி தர்கள் - யானைகள் மனிதர்கள் வசிக் கும் பகுதிகளுக்கு ஊடுருவித் தாக் குதல் நடத்துகின்றன, பயிர்களை நாசமாக்குகின்றன என்று பல கதை கள் கூறி அல்லாடித் திரிகின்ற யானை கள் மீது பழிபோடுகின்றனர்.

பருவ காலங்களுக்கு ஏற்ப உண வுக்கும், நீருக்கும் பிறதேவைகளுக் கும் இடம்பெயர்கின்ற யானைகளின் போக்குவரத்துத் தடத்தை அபகரித்து - மாற்றியமைத்து அவற்றின் நகர் வைத் தடுக்கின்ற மனிதர்கள் பின் னாள்களில் அந்த விலங்கினங்களின் அழிவுக்கும் வழிவகுக்கின்றனர். இதையொத்த நிலையே இந்த ஆட் டிக் கடல்பகுதியில் வழ்கின்ற பனிக் கடல் யானைகளுக்கும் நேர்ந்துள் ளது. காட்டிலுள்ள யானைகளைப் போல மனிதர்களின் அதிகரித்த நட மாட்டத்தாலும், மனிதர்களால் ஏற் பட்டுவருகின்ற பருவநிலை மாற்றப் பிரதிபலிப்புகளாலும் கடல் யானை களும் அல்லாடத் தொடங்கிவிட்டன.



இடம்பெயரும் பனிக்கடல் யானைகள்.

### அழிவு - அறிகுறி

தோலுக்காகவும், உணவிற்காகவும் மனிதர்களால் பனிக்கடல் யானை கள் வேட்டையாடப்படுகின்றன. இதன் தோல் நஞ்சு தாக்கப்படாத தன்மையைப் பெற்றிருப்பதால் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது. அதிகரித்த கப்பற் போக்குவரத்து இவற்றின் இருப்புக்குப் பங்கம் விளைவிக்கின்றது.

இவ்வாறான அழிவுகள் வலிமை மிக்க இந்த விலங்கினத்துக்கு வெகு குறைவே என்றாலும் மனிதர்கள் ஏற்படுத்திய காபன் வெளியேற்றம், காடழிப்பு ஆகிய முதன்மைக் காரணி களால் உண்டான வெப்பநிலை அதி கரிப்பும் அதனால் உண்டான பருவ நிலை பருவநிலை மாற்றம் காரண மாகவுமே இன்றைக்கு இவை



பனிக்கடல் யானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் இடரை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளன. அதன் அறிகுறியும் வெளிப் படத் தொடங்கிவிட்டது. இந்தப் பனிக்கடல் யானைகள் பெருந்திரளாக இடம்பெயர்வதை ரஷ்ய விஞ்ஞானிகள் ஆட்டிக் பகுதியில் கண்டு பிடித்துள்ளனர்.


**பனிக்கடல் யானைகளின் பெரும் பயணம்**

ரஷ்யாவின் வடக்கை ஒட்டியுள்ள காரா கடலின் கரையில் குவிந்துள்ள பனிக் கடல் யானைக் கூட்டம் ஒன்று அங்கிருந்து பெரும் பயணமாக இடம்பெயரத் தொடங்கியுள்ளது. இதை ரஷ்யாவின் வடபகுதியில் உள்ள விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பயணம் ஆபத்தை உணர்த்துவது. ஏனென்றால் பெண், ஆண், குட்டிகள் என அனைத்து வகையான பனிக்கடல் யானைகளும் இதில் அடங்குகின்றன என்று ரஷ்யாவின் அக்கடமி ஒவ் சயன்ஸ் பத்திரிகையின் மூத்த ஆர்க்டிக் ஆராய்ச்சியாளர் அலெக்ஸாண்டர் சோகோ லோவ் கூறுகிறார்.

இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் (ஐ.யூ.சி.என்) 2016ஆம் ஆண்டில் இந்தப் பனிக் கடல் யானைகளை அழிவின் விளிம்பிலுள்ள விலங்கினம் என்று பட்டியலிட்டுள்ள நிலையில் இந்த இடப்பெயர்வு சூழலியலாளர்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது. “பூமியின் வெப்ப நிலை அதிகரிப்பால் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுவது அதிகரித்துள்ளது. இதனால், காரா கடலில் பனி இல்லாத பருவம் சமீபத்திய தசாப்தங்களில் நீண்டதாகி வருகிறது.

இந்த நீட்சியே பனிக் கடல் யானைகளின் இந்த இடப்பெயர்வுக்குக் காரணம் என்று கடல் பாலூட்டி ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஆண்ட்ரி போல்ட் னோவ் என்பவர் கூறுகிறார். விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் என எவ்வளவு அறிவுரைகளை அள்ளியிறைத்தாலும் மனிதர்கள் சூழலை மாசுபடுத்து வதை நிறுத்துவதாக இல்லை.

உடனடிப் பாதிப்பை உணராத - பாதிப்புக்கு ஆளாகாத மனிதர்கள் தொடர்ந்தும் பூமியைச் சூறையாடி வருவதால் எதிர்காலத்தில் அவர்களின் குழந்தைகளே அதன் விளைவை அனுபவிப்பார்கள். என்றாலும் பூமியில் வாழ்கின்ற முன்னுணரும் விலங்குகள் பல பாதிப்புக்குள்ளாகத் தொடங்கி யிருப்பது காலப் பரிதாபம்தான்.



# படிச்சவங்கள் பலதையும் யோசிப்பாங்களில்லோ?

■கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கு அதிலை வட்டுக் கோட்டைக்கு முருகானந்தம் வீட்டைபோவமெண்டு யாழ்ப் பாணத்தாலை கல்லுண்டாய்ப் பாதையாலை போனன். சூ! சும்மாகுறைசொல்லக்கூடாது பாருங்கோ றோட்டு வேலை திறமாய் நடந்து கொண்டிருந்துது. றண்வேகூடத்தோத்துப் போயிடும்... அப்பிடியொரு வேலை பாருங்கோ! அண்டை அயலையெல்லாம் வழிச்செடுத்த மாதிரித்துப்பரவாக்கி வேலை நடக்குது. பனையள் வடலியள் பத்தை - பறுகு ஒண்டு மில்லை. வலு கிளீன். அதிலை கனக்க மதவுகள் புதிசாயல்லே திருத்துப்படுகுது. கோங்கிறீற் வேலையளும் வலு அமர்க்களமாய் நடக்குது. அதுகளைப் பாத்தபடியும் வேலைக்குப் போட்ட கல்லுகள் சறுக்காமல் பலன்ஸ் பண்ணினபடியும் போய்க்கொண்டிருந்தன். புதிசாத் திறந்தகுடியிருப்புக்கை கடல் வந்திட்டுதாமெண்டல்லே செய்தியள் அடிபட்டது. அதுக்கிடையிலை செல்லக்கண்டர்சொன்ன ஒரு விசயத்தைச் சொல்லவேணும். ஒரு முட்டாள்தனத்தை மறைக்க ஒரு புத்திசாலித்தன மானவேலையெண்டு அவர் சொன்னது அந்தக் குடியிருப்புக்குள்ள வெள்ளம் தங்காமலிருக்கவெண்டுறோட்டுக்கு வடக்காலை மண் அள்ளினதைத்தான். மண் எடுத்த இடம் வெள்ளம் தேங்கி நல்லதண்ணிகடலுக்குள்ள போறதைத் தடுத்து நிலத்தடித் தண்ணியாய் மாறுகிறது வலுதிறமானதில்லே? அந்த மண்ணெடுத்த இடத்திலை தண்ணி நிக்குது? மழை பெய்யேல்லை தண்ணி நிக்கிறது அதிசயமாயல்லோ கிடக்குது எண்டு நினச்சபடி வலு கரையாய் நிண்டு ஒரு வாய்வெத்திலை போடுவமெண்டு சிலோ பண்ணினன். அதிலை ஒரு ஆள் ஒரு பெடியனோடை (மகனாயிருக்கலாம்) நிண்டு ஏதோ காட்டிக் காட்டிச் சொல்லிக் கொண்டு நிக்கிறதைக்கண்டு அவைக்குக் கிட்டவாய்நிண்டிட்டன். அந்த ஆள் சொல்லுறது நல்லாக் கேட்டுது. காதை வடிவாய்க் குடுத்தன். அந்தாள் கோவமும் சலிப்புமாய்ச் சொல்லிச்சுது, உதைத்தான்நான் முதலிலையே எஞ்சினியருக்குச் சொன்னனான். ஓமோம் எண்டு வடிவாத் தலையாட்டினவர் ஆனால் விளங்கிக் கொள்ளேல்லை எண்டதை அவற்றை அவசரமும் கதையளும் காட்டினது. அதோடை அவர்மதவுகட்டிற கொன்றாக்ட்காரோடை கதைக்கிறன் எண்டதும் எனக்கு விளங்கி விட்டுது, ஒண்டும்நடவாது எண்டது. இந்த ஏரிக் கடலிருக்கல்லே இது வத்துப் பெருக்குக் கடல். சீசனுக்குச் சீசன் பெருகும். உவை இஞ்ச மதவுகளை வைக்கிறது நாட்டுக்கையிருந்து வாற நல்லதண்ணியைக் கடலுக்கை விடவே தவிர உப்புத்தண்ணி நாட்டுக்கை உதுகளுக் காலை வரமெண்ட யோசினைஇல்லாமல்தான்.



> “மண் அள்ளின இடம் இப்ப கடலைவிடப் பதிவாகிப் போச்சுது. கடல் பெருக்கிலை உந்த மதவுகளுக்காலை வந்த கடல் தண்ணியாலை நிறைஞ்சு போச்சுது.”

அதை ஆதாரத்தோடை நேரையே காட்டித் தான் விளங்கப்படுத்தின்னான். இப்பபாத்தியோ கடல் உள்ளுக்கை வந்திட்டுது. அதிலை அந்தக் குடியிருப்பை பள்ளத்துக்குள்ளகட்டிப் போட்டு அதுக்கு இஞ்சாலை மண்ணை அள்ளிப் போட்டவை, மண் அள்ளின இடம் இப்ப கடலைவிடப் பதிவாகிப் போச்சுது. கடல் பெருக் கிலை உந்த மதவுகளுக்காலை வந்த கடல் தண்ணியாலை நிறைஞ்சு போச்சுது. கேக்கக் கேக்க எனக்கு கன விசயம் விளங்கத் தொடங்கிச்சுது. தம்பிகுறை நினைக்காதையும் இஞ் சாலிப்பக்க வயலுகள் இனிச் சரிவராதோ? எண் டன். ஓமய்யா உப்புத்தண்ணி ஒருக்கால் வந் திட்டுது எண்டால் அஞ்சாறு வருசத்துக்கு அந்த உப்புத்தன்மைபோகாதெண்டு சொல்லுகினம். அப்ப சீசனுக்குச் சீசன் உப்புத் தண்ணி வந்தா என்னவண்டய்யாசரிவரும்? நிரந் தரமாயே உப்புத் தரையாக வேண்டியதுதான். இப்பிடியான பொது விசயங்களை இவை அறிஞ்சிருக்க வேணுமெண்டுதான்இவரைக் கூட்டியந்து காட்டுறன் எண்டார் அந்த ஆள். அவர் அங்காலை போக வெளிக்கிட நானும் வெளிக்கிட்டு முருகானந்தம் வீட்டை போகு மட்டும் இதையே யோசிச்சன். அந்தாளின்ரை பேரையோ ரெலிபோன் நம்பறையோ வாங்கி யிருக்கலாம் பிழை விட்டிட்டன். அந்தாள் பாவம் இதைமினைக் கெட்டுச் சொல்லியும் விளங்காத ஆக்களாயிருக்கிறாங்களே? அதோடை சீசனுக்குக் கடல் பெருக்கெடுக்கிறது இருக்கட்டும் சூழல்வெப்பமாகுது, கடல்நீர் மட்டம் உயருது எண்டு கட்டுரையள், அறிவிப்புகள் வாறதைப் பாத்தா றோட்டுக்கு வடக்காலை இனிமேல் வத்துப் பெருக்கில்லாத நிரந்தரக் கடலல்லோ இருக்கப்போகுது? இதுகளை யோசிக்கமுடியாத ஆக்கள்தான் அபிவிருத்தி பற்றிக் கனவு காணுகிறாங்கள் போலை? என்னெண்டாலும் எங்களுக்கு இனி மேற்காலம் கிணத்துத் தண்ணியேகாணும் உப்பு வாங்கிற காசு மிச்சமாகுமல்லோ எண்டு கணக்குப் பாக்கிறாங்களோ தெரியாது? படிச்ச வங்களில்லே பலதும் யோசிப்பங்களோ இல்லையோ? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதீப் - கிளிநொச்சி.




# வழித்துணைக்கு வந்த வடையாச்சி...

கதை 11


2001 ஆம் ஆண்டு. அநுராத புரத்தில் சுற்றுலா விடுதி ஒன்றில் நான் கடமை யாற்றினேன். அப்போது எனது அம்மா, அப்பா, சகோதரர்கள் எல்லோரும் கொழும்பு - மரு தானையில் குடியிருந்தார்கள். நானும் எனது சகோதரர்களும் கொழும்பில் பிறந்து வளர்ந்த வர்கள். படித்ததும் கொழும்பில்தான். அன்றைய தினம் ஏதோ தாக்குதல் கெடுபிடி காணமாக (போர்க்காலம்) இயல்புநிலை பாதிக்கப்பட்டி ருந்தது.

இரவு 8 மணியளவில் அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு சென்ற தொடருந்தில் ஏறி மருதானைக் குப் பயணம் செய்தேன். தொடருந்து மிகவும் குறைந்த வேகத்தில் பயணித்து இரவு ஒரு மணி யளவில்தான் மருதானைத் தொடருந்து நிலையத்தை அடைந்தது. தொடருந்து நிலையத்தில் இறங்கி வீதிக்குச் சென்றேன். வீதியில் ஆள் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை.

நான் காமினி ஹோல்ட் பக்கமாகச் சென்று எனது வீட்டை நோக்கி நடந்தேன். காமினி ஹோல்ட் சந்தியில் எனக்குத் தெரிந்த வடை விற்கும் ஆச்சி நின்றார். அவரை எனக்குப் பாடசாலைக் காலத்தி லிருந்து தெரியும். நான் கற்ற பாடசாலைக்கு வெளியே இருந்து அந்தக் காலத்தில் வடை விற்றவர். அவரை இப்போது வீதியில் கன காலத் துக்குப் பின்னர் கண்டுள்ளேன்.

என்னைக் கண்டதும் வடை ஆச்சி ஆர்வத் துடன் என்னைநோக்கிப் “பிரதீப் என்ன இந்த நேரத்தில் நடந்துவாறாய்?” என்று கேட்டார். நான் தொடருந்து பிந்தி விட்டதைக் கூறினேன். என்னுடன் கதைத்தபடி வடையாச்சியும் சேர்ந்து நடந்தார். நான் கூறினேன் “நீங் கள் ஏன் கஸ்ரப்படுகிறீர்கள். நான் தனியாக நடந்து போகிறேன்” என்று. “பரவாயில்லை உனக்குத் துணை யாக வாறன்” என்று கூறி வடை யாச்சி என்னுடன் வேகமாக நடந் தார். நான் அவருடன் கதைத்துக் கொண்டு நடக்கும்போதே “இந்தக் கிழவி இந்த வயதிலும் உசாராக இருக் கிறதே” என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

எனது வீடு வந்தது. “சரி வடை யாச்சி! நான் போயிற்று வாறன். பிறகு சந்திப்பம்” என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததும், எனது கதையைக்



கேட்ட அம்மா கதவைத் திறந்து வெளியே வந் தார். “யாரோட கதைச்சனீ?” என்று அம்மா கேட்க, “அது வடையாச்சி... என்னோட கதைச் சுக்கொண்டு வந்தவா. என்னை இதில விட்டு விட்டுப் போறா” என்றேன்.

அம்மா அதிர்ச்சியாக நின்றார். அப்படியே என்னை வாசலில் நிற்கவிட்டுத் தலையில் தண்ணீர் தெளித்தார். பின்னர் உள்ளே வருமாறு கூறினார். அது வழமைக்கு மாறான ஒரு செயற் பாடாக இருந்தது.

“ஏனம்மா இந்த நேரம் தலையில தண்ணி தெளிக்கிறியள்?” என்று கேட்க “உள்ளே வா சொல்லுறன்” என்றார். உள்ளே போனதும் ஓர் அதிர்ச்சியான செய்தியைக் கூறினார். “வடையாச்சி இறந்து இன்று எட்டாம் நாள் சடங்கும் முடிந்துவிட்டது. உன்னுடன் வந்தது வடையாச்சி அல்ல. அவ வின் ஆவியாகத்தான் இருக்கவேண்டும்” என் றார்.

நானும் அதிர்ந்து போனேன். நான் கண்ட, என் னுடன் கதைத்துக் கொண்டு பயணித்த வடை யாச்சியின் உருவம் உண்மையானது. இன்றுவரை இது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது. வடை யாச்சி என்மீது பாசமுள்ளவராக இருந்ததால் அவர் எனக்கு எவ்வித ஊறும் செய்யாது வழித் துணைக்கு வந்திருக்கலாம் என்று நினைத்தேன்.

நான் கண்ட வடையாச்சி இறந்துவிட்டார் என்பது உண்மை. அவர் என்னுடன் கதைத்துக் கொண்டு வந்ததும் உண்மை. ஆவி அல்லது பேய் என்ற ஒன்று உண்மையாகவே இருக்கிறது என்று நம்பு வதற்கு இந்தச் சம்பவம் எனக்குப் போதுமானதாக இருக்கிறது. ஆனால் அதற்குப்பின் வடையாச்சியை நான் ஒருபோதும் கண்டதில்லை.

# “அம்மாட்ட எதையும் மறைக்க மாட்டேன்”

கௌதம் வாசுதேவ மேனன் இயக்கி தனுஷ் நடித்த ‘என்னை நோக்கி பாயும் தோட்டா’ படத்தின் நாயகி மேகா ஆகாஷ். சிம்புவுடன் ‘வந்தா ராஜாவாத்தான் வருவேன்’ என்ற படத்திலும் நடித்தவர். முடக்க காலத்தின் பின்னர் மீண்டும் தொடங்கியுள்ள திரைப்படப் படப்பிடிப்பில் ஹிந்திப் படத்தில் நடித்து வருகிறார். பிரபுதேவா இயக்கும் சல்மான் கானின் ‘ராதே’ படத்தின் படப்பிடிப்பில் இருந்த அவரோடு ஒரு சின்னச் சந்திப்பு.

**வீட்டிலேயே இருந்த நாள்கள் எப்படிப் போச்சுது?**

ஏன் எனக்கு மட்டும் தனியாவா அனுமதி தருவாங்க! வீட்டுக்குள்ளேயேதான் முடங்கிக் கிடந்தேன். என் வாழ்க்கையிலேயே இப்பிடி அடைபட்டுக் கிடக்கிறது இதுதான் முதல் தடவை. ஆனா இந்த 6 மாசம் முழுக்க நல்லா வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டேன். அதோட ‘ஜிம்’ போகவும் முடியாததால கொஞ்சம் குண்டாயிட்டேன். பிறகு ஒரு மாதிரி கஸ்டப்பட்டு உடம்பக் குறைச்சேன். வரையிறது பிடிக்கும் அதுவும் இந்த நாட்களில கொஞ்சம் செய்தேன்.

**அம்மாவத்தான் ரொம்பப் பிடிக்குமாமே உண்மையா?**

ஆமாம்! அம்மாவும் நானும் நண்பர்கள் மாதிரி. அம்மா ரொம்ப இளமையா என்னை மாதிரியே இருப்பாங்க. நிறையப் பேர் எங்களப் பார்க்கும்போது அக்கா தங்கச்சின்னுதான் நினைப்பாங்க. அம்மாட்ட நான் எதையுமே மறைக்கமாட்டேன். அம்மா இல்லாத ஒரு நாளக்கூட நினைச்சுப் பார்க்க முடியல.



மேகா ஆகாஸ்

**அம்மாவே இயக்கின ஒரு குறும்படத்தில நடிச்சீங்களாமே, அந்த அனுபவம் எப்பிடி?**

அம்மா (பிந்து ஆகாஷ்) நிறைய விளம்பரப் படங்கள் இயக்கியிருக்காங்க. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த சமயத் தில ஏதாவது புதுசா செய்யலாம்னு நினைச்சோம். அப்பிடித் தான் ‘பேசினால் போதும் அன்பே’ குறும்பட யோசனை வந்தது. விவ காரத்து வரைக்கும் போன ஒரு இளம் தம் பதியினுடைய வாழ்க்கை, முடக்க காலத்தில எப்படி மாறுதன்றதுதான் கதை. அம்மா இயக்கத்தில நடிச்சது புதுசா இருந் தது. நல்லாவும் இருந்தது.

**இந்தத் தீபாவளிக்கு என்ன திட்டம்?**

நாங்க ஒன்டும் ஆகா ஓகோன்னு தீபாவளி கொண்டாடுற ஆட்களில்ல. கோயிலுக்குப் போவோம். குடும்பத்தோட எங்கயாவது சுற்றுலா போவோம். இந்த வருசமும் அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொவிட்-19 இற்கான மாற்று மருந்து' இலங்கையில் ஏற்படுத்திய குழறுபடி!

● ஸூடோ ஸ்வாமி

கொவிட்-19 என அழைக்கப்படும் கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் உலகில் ஏற்படுத்தப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில், அதன் தாக்கத்திற்குள்ளானோரின் எண்ணிக்கை கடந்த வாரத்தில் 5 கோடியைத் தாண்டியிருக்கிறது. இலங்கையின் உள்நாட்டுத் தொற்று 15 ஆயிரம் பேரைத் தொட்டுவிட்ட பின்னரும், நாளாந்தம் 500ஐ அண்மித்த எண்ணிக்கையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகிறார்கள்.

கொரோனாவிற்கான முற்தடுப்பு மற்றும் வந்தபின் காப்பு மருத்துவ முறைகளுக்காக உலகெங்கும் வாழ் விஞ்ஞானிகள் தமது மூளைகளைக் கசக்கிப் பிழிந்து முயற்சி செய்து வருகிறார்கள். இதன் விளைவாக நாளாந்தம் முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது.

வெறுமனே தொற்றிலிருந்து மனிதரைக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல், வேறேதாவது பின் மற்றும் பக்க விளைவுகள் இன்றியதாக அல்லது பக்க விளைவு குறைவானதாகக் கண்டுபிடிக்கப்படும் மருந்து அமைய வேண்டும்.

இந்த இறுக்கமான கட்டுப்பாடு காரணமாக, கடுமையான தடை தாண்டல்களைத் தாண்டியே ஒரு மருந்திற்கு உத்தியோகபூர்வ அனுமதி வழங்கப்படும். அவ்வாறு சந்தைக்கு விடப்பட்ட மருந்தும் சந்தைப்படுத்தலின் பின்னான விளைவுகளை ஆராய்வதற்காக கண்காணிப்பின் கீழேயே வைக்கப்படும்.

மருத்துவ உலகினுள் வர்த்தகம் புகுந்து விட்டாலும், இந்த இறுக்கமான நிலைப்பாடு காரணமாக தொடக்கப்படும் அனைத்து மருந்து உருவாக்க முயற்சிகளும் முடிவுக் கோட்டை எட்டுவதில்லை.

**அங்கீகாரம் பெற்றிருக்கும் மற்றொரு மருந்து!**

கொரோனாவிலிருந்து நிவாரணம் தரவல்லதென முன்மொழியப்பட்ட ரெம்டெசிவிர் மருந்து ஏற்கெனவே ஒப்புதலைப் பெற்றுள்ள நிலையில், தற்போது பம்லனிவிமப் (**Bamlanivimab**) எனப்படும் மொனொகுளோனல் அன்ரிபொடி சிகிச்சை முறைக்கும் எவ்.டி.ஏ. அமைப்பு அங்கீகாரம் அளித்திருக்கிறது.

வளர்ந்தவர்களுக்கும் 12வயதிற்கு மேற்பட்ட சிறாருக்கும் பயன்படுத்தத் தக்கதென அனுமதிக்கப்பட்ட இந்தப் புதிய சிகிச்சை, **SARS -CoV-2** வைரஸ் பரீட்சிப்பின் போது பொசிடிவ் என அடையாளப் படுத்தப்பட்டவர்களுக்கும், கொவிட்-19 தாக்கத்தின் காரணமாக நிலைவரம் உக்கிரமடையும் நிலையில் உள்ள நோயாளிகளுக்கும் பயன்படுத்தவே விதந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும், கொவிட்-19 தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோருக்கோ அல்லது கொவிட்-19 காரணமாக ஒக்சிசன் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கோ இந்தச் சிகிச்சை முறை பயன்படுத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை.

மருந்தின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் என்பன தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு வரும் நிலையிலேயே, இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**வெற்றி வாய்ப்பை கொண்டிருக்கும் வக்சீன்!**

பைஸர் (**Pfizer**) எனப்படும் மருந்துப்பொருள் தயாரிப்பு நிறுவனம் தாம் தயாரித்துப் பரீட்சித்திருக்கும் கொவிட்-19 தொற்றிற்கான முற்தடுப்பு வக்சீன், 90 வீதமானோரிடத்தில் வெற்றிகரமான பெறுபேற்றினை தந்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

6 நாடுகளைச் சேர்ந்த 43,500 பேரிடம் பரிசோதிக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் இந்த வக்சீன், பெரியளவில் பக்கவிளைவுகளை ஏற்படுத்தவில்லை என பி.பி.சி. செய்திச் சேவை குறிப்பிடுகிறது. முதற்கட்ட முடிவுகளை அடிப்படையாக வைத்தே இந்த வக்சீன் பற்றிய தான அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பினும், அவசர ஒப்புதல் அடிப்படையில் அனுமதியைப் பெற இந்த மாத முடிவில் குறித்த நிறுவனம் விண்ணப்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறுகிய காலத்தில் இந்த வகையான பிரகாசமான முடிவை எட்டியமை மைல்கல் என குறிப்பிடப்படுகையில், விஞ்ஞானத்தினையும் மனிதரையும் ஆட்டிப்படைக்கும் இந்த உலகப் பெருந்துயர் ஓய்விற்கு வரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள்.

கொவிட்-19 தொற்றை முறியடிப்பதற்கு மேற்கத்தைய மருத்துவ முறையைச் சார்ந்த அயராத முயற்சிகள் இவ்வாறு முன்னெடுக்கப்படுகையில், நம் நாட்டில் போதுமான மருத்துவ ஆதாரத்தினை கொண்டிராத ஆயுள்வேத மருந்தொன்றினை அரசியல்வாதிகள் ஆதரிக்க முற்பட்டு அதனால் ஏற்பட்ட அலையடிப்பை வேடிக்கை பார்க்கும் நிலையில் இலங்கையர்கள் மாறியிருக்கிறார்கள்.

ஆதாரத்தினை அடிப்படையாக கொண்ட மருத்துவ முறையாகக் கருதப்படும் மேற்கத்தைய மருத்துவமுறை, கொரோனா வைரசுடன் மோதுவது தொடர்பில் விதவிதமான பொறிமுறைகளை நடைமுறைக்கிட்டு அதனது சாதக பாதகங்களை ஆராய்ந்து வருகையில், ஏற்படுகின்ற தாமதம் ஏற்புடையதே. எனினும், அந்தத் தாமதத்தினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனையும் தரப்புக்கள் தாராளமாக இயங்கி வருகின்றன.

மந்திரித்த நீர் கொண்ட மட்பாண்டத்தை ஆற்றில் வீசி விடிவு காண முயன்ற அமைச்சர்கள் நம்நாட்டில் இருப்பது வாசகர்களுக்கு இப்போது நினைவிற்கு வரலாம்.

**முன்னதாகச் சுவதரணி அறிமுகம்**

உள்நாட்டு மருத்துவமுறை ஊக்குவிப்பு, கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய ஆரோக்கியத்திற்கான இராஜாங்க அமைச்சு முன்னதாக சுவதரணி என்னும் மருத்துவ பானத்தினை அறிமுகம் செய்திருந்தது.

இந்த அமைச்சின் ஆதரவுடன் நாவின்னவில் அமைந்துள்ள ஆயுள்வேதத் திணைக்களத்தில் இந்தப் பானத்தின் அறிமுக நிகழ்வு நடாத்தப்பட்டிருந்தது. உள்நாட்டு மருத்துவமுறை ஊக்குவிப்பு, கிராமிய, ஆயுள்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய ஆரோக்கியத்திற்கான இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடியின் பங்கேற்புடன் நடைபெற்ற அறிமுக நிகழ்வில், மல்லி, வெட்டிவேர் மற்றும் சுக்கு என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட இந்தப் பானம், கொவிட்-19 வைரசுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கவல்லது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**சுதர்சன மருந்து**

சுதர்சன.எனப்படும் ஆயுள்வேத தயாரிப்பு ஒன்றினை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தொற்றுக்குள்ளானோருக்கு வழங்கலாம் என்னும் வகையில், மருந்துப்பொருள்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான இராஜாங்க அமைச்சர் தெரிவித்த கருத்துத் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை மற்றும் இந்தியாவில் புழக்கத்தில் உள்ள ஆயுள்வேத வைத்தியத்தில் பல காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் ஓர் ஔடதமே இந்த சுதர்சன ஆகும்.

காய்ச்சல் நிலையைக் குறைப்பதற்கும் சாதாரண சளி நிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்படும் இந்த மருந்து, மலேரியாவிற்கு எதிராகவும், நீரிழிவிற்கு எதிராகவும் வைரஸ் நிலைமைகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படக்கூடியது.

53 மூலிகைச் சேர்மானங்களைச் சேர்த்துச் செய்யப்படும் இந்த மூலிகை மருந்து ஏலவே ஆய்கூடப்பரிசோதனைக்கு உட்பட்டிருப்பதுடன் சில பரிசோதனைகள் எலிகளிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.




இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றில் இந்த மூலிகை மருந்தில் காணப்படக்கூடிய ஒட்சியேற்ற தடுப்பு இயல்பு இதனுடைய மருத்துவ குணாதியசயத்திற்கு காரணமாக அமையலாம் எனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மேற்கத்தைய மருத்துவத்துடன் தொடர்புடைய மருந்தியல்துறையின் தலைவராகவும், அந்தத் துறையில் பட்டமேற்படிப்பை மேற்கொண்டவருமான பேராசிரியர் சன்ன ஜயசுமன, தற்போதைய அரசில் மருந்துப்பொருள் சார்ந்த கைத்தொழில்துறைக்கான இராஜாங்க அமைச்சராக இருக்கிறார்.

இந்தப் பின்னணியில், ஆயுள்வேதத் தயாரிப்பு ஒன்றின் மீது அமைச்சர் காட்டிய ஆர்வம், அச்சம் கலந்த வியப்பினைத் தோற்றுவித்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறை சார்ந்தோர் வெளிப்படுத்திய விசனம்**

அமைச்சரின் குறித்த கூற்று மருத்துவத்துறை சார்ந்த தரப்பினரிடையே சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், மருந்தியல்துறை மற்றும் சிகிச்சை தொடர்பான நிபுணர்களை உள்ளடக்கிய இலங்கை அமைப்பு, இது தொடர்பின் தமது உத்தியோகபூர்வ விசனத்தினைப் பதிவு செய்திருந்தது.

கொவிட் - 19 இற்கான மாற்று மருந்து **(Alternative medicine for COVID-19)** எனத் தலைப்பிட்டு தமது உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்த அந்த அமைப்பு, மருந்தொன்று விதந்துரைக்கப்படுவதற்கு முன், அதன் வினைத்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குச் சாதாரணமாகச் செய்யப்படும் நடைமுறைகள் தொடர்பில் குறிப்பிட்டிருந்தது.

அந்த வகையில் சுதர்சன என்னும் மருந்தானது மனிதரில் பரீட்சிக்கப்படும் படிமுறையை இன்னும் கடக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தது. அரச வைத்தியசாலைகளில் குறித்த மருந்தினை பயன்படுத்துமாறு மருந்துப்பொருள்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டதான கருத்துடன் ஒத்துப்போவதில் தாம் இடைஞ்சலை எதிர்கொள்வதாக வெளிப்படுத்தியிருந்ததுடன், அவ்வகையான விதப்புரை, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் குறித்த ஆதாரம் எதனையும் கொண்டிராத மருந்தின் விற்பனையை அதிகரிப்பதுடன் (மருத்துவ ஆலோசனை இல்லாமல்) சுயமாக மருந்தை உட்கொள்ளும் தீங்கான பழக்கத்தை ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தது.



அந்த அமைப்பின் தலைவியான மருந்தியல்துறை பேராசிரியர் றோகினி பெர்னான்டோபுள்ளேயின் கையெழுத்துடன் வெளியாகியிருந்த அந்த அறிவிப்பு, குறித்த மருந்து தொடர்பான விதப்புரை தொடர்பில் மீள்கவனம் செலுத்துமாறும் அமைச்சரை கோரியிருந்தது.

**அமைச்சரின் விளக்கம்**

குறித்த நிபுணர் அமைப்பின் உத்தியோகபூர்வ தெரியப்படுத்தலுக்குப் பதிலளித்திருந்த அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, குறித்த அமைப்பின் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார்.

காரசாரமான வசனப் பிரயோகங்களை உள்ளடக்கிய அந்தப் பதிலிறுப்பில், அந்த மருந்தை அரச மருத்துவமனைகளில் பயன்படுத்துவது தொடர்பில் தீரமானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்திருந்ததுடன், அந்த மருந்தைப் பரிசோதிக்கும் கட்டுப்பாட்டுப் பரிசோதனையைத் தொற்றுநோய் மருத்துவமனையில் செய்வதற்கு வசதி செய்யமுடியும் எனக் கூறினார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

வர்த்தக ரீதியாகக் குறிப்பிட்ட மருந்து இன்னமும் உற்பத்தி செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்த அமைச்சர், அந்த மருந்து ஆயுள்வேத மருத்துவ நூலில் காணப்படுமிடத்து அதனை ஆயுள்வேத மருத்துவர்கள் பிரேரிப்பதில் தடையேதும் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மருந்தியல்துறை வல்லுநர்களை உள்ளடக்கிய அமைப்பினரினால் வெளியிடப்பட்ட குறித்த அறிக்கையை தொழிற்பண்பாடற்ற ஒன்று எனச் சாடியிருந்த அமைச்சர், அதில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் வெறுமனே அந்த அமைப்பின் தலைவியினுடையதா அல்லது அந்த அமைப்பினுடையதா எனவும் கேள்வி தொடுத்திருந்தார். அமைச்சருடைய இந்த விளக்கம் கடந்த 6ம் திகதி 'தி ஐலன்ட்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

**துறை சார்ந்தோரின் பதிலடி**

தமது அறிக்கைக்கு இராஜாங்க அமைச்சரின் பதிலளிப்பு தொடர்பில் வரவேற்பு தெரிவித்திருந்த நிபுணர் அமைப்பு, தமது அறிக்கை தமது அமைப்பின் நிலைப்பாடு என்பதை தெளிவுபடுத்தியதுடன் பொதுநலன் சார்ந்தே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது எனவும் 8ஆம் திகதிய இரண்டாம் அறிக்கையில் சுட்டிக்காட்டியது.

தமது அமைப்பின் அங்கத்தவர்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் தொடர்பாடலில் தெரிவிக்கப்பட்டிருந்த அனுமானங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முற்றாக நிராகரிப்பதாகக் குறிப்பிட்ட நிபுணர் அமைப்பு, குடிமக்களுக்குப் பாதுகாப்பான வினைத்திறனான தரமான மருந்துகளை வழங்கும் முயற்சிகளுக்குத் தமது ஆதரவு தொடரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

**ஆய்வுகள் தேவை**

இலங்கைக்கே உரிய தனித்துவம் வாய்ந்த மூலிகைகளைக் கொண்டிருக்கக்கூடிய நமது உள்நாட்டு மருத்துவமுறை தனது முழு ஆற்றலையும் பயன்படுத்துமிடத்து அதனுள்ளே ஒளிந்திருக்கும் மருத்துவ இரகசியங்கள் மேற்குலகினைப் பிரமிக்க வைக்கக் கூடும். ஆனால், அந்த மூலிகைகளை ஆய்விற்குட்படுத்தி, பரிசோதனைகளை அதிகப்படுத்தி உறுதிப்படுத்திய பின்னரேயே அந்த மருத்துவ முறைகளை நடைமுறைக்கிட வேண்டும். அப்போதுதான் அவை ஆவணப்படுத்தப்பட்டு ஆதாரபூர்வமானவையாக கொள்ளப்படும்.

அதிலும் மேற்கத்தைய மருத்துவமுறை கைக்கொள்ளும் இறுக்கமான ஒழுங்குமுறை பின்பற்றப்படவேண்டும். சுதர்சன எனப்படும் மூலிகை மருந்து தொடர்பிலும் ஒரு சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அதனைப் போதுமானதாகக் கருதுவதற்கோ அல்லது திருப்தியுறுவதற்கோ முடியாத நிலையே இருக்கிறது.

கொவிட் - 19 தொற்றிலிருந்து விடுபடுவதற்காக மேலைத்தேய மருத்துவமுறையும் கீழைத்தேய மருத்துவமுறையும் முயன்று வருகையில், அது தொடர்பான திருப்திகரமான நிவாரணம் கிடைக்கும் வரையில், மூச்சுக்காற்றை வடிகட்டுவதையும் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதையும் தவறாமல் செய்வதே இப்போதைக்கு நமது இருப்பை உறுதிப்படுத்தும். ■

## கிளியோபட்ராவை வெளுப்பாக்குவதற்கு எதிர்ப்பு



எகிப்தியப் பேரழகி கிளியோபட்ராவின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் வெள்ளையின நடிகையான கேல் கடோட் நடிப்பதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. 'வொண்டர் வுமன்' படத்தின் நாயகி கேல்.

வரலாறு முழுவதும் பேரழியாகக் கொண்டாடப்படுபவர் கிளியோபட்ரா. தன் அழகால் மட்டுமே பல அரசர்களைக் கவர்ந்து நாட்டைக் காப்பாற்றிக்கொண்டவர். அவர் வெள்ளை நிறத்தவர் அல்லர், கறுப்பாகவே இருப்பார் என்கிறார்கள் ஆஸ்திரேலியன் அக்கடமி ஒவ் சயின்ஸைச் சேர்ந்த ஹில்கி துயர் போன்ற பல வரலாற்று ஆராய்ச்சியாளர்கள்.

கிளியோபட்ராவின் அப்பா மெசிடோனியன் கிரீக், சிரியா அல்லது பெர்சியா நாட்டைச் சேர்ந்தவர், கிளியோபாட்ராவின் அம்மா மெம்பிஸ் பாதிரியார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இதனால் கிளியோபாட்ரா 50 சதவீதம்தான் எகிப்திய வழித்தோன்றல் என்கிறார்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்.

இதற்கிடையே, கிளியோபட்ராவை வெள்ளை நிறத்தில் இருப்பவராகச் சித்திரிப்பதன் மூலம் வரலாற்றிற்கு வெள்ளையடிக்கக் ஹொலிவூட் முயற் சிப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கிளியோபாட்ராவாக இதற்கு முன் நடித்துள்ள நடிகைகளான எலிசபத் டெய்லர், ஹில்டிகார்ட் நெய்ல், குலௌடி கால்பர்ட் ஆகியோர் மூலம் கிளியோபாட்ரா ஒரு வெள்ளைப் பேரழகியாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளார். தற்போது, ஆஸ்கேன் ஸாய் ஜூயிஸ் பாரம்பரியத்தைச் சேர்ந்த கேல் கடோட் எகிப்தியன் பேரழகியாக நடிப்பது, வெள்ளை அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் திரைப் பழக்கத்தின் தொடர்ச்சியாக உள்ளது என்பதே எதிர்பாளர்களின் குரலாக உள்ளது.

ஹொலிவூட்டில் வெள்ளை இனத்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ஆபிரிக்க நாட்டு வரலாற்றுக் கதைகளையும் வெள்ளை நடிகர்களையே கொண்டு படமாக்குவது, ஹொலிவூட் கறுப்பினத்தவர்களை ஒதுக்குவதற்குச் சமமாகும் என்று பல தரப்பட்ட மக்களும் கண்டனங்களைப் பதிவு செய்கின்றனர்.

படத்திற்கு ஏற்ற நடிகைகளைத் தெரிவு செய்யாமல், ஹொலிவூட் வெள்ளையினத்தவர்களுக்கும், வெள்ளை நிறத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க முற்படக்கூடாது என்பதே அனைவரினதும் கருத்து. கிளியோபட்ரா என்றாலே கறுப்பழகிதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாகர்

# இது காமம் சொன்ன கதை!

சிறு கதை

வானத்தை அண்ணாந்து பார்த்து - எச்சில் உமிழும் இளமைப் பருவம், சரியென்று நினைத்துக் கொண்டே சின்னஞ்சிறு தவறுகளோடு வாழ்க்கையை நகர்த்தும் - சபலமான மனத் தோன்றல், சிரிப்பின் அடையாளம் இதுவென்று கண்டு கொண்டு - சகதிகளில் கால்பதிக்கும், நம் கதாநாயகன் காளமேகம் நடந்துபோகிறான்.

காளமேகத்தைக் கண்டவுடன் பிடித்துவிடும் அத்தனை அழகென்று யாரும் மெச்சிட முடியாது, ஆனால் பழகப்பழகத் தன் நடத்தையினால் தன்னை அழகாக வெளிப்படுத்திக் கொள்ளக் கூடிய திறமையானவன் காளமேகம்.

வாழ்கையை எப்படியேனும் ஒழுக்கமாகவே வாழ்ந்துவிட வேண்டுமென்றுதான் அவனின் வெகு நாளைய லட்சியம். ஆனால் அவனையும் மீறி அவனை சபலபடுத்துவது எது? யார்? என்ன? என்று தன்னைத் தானே சிந்தித்தவாறு கடைத் தெருவிற்குள் நடக்கிறான். கடைத் தெரு முனையில் ஒரு வடஇந்திய உணவகம் இருக்கிறது. அதில் செக்கச் செவேலென்று ஐந்து பெண்கள் பணியாட்களாகப் பணிபுரிகிறார்கள்.

அவர்களிடம் சென்று ஒரேயொரு தேநீருக்கு ஓர்டர் கொடுத்தாலும் அதைக் குடித்து முடிப்பதற்குள் பத்து முறையேனும் அருகில் வந்து - பார்த்து - சிரித்து - உரசி - உபசரிப்பதை நம் காளமேகத்தாலும் நிராகரிக்க முடியவில்லை.

என்னதான் துணிந்து சென்று ஒரு தேநீர் கூறிவிட்டு அமர்ந்துக் கொண்டாலும், மனசு ஏனோ குறுகுறுத்தது. ஏதோ தவறு செய்யத் துணிந்து விட்டோமோ எனும் அச்சம் இருந்தவனுக்கு. அதனை மறக்கடிக்க அந்தப் பெண்களுக்கு அதிக நேரம் பிடித்திடவில்லை, அருகில் வந்து நின்று கொண்டாள் ஒரு பெண், ஒருத்தி தூர நின்று பார்த்து "ம்ம்... என்னவேண்டும்" என்பது போல் புருவம் உயர்த்தினாள். அவர்களின் இறுக்காமான உடை, கவர்ச்சியான சிரிப்பு, காமம் நிறைந்த பார்வையை எப்படிக் கணக்கிடுவதென்று புரிந்து கொள்ள முடியாமல் பரிதவித்தான் காளமேகம்.

எப்படியோ, மனதை முழுதுமாகக் கட்டுப்படுத்திக்கொள்ள முனையாமல், அடிக்கடி அந்தக் கடைக்கே வர ஆரம்பித்தான். இப்படி வருவது கூடத் தவறு தானோ என்றெல்லாம் யோசித்து ஒரு முடிவெடுப்பதற்குள் அந்த ஐந்து பேருமே அவனுக்கு மிக நெருக்காமான நட்பாகிறார்கள். நட்பில் வீசிய காமவாடை மெல்ல அவனின் நெஞ்சைக் கிள்ளுகிறது.

பகலில் அவர்களோடிருந்து பெற்ற நெருக்கத்தை இரவில் படுக்கையிலும் விரித்துக் கொள்ள ஆசைப்பட்டான். அந்த ஐந்து பேரில் யாராக இருந்தாலும் பரவாயில்லை, ஒருவரையாவது... ஒரு நாளாவது... ஒரு முறையாவது... மனசு மேலே பார்த்து, அவன் மீதே எச்சில் உமிழ்ந்து கொண்டது. எச்சிலின் ஈரம் கனவுகளாய் விரிந்தன. ஏதோ ஒரு பெண்ணின், ஓர் இரவிற்காக மட்டும் தயாராகி, நெஞ்சு நிமிர்த்தி நின்று கொண்டான் காளமேகம்.

ஆனால், அவனின் போதாத காலம், அந்த ஐந்து பேருமே அவனிடம் நீயா நானா என்று பழகுகிறார்கள். இவனும் கிடைக்கும் நேரம் பார்த்து அவர்களிடம் எதையோ உள்மறைத்துப் பொடிவைத்து பொடி வைத்துப் பேசுகிறான். அவர்களும் அதைச் சிரித்து ரசிக்கிறார்கள். காலநேரம் பார்க்காது அவர்களுடன் தங்க ஆரம்பிக்கிறான், அவர்களும் அனுமதிக்கிறார்கள். மெல்லத் தொட்டுப் பேச முயல்கிறான், தாராளமாக இடம் தருகிறார்கள். தோள் மீது கைபோட்டுப் பார்க்கிறான். தயங்காது அணைத்துக் கொள்கிறார்கள். இது [illegible] தகாத இ[illegible]றான் - சடாரென விலகிக் கொண்டார்கள்.



❝ பகலில் அவர்களோடிருந்து பெற்ற நெருக்கத்தை இரவில் படுக்கையிலும் விரித்துக்கொள்ள ஆசைப்பட்டான். ❞

ஏன்... ஏன்... ஏனென்று கோபம் வந்தது காளமேகத்திற்கு. கோபத்தில் காமம் தலைக்கேறிப் பலவந்தமாகப் பிடித்திழுத்தான் கைக்கெட்டிய ஐந்து பேரில் ஒருத்தியை. சற்றும் யோசித்திடவில்லை, படாரென தூக்கி வெளியே வீசினார்கள் காளமேகத்தை. அந்த வீசலில்தான் சிந்திக்கத் துவங்கினான் காளமேகம்.

ஆம், இதுதான் இவர்கள். வியாபாரிகள். தந்திர வியாபாரிகள். இலவசமாக ஒரு சிரிப்பைக் கொடுத்து இரண்டு குவளைத் தேனீரை இலகுவாக விற்கத் தெரிந்தவர்கள். வெறும் தந்திரசாலிகள். தவறானவர்கள் அல்லர். தவறான வீட்டினர் அல்லர். தூர நின்று அவர்களின் வசீகரத்தைப் பார்க்க மட்டுமே பழகிக் கொண்ட நம்மால் நெருங்கிப் பார்த்து அவர்களின் வயிற்றுப் பசியை உணர முடிவதில்லை. காளமேகம் அதை உணர்ந்து கொண்டான். தொட்டதும் சிரித்தவர்கள்; படுக்க என்றதும் காறி உமிழ்ந்ததில் புரிந்து கொண்டான்.

அவமானம் வலித்தாலும், காமம் அவனை வெட்கப் படவைத்ததை சிந்திக்கும் தருணமாக இதை எடுத்துக் கொண்டான் காளமேகம். எங்கோ உண்டு திரிந்த வீட்டில் ரெண்டகம் செய்வதாய் யாரோ சொன்ன பழமொழி அவனருகே நின்று அவனைப் பழிகாட்டிவிட்டுப் போனது.

நிதானமாக யோசித்தான் காள மேகம். மனதில், வெளிவர முடியா ஒரு சஞ்சலம் அவனை குற்றவாளியாகவே நிறுத்திக் கொண்டிருப்பதை அவனால் எதிர்த்துவிட இயலாதவனாய் மெல்ல உறங்கிப் போனான். உறங்கியெழுந்த மறுநாளின் காலை வெளிச்சத்தில் கண்ணாடியைப் பார்க்காமலே அவன் முகம் கறுத்திருப்பதை அவனால் உணர முடிந்தது.

ச்சே! இப்படியாகிப் போச்சே...! எப்படி அவ்வளவு இணக்கமாக பழகினார்களோ, இப்படித் தரமின்றி நடந்து கொண்டோமே... என்ன செய்யலாம்? மெல்ல நடந்து மீண்டும் அந்தக் கடைக்கே வந்தான். வெளியில் போடப்பட்டிருந்த மரப் பலகை மேசையிலமர்ந்து அமைதியாய் எதையோ யோசித்துக் கொண்டிருக்க, செல்வா வந்தான்.

அவனுக்கும் சேர்த்து பஜ்ஜி சொன்னான். அந்த ஐந்து பெண்களில் ஒருத்தி கூட வெளியே வரவில்லை. காளமேகம் சற்றுக் குரலை உயர்த்தி "என்னங்க... நான் - காளமேகம் வந்திருக்கிறேன், ரெண்டு பஜ்ஜி வேணும்" என்றான். அந்தப் பெண்களின் தகப்பனார் கல்லாவிலிருந்து எழுந்து சென்று பஜ்ஜி கொண்டு வந்தார்.

அவனை ஒரு சந்தேகத் தொனியில் பார்த்துவிட்டு அவனுக்கருகிலயே அமர்ந்து கொண்டார். ஒரு வேளை, எங்கு இந்த நடத்தை கெட்டவன் உள்ளே சென்று நம் பெண்களிடம் தகாதவாறு நடந்து விடுவானோ என்று பயந்திருக்கலாம் அவர். காலமேகத்திற்கு இந்தச் செய்கை வருத்தத்தை அளித்தது. அதற்குள் அவனுடைய கைப்பேசி ஒலிக்க, எடுத்து "வணக்கம் காளமேகம் பேசுகிறேன்.. யார் பேசுறீங்க?" என்றான்.

சிங்கப்பூரிலிருந்து அவனது நண்பன் சௌந்தர் பேசினான். அவன் பிலிப்பைன்ஸ் பெண் ஒருத்தியைக் கர்ப்பமாக்கிவிட்டது பற்றிச் சொன்னான். திடீரென்று அவன் தன் கதையைச் சொன்னதும் காளமேகத்திற்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் சிங்கப்பூரில் இதெல்லாம் சாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணம் என்று சொன்ன நண்பன், தான் சொன்னதன் பேரில் அந்தப் பிலிப்பைன்ஸ் பெண் கருவைக் கலைத்து விட்டாள் என்றும் சொன்னான். முக்கியமாக இன்னொன்றையும் சொன்னான். அது, தங்களுக்கிடையில் காதல் ஏதும் இல்லை என்பது.

பிறகெதற்குத் தன்னிடம் இந்தக் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கின்றான் என்பது காளமேகத்திற்குப் புரியவில்லை. இவன் மண்டையைச் சொறிந்துகொள்ளும் முன்பாக அவனே அந்த இடத்திற்கு வந்தான்.

இவன் கர்ப்பமாக்கிய பிலிப்பைன்ஸ் பெண் கர்ப்பம் என்று தெரிந்ததும் அவள் வேலை செய்து வந்த நிறுவனத்தின் தலைவி அவளை வேலையைவிட்டு நிற்பாட்டியதுடன் பிலிப்பைன்சுக்கே திருப்பி அனுப்பியும் விட்டாளாம். தன்னால் அவளுக்கு வேலையும் போய் வருமானமும் இல்லாமல் போய்விட்டதால் குற்றவுணர்ச்சியில் வாடிக்கொண்டிருக்கின்றான் என்பதே நண்பன் சொன்ன செய்தி.

அவள் பாவம் என்று தோன்றினால் அவளையே கலியாணம் செய்யவேண்டியதுதானே என்று நான் நியாயம் பிளந்தேன்.

அதில் அவளுக்கு உடன்பாடில்லை என்றான். பதிலாக இவனைப் பிலிப்பைன்ஸ் வரச்சொல்லி வற்புறுத்துகிறாளாம். இந்த நிலமையில தான் என்ன செய்யிறது என்பதுதான் சௌந்தரத்தோட பிரச்சினையே. அந்தப் பெண்ணின் அம்மா, அக்காவெல்லாம்கூட அவனைப் பிலிப்பைன்ஸ் வரச்சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறார்களாம்.



இவனுக்கு அவளைக் கட்டிக்கொண்டு வாழ விரும்பமில்லை. இங்கே அம்மா, அப்பா, உறவுகள் என்னசொல்லுமோ அவளை ஏற்றுக்கொள்ளுமே என்கிற கவலை.

"பிறகு எப்படிடா உன்னால இப்படி ஒரு தவறைச் செய்ய முடிந்தது? உணர்ச்சியை அடக்க முடியாதவன் ஊருக்கு வந்து கல்யாணத்தைப் பண்ணி தொலைக்கிறதுதானே? வாழ்கையை இவ்வளவு அசிங்கமா வாழ்ந்துட்டோமேன்னு, பின்னாடி உணர்ந்து வருந்துறது எவ்வளவு பெரிய வேதனை தெரியுமா? நீ ஒண்ணு செய், உடனே ஊருக்குப் புறப்பட்டு வந்துடு. எப்படியும் அந்தப் பொண்ணு உன்னால கஷ்டப்படத் தான் போகுது. எது எல்லையோ அதை மீறிட்ட.

இனி மீறுவதற்கு என்ன இருக்கு. சீக்கிரம் அங்கிருந்து புறப்படுற வழியைப் பாரு. வரும் வரை அந்தப் பெண்ணிடம் எந்தத் தொடர்பும் வேண்டாம். தொலை பேசி எண்களை மாற்று. கடிதம் போடாதே. கொஞ்ச நாள் அழுதுட்டு மறந்துடும். பெத்துக்க முடியாதுன்னு தெரிந்தும், கலந்துட்டு, கலைக்கத் துணிஞ்சவ மறக்கத் துணிய அதிக அவகாசம் எடுக்காது" என்று சொன்னேன் நான்.

ஆனால் சௌந்தரத்திற்கு அதுவும் ஏற்புடையதாக இல்லை. மனச்சாட்சி உறுத்துகிறதாம். அவள் பாவமாம். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவளாம். உழைப்புக்காகச் சிங்கப்பூருக்கு வந்த இடத்தில் தான் கொஞ்சம் அப்பிடி இப்படி இருந்து காசு பார்த்தாளாம்.

காளமேகத்திற்குக் கோபம் வந்தது. "இதப்பாருடா சௌந்தர். வாழ்க்கை உயர்வானது. தாம்பத்தியம் வெறும் உடல் கூடல் இல்லை. மனதின் சங்கமம், அன்பால் தன்னை அர்ப்பணிக்கிற ஆழமான இன்பம். நமக்குள் இனி எந்தப் பாகுபாடுமே, எந்த மறைவுமே இல்லை நாம் ஒன்றரக் கலந்தவர்களெனும் இரு மனதின் நெருக்கத்தின் ஒப்பந்தம். அதை வெறும் உணர்ச்சிக்கு மட்டும் விற்றுவிடக் கூடாது. நாளைக்கு இன்னொரு பெண்கூட வாழும்போது இந்தக் குற்ற உணர்வு உனக்கு உறுத்தாமையா போய்டும்?" என்றேன் கோபத்துடன்.

சௌந்தர் மீண்டும் கேட்டான், இப்ப என்னதான் செய்யிறது என்று. நான் முதலிலேயே சொன்னது போன்று ஊருக்கே வந்துவிடவும் தயார் என்றான். அதுவரைக்கும் இந்தக் கதையை யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் என்னிடம் ஆணை பெற்றுக்கொண்டான்.

எழுந்து பஜ்ஜிக்குப் பணம் கொடுத்துவிட்டு வெளியே வர, வாசலில் அந்த ஐந்து பெண்களும் ஒளிந்தவாறு நின்றுகொண்டிருந்தார்கள். அதிகபட்சம் காளமேகம் பேசியது அவர்களுக்கும் கேட்டிருக்கக்கூடும்.

காளமேகத்திற்குத்தான் வெட்கமாக இருந்தது. சற்று முன் சௌந்தரிடம் தான் பேசியதெல்லாம் தனக்காகவே சொல்லிக் கொண்டதுபோல அவனுக்கே மீண்டும் மீண்டும் நினைவில் வந்தது. அவனை நினைத்து அவனே வருத்தப்பட்டான். வாசலில் நின்று கொண்டிருந்த அந்த ஐந்து பெண்களிடமும் கையெடுத்து வணங்கி மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது.

அதற்குள் அவர்களிலிருந்து ஒருத்தி வெளியே வந்து காளமேகத்திற்கு எதிரே நின்றாள். அவன் குற்ற உணர்வோடு அவளைப் பார்க்க, அவளே அவனிடம் "மன்னித்துவிடுங்கள் நாங்கள் அந்த எண்ணத்தில் பழகவில்லை" என்றாள்.

"இனி இங்கு வரமாடீங்களா?"

"வருவேன்"

"எங்களிடம் பேச மாட்டீங்களா?"

"பேசுவேன்"

"தவறாக நினைத்தெல்லாம் தொட மாட்டீங்களே?"

"...."

சடாரென நிமிர்ந்து அவளைப் பார்த்தான். செவிட்டில் அறைந்தது மாதிரி இருந்தது காளமேகத்திற்கு. அவன் ஒன்றுமே பேசவில்லை. ஆயினும், சத்தியமாக [illegible] அங்கே [illegible].

## நீண்ட நாள் பிரதமர்




பாரசீக வளைகுடாவில் உள்ள தீவு நாடு பஹ்ரைன். அந்த நாட்டின் பிரதமர் இளவரசர் கலிஃபா பின் சல்மான் அல் கலிஃபா. பஹ்ரைன் மன்னர் ஹமாதின் உறவினரான இவர் அந்த நாட்டு அரச குடும்பத்தில் மிகவும் சக்தி மிக்க நபர். 2011ஆம் ஆண்டு அரபு வசந்தம் என்று அழைக்கப்பட்ட போராட்டங்கள் அரபு நாடுகளில் நிகழ்ந்தபோது இவரைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

இந்த அரபு வசந்தம் இறப்புக்கள் குழப்பங்கள் மற்றும் பேரழிவு ஆகியவற்றையே சாதித்தது என்று தெரிவித்த அவர் தனது பதவியில் தொடர்ந்தார். இந்த நிலையில் தற்போது அவர் தனது 84 ஆவது வயதில் கடந்த புதன் கிழமை இறந்துள்ளார். பஹ்ரைன் சுதந்திரம் அடைந்த பின்னர் 1971ஆம் ஆண்டில் அந்த நாட்டின் பிரதமரான அவர் இறக்கும்வரை அந்த நாட்டின் பிரதம ராகவே இருந்துள்ளார். உலகின் நீண்ட நாள் பிரதமர் என்ற பெயரையும் புகழையும் தட்டிச் சென்றுள்ளார் அவர். நீண்ட நாள் பிரதமர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வாதிகாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

யங்களையும் நோக்கத் தவறிவிட்டார்கள். நாட்டின் நிதிநிலை அறிக்கையை தலைமை அமைச்சரும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் முன்வைத்த பின்னர் நடந்த விவாதத்தில் கொரோனாவின் அச்சத்தின் கீழ் பதுங்கிக் கிடந்த மற்றொரு அபாயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளியே இழுத்துவிட்டார்.

இலங்கையின் அரசமைப்பு உறுதிப்படுத்தும் மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் தரைப்படைத் தளபதி விடுத்த மேல் மாகாணத்திற்கான தடை அறிவிப்பு எந்தச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்டது என்று நாடாளுமன்றத்தில் அவர் கேள்வி எழுப்பினார்.

இத்தகையதோர் உத்தரவைப் பிறப்பிப்பதற்கான சட்ட அங்கீகாரம் தரைப்படைத் தளபதிக்கு இருக்கின்றதா என்கிற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

இந்தக் கேள்வி உள்ளிட்ட அவரது நாடாளுமன்ற உரையின் உள்ளார்ந்த பொருள், இன்றைய ஆட்சியாளர்கள் அரசமைப்பை மதிக்காமல் நாடாளுமன்றத்தை மதிக்காமல் அந்தக் கட்டமைப்பை மீறிச் செயற்படுகின்றார்கள் என்பதே.

"இது ஓர் அரசர் தான் விரும்பியவாறு பொதுமக்களுக்குக் கட்டளை பிறப்பிப்பது போன்றுள்ளது" என்று ஆட்சியாளர்களின் செயலைச் சுமந்திரன் வர்ணித்துள்ளார்.

அதாவது நாடு சர்வாதிகாரத்தை நோக்கி மெல்ல மெல்ல நகரத் தொடங்கிவிட்டது என்பதற்கான கட்டியத்தையே அவர் கூறியிருக்கின்றார்.

கடந்த ஆட்சிக் காலத்தின்போதும் படைத்துறை மயப்பட்ட சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை ராஜபக்சக்கள் வழிநடத்திச் சென்றமையும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டதற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்று.

2015ஆம் ஆண்டு தேர்தல் தோல்வியுடன் தாங்கள் பாடம் படித்திருக்கின்றோம் என்றும் இனிமேல் அத்தகைய தவறுகள் இடம்பெற மாட்டா என்றும் ராஜபக்சக்கள் வாக்குறுதியளித்தார்கள்.

ஆனால், மீண்டும் ஆட்சியைப் பிடித்ததும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்ட கதையாக நாட்டை பெரும்பான்மையான நிதி மூலங்களையும் தம் வசப்படுத்தி வைத்திருப்பதுடன் சட்டத்தைப் புறக்கணித்த, அரசமைப்பைப் புறக்கணித்த சர்வாதிகாரத்தை நோக்கியே ஆட்சி வழி நடத்தப்படுகின்றது என்பதையே அண்மைய சம்பவங்கள் தெளிவாக்குகின்றன.

கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கட்டடத் திறப்பு விழாவிலும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டமை, நாடாளுமன்றின் அனுமதி இன்றியே கொரோனா தடுப்பு நடவடிக்கை களுக்கான நிதியை அதிபர் கையாண்டமை என்பன இதற்கு உதாரணங்கள்.

ஏற்கனவே பொது நிர்வாக சேவை அதிகாரிகளுக்குரிய பதவிகள் பலவற்றில் படைகளின் உயர் தளபதிகள் அமர வைக்கப்பட்டிருக்கின்றார்கள். எந்தவொரு விடயத்திலும் அரச அதிகாரிகளும், பணியாளர்களும் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ள அதிபர் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மூலம் அதிபருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவையெல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும்போது நாடு சர்வாதிகாரத்தை நோக்கிய பாதையில் தெளிவாக முன்னேறி வருவதான தோற்றப்பாட்டைத் தவிர்க்க முடியவில்லை.

உறுதியற்ற எதிர்க்கட்சிகளே எஞ்சியிருக்கும் நிலையில் இந்தப் பயணத்தை தடுத்தும் நிறுத்தும் சக்தி யாருக்குண்டு?



## தீபாவளி ஸ்பெஷல் இனிப்பு உணவு!

# அதிரசம் பச்சை அரிசி பலகாரம்

சமையல் சமையல்

கொரோனாத் தொற்று அதிவேகமாகப் பரவிவருகின்ற சூழலில் உறவுகள் ஒன்றுகூடுகின்ற கொண்டாட்டங்களைத் தவிர்ப்பதே சிறந்தது. ஒன்று கூடல்கள், களியாட்டங்களைத் தவிர்த்திருக்கின்ற இந்தத் தீபாவளிப் பண்டிகையன்று நாம் வீட்டில் இனிப்புப் பலகாரம் ஒன்றைச் சமைத்துச் சுவைப்போம். தீபாவளிப் பலகாரம் என்றால் அதில் அதிரசம் முக்கிய பங்கு வகிக்கிறது. பச்சையரிசிப் பலகாரமான வெல்ல அதிரசத்தை எப்படிச் செய்வது என்று பார்ப்போம்.

**என்னென்ண பொருள்கள் தேவை?**

*பச்சையரிசி அரிசி - அரைக் கிலோ, வெல்லம் - 300 கிராம், ஏலக்காய் - சிறிதளவு, நெய் - 1 மேசைக் கரண்டி, மரக்கறி எண்ணெய் - பலகாரத்தைப் பொரித் தெடுப்பதற்குத் தேவையான அளவு.*

**எப்படிச் செய்வது?**

*பச்சை அரிசியை 4 மணி நேரம் ஊற வைத்து நீரை நன்கு வடிகட்டி அரிசியைத் தூய துணி ஒன்றில் பரப்பி விடுங்கள். நீர் வடிந்தால் போதுமானது - அதிக நேரம் காயக் கூடாது. சற்று ஈரமாக உள்ள போதே பச்சை அரிசியை அரைத்துக் கொள்ளுங்கள் (மிக்சி). அரைத்த மாவை நைசாகப் பிசைந்து கொள்ளுங்கள். வெல்லத்தைத் தூளாக்கி தடிப்பான பாத்திரத்தில் போட்டு வெல்லம் மூழ்கும் அளவுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடுங்கள். வெல்லம் கரைந்துருகிப் பாகுப் பதமாகும் வரை அதைக் கொதிக்க விடுங்கள். கையில் எடுத்துத் தொட்டால் பிசுபிசுப்பாக இருக்கும் பதம் வந்தவுடன் அதில் ஏலக்காயைப் பொடியாக்கிப் போடுங்கள். பின்னர் அரிசி மாவைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவிக் கட்டியாகிவிடாதவாறு கிளறிக் கொண்டிருங்கள். மா நன்கு வெந்து குமிழ் குமிழாக வரும்போது நெய் ஊற்றி இறக்குங்கள். ஆறிய பின் காற்றுப் புகாத, ஈரமில்லாத டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள. இந்த மா 10 முதல் 15 நாள்கள் வரை பழுதாகாமல் இருக்கும். தேவைப்படும் போது அதிசரங்களாகத் தட்டி எண்ணெயில் பொரித்தெடுத்துக்கொள்ளுங்கள். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற சத்தான சுவையான இனிப்புப் பலகாரம் இந்த அதிரசம். மாவு கிளறியவுடன் அதிரசம் தயாரிப்பதைவிட இரண்டு நாள்கள் கழித்து அதிரசம் செய்தால் ருசி தூக்கலாக இருக்கும்.*



## இதில் அரசியல்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பில் தானும் இருப்பேன் என்று உறுதியளித்திருக்கிறார். அத்தோடு இது ஒரு திறந்த அமைப்பு. இதில் எவரும் சேரலாம்.

**நீங்கள் தொடக்கத்தில் சொன்னது, அரசால் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடிகளை, அடக்குமுறைகளை சட்ட ரீதியாக எதிர்கொள்வதற்கு இந்த அமைப்பு மக்களுக்குத் துணை நிற்கும் என்பது. அப்படிப் பார்த்தால் ஆட்சியில் இருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த அமைப்பில் இருப்பது என்பது அடக்குபவர்களும் அடக்கப்படுபவர்களும் ஒரே அமைப்பில் சேர்ந்திருக்கும் ஒரு நிலையைக் குறிக்கும். இது இந்த அமைப்பு ஒரு கொள்ளைத் தெளிவற்றது என்பதைக் காட்டாதா? இது ஒரு முரண் நிலை இல்லையா?**

இல்லை அப்படி ஏற்படாது என்று நான் நம்புகின்றேன். மற்றைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அரசியல் ரீதியாக எம்மோடு மாறுபட்டாலும்கூட மக்களுக்கு எதிரான அரசின் செயற்பாடுகளை எதிர்ப்பவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அதைப் பகிரங்கமாகச் சொல்லக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகையால் அத்தகைய ஒரு முரண் நிலை இப்போதைக்கு ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அத்தோடு இந்த அமைப்பு தமிழ் மக்களுக்கு மட்டுமான ஓர் அமைப்பாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. தொடக்கத்தில் அப்படித்தான் இருக்கின்றது. கடந்த காலங்களில் பல சிங்களச் சட்டத்தரணிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாதாடியிருக்கிறார்கள். அவர்களும்கூட இந்த அமைப்பில் சேரலாம். தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல சிங்கள மக்களின் உரிமைகள் நசுக்கப்படும்போது அவர்களுக்காகவும் இந்த அமைப்பு குரல் கொடுக்கும் என்பதை மூன்று மொழிகளிலும் எமது அறிக்கையில் தெரி[illegible] இந்த [illegible] கண்டால் அது மிக நல்லதொரு விடயம்.

## நிலமிழக்கும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவசியம் என்பதைத் தெரிந்துகொண்டு முஸ்லிம் தலைவரான அஷ்ரப் தீகவாபி விகாரைக் காணிகளையே தமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் அளவுக்கு முன்னேறியிருந்தார். வாகரைக்குத் திரும்பும் நாவலடிச் சந்திக்கு அருகில் ஜெயந்தி யாய, ரிதிதென்ன, காத்தான் குடியை அண்டிய பகுதிகள் என முஸ்லிம்களைக் குடியேற்றினார் ஹிஸ்புல்லா.

முள்ளியவளை கற்பூரப் புல்வெளி மற்றும் முள்ளியவளையை அண்டிய பகுதிகளில் காணி பிடிப்பதற்கு ரிசாத் பதியுதீன் முயன்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவில் முஸ்லிம்கள் தமக்கான குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தினால் அதை அபிவிருத்தி செய்வதற்காக மகாவலி நீரைப் பயன்படுத்துவதற்கும் பின்னிற்க




மாட்டார்கள். ஆனால் சிறுதொகைத் தமிழ் அரசியல்வாதிகளாலும், மேட்டுக் குடியினராலும் பாதிக்கப்பட்ட பெருந்தொகைத் தமிழ் மக்கள் நிலமற்றவர்களாக இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் வடக்குக் கிழக்கில் அரச அதிபர்களாகவும், பிரதேச செயலர்களாகவும் இருந்தவர்கள் தமிழன் என்ற உணர்வுடன் மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்து வழங்கியிருந்தால், திருகோணமலையில் நடந்தது போலச் சிங்களக் குடியேற்றங்களை இலகுவில் மேற்கொண்டிருக்கமுடியாது.

ஈழத் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தடையாகவும், பெரும் தடையாகவும் இருப்பது சாதியம் மாத்திரமே. அதைக் களைந்து விடுவதில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறில்லாத நகர்வுகள் வெறும் ஏமாற்று வேலைகளன்றி வேறல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சம்பந்தர் கடையடிச் சமா...

மாரி காலத்தில எப்ப மழைவரும் எண்டு யாருக்கும் தெரியாது. அதனால போன கிழமை கடக்குப் புடக் கெண்டு சொல்லிப்போட்டு ஓடிட்ரன். இருட்ட முன்னம் வீட்ட போகாட்டி வீட்டில விழுகிற மங்களம் இருக்குதே அதைப் போல இந்த உலகத்தில வேறொண்டும் கிடையாது பாருங்கோ... அனு பவப்பட்டனியளுக்குத் தெரியும்தானே..? இண்டைக்கும் இருட்ட முன்னர் வீட்ட போகவேணும்....

போன கிழமை மாவையப்புவின்ர மகனை வைச்சு தன்ரை காய் நகர்த்தலைச் செய்யுறதுக்கு குதிரை - அப்பிடிச் சொன்னாத் தானே உங்களுக்கு விளங்குது, ஏதோ எங்கட ஊர்க்காரன், மரைக் குளத்தடித் தம்பி எண்டா உங்களுக்கு விளங்குதில்லையே? - பட்டபாட்டைச் சொன்னனான் எல்லோ!

இப்ப தம்பிக்கு ஏதோ போறாத காலம் போலக் கிடக்குது. அவர் செய்யுற வேலையல் எல்லாமே சறுகிப் போறது ஒரு புற மிருக்க - அவரட்ட அத்தனை நடவடிக்கைகளும் இப்ப உடனுக் குடன வெளியில வருகுது பாருங்கோ... அதுதான் எனக்கு விளங்கேல்ல.

வருசக் கடைசி... இப்ப எல்லா உள்ளூராட்சி சபைகளிலையும் பட்ஜெட் போடுற சீசன். உவை சைக்கிள்காரர் தங்களுக்குள்ள பிடுங்குபட்டு, எல்லாச் சபையளிலையும் தங்கட சுய ரூபங் களைக் காட்ட வெளிக்கிட்டிருக்கினம். என்னதான் தமிழ்த் தேசி யம் பேசினாலும், தமிழருக்குள்ள ஒற்றுமை வர விடமாட்டம் எண்டு பந்தயம் கட்டிக்கொண்டு நிக்கினம். வேலணையில இருந்த ஒரே ஒரு சைக்கிள் தம்பி வாக்களிச்சிருந்தா நிலைமை மாறியிருக்கும். ஆனா நடு நிலமையா நிக்கிற பேர்வழி எண்டு ஈ.பி.டி.பிக்கு முண்டு குடுத்திருக்கிறார் அவர். அதைப்போல இனி நடக்கப்போற வாக்களிப்புகளிலையும் இவங்கட உண்மை யான முகம் தெரியப் போகுது பாருங்கோ.....

“அண்ணை... எங்கட கரவெட்டிப் பிரதேச சபையில என்னண்ண நடக்கப்போகுது? பட்ஜெட் வெண்டா என்ன தோத்தா என்ன எங்கட தவிசாளர் வெளியிலதான் எண்டுறாங்கள். மெய்யா லுமே?” என்றான் சுப்பன்.

ஓம் தம்பி... தவிசாளர் பட்ஜெட் வெண்டதும் தானாக வெளி யால போறதா எழுதிக் குடுத்தவர்தான். ஆனா அதை விலக்கிக் கொள்ளுறன் எண்டு இப்ப எழுதிக் குடுத்துட்டார். அதென்னண்டா, பட்ஜெட்டை எப்பிடியும் தோக்கடிப்பம் எண்டு கூட்டமைப்பில இருக்கிற ஒரு சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவை. அமுல் பேபியின்ர அப்பாவைத் தவிசாளர் ஆக்க வேணும் எண்டு, அந்த பேபி லகரங்களைக் காட்டினதாயும் தகவல்... அதனால... கூட்டமைப்பின்ர உறுப்பினர்கள் சில பேர் பட்ஜெட்டுக்கு எதிரா வாக்களிச்சு எங்கட தவிசாளரை இறக்கிப் போடுவினம் எண்ட பயத்திலதான், தவிசாளர் கட்சித் தலைமையிற்ற போய் பட் ஜெட்டை வெண்டு தந்து போட்டு நான் போறன் எண்டவர். தலைமை அதில எடுத்த முடிவைவிட கட்சியின் சீனியர் காட்டின வித்தை என்ன எண்டெல்லாம் சொன்னானெல்லே?

இப்ப கரவெட்டிக்கு மட்டுமில்ல, கூட்டமைப்பின்ர எந்த சபையா இருந்தாலும், அத்தனை உறுப்பினர்களும் பட்ஜெட் கூட்டத்துக்குக் கட்டாயமாகப் போகவேணும், சாதகமாத்தான் வாக்களிக்க வேணும் எண்டு "பணிக்கப்பட்டு" இருக்குதாம்.

அதென்ன புதுசான பணிப்பு? இவ்வளவு காலமா - கிட்டத்தட்ட மூன்று வருசமா சபைகளில என்ன நடக்குது, ஆர் ஆரெல்லாம் உறுப்பினர்கள் எண்டே தெரியாத கட்சித் தலைமை இவ்வளவு கடுமையா ஏன் இப்பிடி எழுதுது எண்டு அறிய வெளிக்கிட்டா....

தப்பித் தவறி ஆராவது ஒரு உறுப்பினர் எதிர்த்து வாக்களிச்சா, அவரைக் கட்சியை விட்டு நிப்பாட்டேக்க... எங்களுக்குத் தெரி யாது... அவையள் சொல்லேல்ல... எண்டு சொல்லப்படாது பாருங்கோ... அதுக்காகத் தானாம் இந்த “எழுத்து மூலப் பணிப்பு” அப்பிடி யாரும் சொல்லி - சைக்கிள் பெடியள் மாதிரி கோட்டில போய் நிண்டாலும் தங்கட பக்கத்தில தப்பில்லை எண்டு சொல் லுறதுதான் தலைமையின் பிளானாம்.

என்னதான் சொன்னாலும் அனுபவத்துக்கு முன்னால மற்ற தொல்லாம் எங்க?

ஆதிரன்

# எப்படிப் பார்த்தாலும் சாவுதான்!

● க.குமாரதாஸன், பாரிஸ்.


வலுவான வைரஸைப் பரப்புவதாகக் கூறி சுமார் 17 மில்லியன் மிங் விலங்குகளை கொன்றொழித்துவிட டென்மார்க் முடிவு!

தோலுக்காக வளர்க்கப்படும் மிங்(*mink*) எனப்படும் சிறிய பாலூட்டி விலங்குகள் அனைத்தையும் கொன்றொழித்துவிட டென்மார்க் அரசு தீர்மானித்துள்ளது.

அதன்படி நாடு முழுவதும் பண்ணைகளில் உள்ள சுமார் 17 மில்லி யன் மிங் விலங்குகள் அடுத்துவரும் நாள்களில் கொல்லப்படவுள்ளன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

மிங் விலங்குகள் ஊடாக வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் “கொவிட் 19” வைரஸின் மாற்றமடைந்து தீவிரம் பெற்ற ஒரு வடிவத்தை வெளிப்படுத்தி உள்ளன. அது மனித நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீனமாக்கும் தன்மையை அதிகம் கொண்டிருப்பதால்

எதிர்காலத்தில் தடுப்பு மருந்துகளின் செயற்பாட்டுத் திறனை அது கேள்விக்குள்ளாகலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.



இத்தகைய ஆபத்தைக் கவனத்தில் கொண்டே மிங் விலங்குகளைக் கூண்டோடு ஒழித்துவிடத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக டென்மார்க் பிரதமர் மெற் பிரெட்றிக்சென் (*Mette Frederiksen*) தெரிவித்திருக்கிறார்.

கனத்த மனதுடன் இந்தத் தீர்மானத் துக்கு வந்துள்ளதாகக் கூறியுள்ள அவர், வாழ்வாதாரத் தொழிலை இல்லா தொழிப்பதற்காக நாடு முழுவதும் உள்ள மிங் பண்ணையாளர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.


உலகில் குளிர்கால ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் மிங் தோலை ஏற்றுமதிக்காகப் பெருமளவில் உற் பத்தி செய்யும் முதல் நாடு டென்மார்க் ஆகும்.

**விலங்குகள் அனைத்தையும் கொல்லும் முடிவு அடுத்த சில வருடங்களில் மிங் பண்ணைத் தொழிலை அங்கு முற்றாக முடிவுக்குக் கொண்டு வந்துவிடும்**

விலங்குகள் அனைத்தையும் கொல் லும் முடிவு அடுத்த சில வருடங் களில் மிங் பண்ணைத் தொழிலை அங்கு முற்றாக முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என்று தெரிவிக்கப்படு கிறது.


அண்மையில் இதே போன்று நெதர் லாந்தின் மிங் பண்ணைகளில் இருந்து பலருக்கு வைரஸ் தொற்றியதை அடுத்து அந்நாட்டிலும் ஆயிரக்கணக்கில் விலங்குகள் அழிக்கப்பட்டன.

மிகவும் சாதுவான மிங் விலங்குகள் பொதுவாக உடலில் வைரஸைக் காவுவதில்லை. ஆனால் அவற்றை மிக நெருக்க மாகப் பெரும் எண் ணிக்கையில் கூண்டுகளில் அடைத்து வளர்க்கும் பண்ணை முறைகளா லேயே அவை தொற்றுக்கு உள்ளாகின்றன என்று விலங்குரிமைப் பாது காவலர்கள் குற்றச்சாட்டு கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு நலம் தரும் தீபாவளி எண்ணெய் குளியல்





“சதுர்நாட்கொருக்கால் நெய் முழுக்கைத் தவிரோம்” அதாவது, நான்கு நாள்களுக்கு ஒருமுறை எண்ணெய்க் குளியல் அவசியம் என்கிறது சித்த மருத்துவம். கோடைக்காலம் என்றால் வாரம் இருமுறை, மழைக்காலம் என்றால் வாரம் ஒருமுறை எண்ணெய்க் குளியல் எடுக்க வேண்டும்.

காலமாற்றத்தால் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கமே கிட்டத்தட்ட இல்லாமல் போய் விட்டது. சித்திரை வருடப் பிறப்பிற்கு மருத்து நீர் வைத்துக் குளிப்பது போலவே தீபாவளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் இன்னும் சில குடும்பங்களில் மட்டும்தான் இருக்கிறது. பழக்கமே இல்லாமல் திடீரென்று எண்ணெய்க் குளியல் போட்டால் சளி, காய்ச்சல் போன்ற பிரச்சினைகளும் சிலருக்கு வந்துவிடுகின்றன.

**ஏற்ற எண்ணெய் எது?**

நல்லெண்ணெய் எண்ணெய்க் குளியலுக்கு மிகவும் உகந்தது. உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை எண்ணெய் தடவி (சொதசொதவென எண்ணெய் தடவத் தேவையில்லை. உடல் முழுக்க எண்ணெய் ஒட்டியிருக்கும் அளவுக்குத் தடவினால் போதும்). அரை மணிநேரம் வெயிலில் இருந்துவிட்டு பின்னர் குளிப்பதே முறையான எண்ணெய்க் குளியல் ஆகும்.

அதேபோல சிலர் எண்ணெய் தேய்த்துக் கொண்டு பச்சைத் தண்ணீரில் குளித்துவிடுவார்கள். இதனால் சளி, காய்ச்சல் போன்ற பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, எப்போது எண்ணெய் தேய்த்துக்கொண்டாலும் வெந்நீரில் தான் குளிக்க வேண்டும். “எண்ணெய் பெறின், வெந்நீரில் குளிப்போம்” என்பதைத்தான் சித்த மருத்துவமும் வலியுறுத்துகிறது.

இரவிலேயே எண்ணெய் தேய்த்துவிட்டு மறுநாள் குளிப்பதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். புதிதாக எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது அன்று மட்டும் உடல் சற்றுச் சோர்வாக இருப்பதுபோலத் தெரியும்.

எண்ணெய்யில் ஒரு சிட்டிகை மிளகுத்தூள், ஒரு சிட்டிகை சுக்குத்தூள், ஒரு உள்ளிப் பல், ஒரு மிளகாய் வற்றல் ஆகியவற்றைச் சேர்த்து லேசாகச் சூடாக்கி பின்னர் அந்த எண்ணெய்யைத் தேய்த்துக் கொள்ளலாம்.

**சீயக்காயே சிறந்தது!**

ஷம்பூ போன்றவை எண்ணெய்யின் பிசிபிசுப்பை முற்றிலும் நீக்காது என்பதால் எப்போது எண்ணெய் தேய்த்துக்கொண்டாலும் தலைக்கு சீயக்காய் போட்டே குளியுங்கள். உடலில் உள்ள எண்ணெய்ப் பிசுபிசுப்பை எடுக்கவும்கூட சீயக்காய் மற்றும் கடலைமாவுக் கலவையைப் பயன்படுத்துங்கள். இதனால் பிசுபிசுப்பு, அழுக்குகள் போன்றவை நீங்குவதோடு சருமத்துக்கு பொலிவும் கிடைக்கும்.

எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு, தலைக்கு சாம்பிராணிப் புகை போடுவது மிகவும் நல்லது. தலையில் சேர்ந்திருக்கும் நீரை சாம்பிராணிப் புகை எடுத்துவிடும். ஆனால், இப்போது கடைகளில் சுத்தமான சாம்பிராணி கிடைப்பது அரிதாகிவிட்டதால் மூலிகை தூபப்பொடியை நீங்களே வீட்டில் தயாரிக்கலாம்.

தும்பைப்பூ இலை, துளசி இலை, அரசம் இலை போன்றவற்றைச் சேகரித்து காயவைத்துப் பொடியாக்கிக்கொள்ளுங்கள். பின்னர் சிறிதளவு கட்டிச் சாம்பிராணியுடன் இந்த மூலிகை தூபப்பொடியைச் சேர்த்துப் புகை போட்டுத் தலைக்குக் காட்டலாம். ஆனால், வீசிங் போன்ற பிரச்சினைகள் உள்ளவர்கள் இதைத் தவிர்ப்பது நலம்.

**என்ன சாப்பிடலாம்?**

தீபாவளி என்றில்லை, எப்போது எண்ணெய் தேய்த்துக் குளித்தாலும் அன்று குளிர்ச்சியான உணவுகளைச் சாப்பிட வேண்டாம். அன்று உடம்பு குளிர்ந்திருக்கும் என்பதால் செரிமானத்தைத் தாமதமாக்கும் கடுமையான உணவுகளையும் தவிர்த்திடுங்கள். அசைவ உணவுகளையும் கூடுமானவரை சாப்பிட வேண்டாம்.

எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று உடலின் வெப்பம் கண் வழியே வெளியேறுவதால் கண் எரிச்சல் இருக்கும். குறிப்பாகத் தூக்கம் வரும். தூக்கம் வருகிறதே என்று மதியம் இரண்டு மூன்று மணிநேரம் தூங்கிவிட்டால் உடலின் வெப்பம் அதிகமாவதோடு உடல் சோர்வும் அதிகமாகும். எனவே, தூக்கம் வருவது போல இருந்தால் நாற்காலியில் அமர்ந்தபடி ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுந்துவிடுவது நல்லது.

உடல் சூட்டைத் தணித்து உடலுக்கு, உற்சாகத்தையும் சருமத்துக்குப் பொலிவையும் எண்ணெய்க் குளியல் தரும் என்பது நீங்கள் அறிந்ததே. ஆனால், எண்ணெய்யை உடலின் ஒவ்வொரு பகுதியிலும் தேய்க்கும்போது இதன் மூலம் உடலின் கழிவுகளை நீக்கக்கூடிய நிணநீரின் செயல்பாடு தூண்டப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, நன்மைகளின் சுரங்கமாக இருக்கும் எண்ணெய்க் குளியலை இந்தத் தீபாவளியிலிருந்தாவது பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | 1 | | | | 9 |
| | 7 | | | 6 | | 1 | | |
| 1 | 6 | 3 | 9 | | | | | 8 |
| | 3 | | | | | 2 | | |
| | 5 | | 7 | | 2 | | 1 | |
| | | 6 | | | | | 3 | |
| 6 | | | | | 5 | 8 | 9 | 2 |
| | | 5 | | 2 | | | 6 | |
| 9 | | | | 8 | | | 4 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A**, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங்கள். சரியாக எழுதி வெற்றிபெரும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 5 | 4 | 7 | 3 | 2 | 1 | 8 |
| 7 | 3 | 4 | 8 | 2 | 1 | 5 | 6 | 9 |
| 2 | 8 | 1 | 6 | 9 | 5 | 7 | 3 | 4 |
| 8 | 1 | 2 | 5 | 3 | 9 | 4 | 7 | 6 |
| 4 | 6 | 7 | 2 | 1 | 8 | 9 | 5 | 3 |
| 3 | 5 | 9 | 7 | 6 | 4 | 8 | 2 | 1 |
| 1 | 7 | 3 | 9 | 4 | 2 | 6 | 8 | 5 |
| 9 | 2 | 8 | 1 | 5 | 6 | 3 | 4 | 7 |
| 5 | 4 | 6 | 3 | 8 | 7 | 1 | 9 | 2 |

**செம்மண்**

**வாரமலருக்கு...**

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு சிறப்பானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சீனர்களிடமிருந்து பெற்ற பரிசு!



● காயா

"...அந்தக் காலத்திலே சோழ நாட்டில் இருந்து இரண்டு கண்ணும் குருடாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்கமகாராசன் பேரிற் பிரபந்தம் கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக்கேட்டு மிக்க சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையில் உள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான்..." (இந்த மணற்றிடல் கரையூரும், பாசையூரும் என இராசநாயக முதலியார் குறிப்பிட்டுள்ளார்)

முதலியார் குலசபாநாதனால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை என்கிற வரலாற்றுநூலில் 23ஆம் பக்கத்திலுள்ள குறிப்பு இது. இந்தக் குறிப்பின்படி யாழ்பாடி என்பவன் கரையூர், பாசையூர் ஆகிய இடங்களைப் பரிசாகப் பெற்றுள்ளான். இது... அதாவது இந்தப் பாணன் பரிசாக நிலம் பெற்றது அனைவரும் அறிந்த - அதிலும் குறிப்பாக வரலாற்றுத் தரப்பினருக்கு அத்துப்படியான கதை. இப்படியிருக்கையில், இதன் பிற்பட்ட காலத்தில் பாசையூரவர் ஒருவரும் அன்பளிப்பாக நிலம் பெற்றுள்ளார். இது எவருக்கும் தெரியாத அல்லது ஆவ்வூரைச் சேர்ந்த ஒருசிலருக்கு மாத்திரம் அரிதாகத் தெரிந்த கதை. செவிவழியாகக் கடத்தப்பட்டு வருகின்ற அந்தக் கதை குறித்துத் தேடியதில் கைகளுக்குச் சிக்கிய சில ஆதாரங்களுடன் அந்தக் கதை கீழ்க்கண்டவாறு விரிந்தது.



சீனர்கள் பற்றிய குறிப்பு

"அந்தக் காலத்தில எங்கட அப்பப்பா தொழிலுக்குப் போய்த் தங்கி நிண்ட இடம்தான் அது. பாசையூர் கரையிலயிருந்து பாத்தால் 34, 35 கிலோ மீற்றர்களுக்குக் கூடத் தூரம் வரும். அந்தக் காலத்தில பாய் வள்ளம்தான் இருந்தது. மண்டைக் கல்லாறடிக்குப் போய்ச் சேருறதுக்குச் சில நாள் பிடிக்கும். அப்பிடித் தொழில் செய்யிறதுக்குப் போய் நிண்ட இடத்தில கட்டின ஆலயம்தான் மண்டைக்கல்லாறு அந்தோனியார் ஆலயம். ஆனால், அதை அப்பப்பாவுக்குக் குடுத்தது சீனாக்காரர்கள்" பாசையூரைச் சேர்ந்த ரஜீவ்தான் இந்தக் கதையை ஒப்புவித்தார்.

ரஜீவினுடைய தந்தையின் தந்தை யார் தான் அந்த ஆலயத்தைச் சீனர்களிடமிருந்து பெற்றுள்ளார். அவருடைய பெயர் செல்லையா. அவர் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இது நடந்தும் இன்றைக்கு 200க்கு மேற்பட்ட ஆண்டுகளாகிவிட்டன. அதாவது 1800களில் நடந்த சம்பவம் இது.

"அந்தக் காலத்தில சீனாக்காரர் கடலுக்க கிடந்து எடுத்த அந்தோனியார் சுருவம் ஒண்டை அதிலை வைச்சுச் சின்னக் கொட்டில் மாதிரிப்போட்டுக் கட்டியிருந்தாங்கள். நாளடைவில பிறகு அதைச் சின்னக் கோவில்மாதிரிக் கட்டினாங்கள். பிறகு எங்கடை அப்பப்பாக்களும் அங்கை போய் வர அவைக்கும் சீனக்காரர்களுக்கும் பழக்கம் உண்டாகி இவையளிண்ட கைக்கு மாறிச்சுது. சீனாக்காரர் கட்டின பீடம்தான் அங்கை இப்பையும் இருக்குது.



மடுத்தீஸ் ஆசைத்துரை

சைனிஸ் வடிவப் பீடம்அது" ரஜீவ் சொல்வதுபோல சீன வகைப் பாணியிலமைந்த பீடம் அந்த ஆலயத்தில் தற்போதும் மாற்றத்துக்குள்ளாக்கப்படாமல் இருக்கிறது. அது மாத்திரமல்ல சீனர்கள் அந்த ஆலயத்தை அன்பளிப்பாக வழங்கியமை குறித்து எழுதப்பட்டுள்ள ஆவணம் ஒன்றையும் அவர் ஆதாரமாகக் காட்டினார்.

அந்த ஆலயத்தை ஷாங் ஹாங் என்பவருடன் இணைந்து ஷாயு அஹெய்ஸ் என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார், சீன மொழியில் அவர்களின் கையொப்பங்கள், அதன் பெறுமதி ஆயிரம் ரூபா என்றெல்லாம் பல குறிப்புகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாசையூரவர்கள் தொழில் நிமித்தம் கடலில் பயணித்துப் பாசையூருக்குத் தொலைவாகவுள்ள எதிர்க் கரைகளில் தங்கினர். அவ்வாறே அவர்கள் மண்டைக் கல்லாறிலும் கால் பதித்தனர். ஆனால், சீனர்கள் அங்கு எப்படி...? பெருங்கேள்வியாக எழுந்த அதற்குப் பாசையூரைச் சேர்ந்த மூத்தவர் ஒருவர் இவ்வாறு பதிலிறுத்தார்.

"கடல் பயணமாகச் சீனாக்காரங்கள் அந்தக் காலத்தில பெருஞ்சமுத்திரம் வழியாப் போய்க்கொண்டிருக்கேக்க புயல் காத்தில அகப்பட்டுச் சீரழிஞ்சுபோய்... காத்தும் மழையும் அடைச்சதால இடம் தெரியாமல் மண்டைக் கல்லாறில கரை ஒதுங்கினவங்களாம். பிறகு எல்லாம் ஓய்ஞ்சு அவங்கள் வெளிக்கிடப்போகேக்குள்ள அப்ப அந்தக் கரையில கடலட்டையள் கனக்கக் கிடந்ததை அவங்கள் கண்டிருக்கிறாங்கள். அதாலை அதுகளை எடுக்கிறதுக்கு மினக்கெட்டிருக்கிறாங்கள். அட்டையளை எடுத்து அருகில இருக்கிற கரையில இருந்த குளத்திலையிருந்து தண்ணி எடுத்து அதிலையே தங்கியிருந்து அவிச்சிருக்கிறாங்கள். இதால தொடந்து சில காலம் அங்கையே தங்கிட்டாங்கள். அட்டை குளிக் கேக்குள்ள தானாம் கடலிலை அந்தோனியார் சிலை ஒண்டையும் எடுத்தவங்கள். அதை வைச்சுக் கட்டப்பட்டது தான் அந்த அந்தோனியார் கோயில்"

இப்போதெல்லாம் கடலட்டை பிடிப்பது (குளிப்பது) தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், சில காலங்களுக்கு முன்னர் தொடர்ந்து பிடிக்கப்பட்டு வந்த கடலட்டைகள் கடலுணவு நிறுவனங்களால் அவிக்கப்பட்டுச் சீனாவுக்குக் கொள்ளை விலையில் ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன. கடலட்டைகளுக்குச் சீனாவில் மவுசும் அதிகமாக இருந்தது. இவர் சொன்னதை வைத்துப் பார்க்கையில் சீனர்கள் அப்போதிலிருந்தே கடலட்டைப் பிரியர்களாக இருந்துள்ளனர் என்பதும் வெளிப்பட்டது. இதன்படி சீனர்கள் அமைத்த இந்தக் கோவில் பிற்காலத்தில் செல்லரின் மகனான மடுத்தீஸ் ஆசைத்துரையால் பராமரிக்கப்பட்டது. அவருக்கு இப்போது 94க்கு மேல் வயது.



ஆலயத்தின் உட்புறம்

இவ்வளவு கதைகள் நிறைந்த இந்த மண்டைக்கல்லாறு ஆலயம் எங்குள்ளது என்று இப்போது உங்களுக்குள் தேடல் தொடங்கியிருக்கலாம்....! யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் அமைந்துள்ள பூநகரியை அடுத்துள்ள கிராமம் பள்ளிக்குடா. அந்தக் கிராமத்தினூடகச் செல்கின்ற கடற்கரை வீதி சுனாமிக் குடியிருப்பை ஊடறுக்கிறது. அதனூடான காட்டுப்பாதையூடாகச் செல்கையில் கடல் குறுக்கிடுகிறது. சிறியதொரு நீரோடையாக அது வழி மறிக்கிறது. அதைக் கடந்து அப்பால் சென்றால் இருப்பதுதான் மண்டைக் கல்லாறு ஆலயம்.

சிறியதொரு ஆலயம் என்றாலும் தொன்மை மிகுந்தது அது. வழி மறிக்கின்ற அந்த நீரோட்டத்தை ஊடறுத்துப் போடப்பட்ட பாலம் அந்த ஆலயத்துக்குச் செல்வதை இலகுவாக்கிறது. இந்தப் பாலம் அண்மையில்தான் அமைக்கப் பட்டாலும் அந்த ஆலயம் மிகவும் தொன்மையானது. முல்லைத்தீவில் உற்பத்தியாகின்ற மண்டைக்கல்லாறு என்கிற ஆற் றின் ஓட்டப்பாதையில் - அந்த ஆறு கடலுடன் கலக்கின்ற பகுதியில் அமைந்துள்ளது ஆலயம்.

மண்டைக்கல்லாறு கோவிலின் பின்புறத்தில் ஒரு பாதையிருக்கும். மற்றும்படி அந்தக் கோவிலைச் சுற்றிக் கடல்தான். அதைவிடவும் அதன் சிறப்பு என்னவெனில், சீனர்களிடமிருந்து நம்மவர்கள் பெற்ற ஆலயம் அது என்பதே. பாசையூரவர்கள் மாத்திரமல்ல, பிற்பட்ட காலத்தில் மன்னார், இலுப்பைக் கடவை, நாச்சிக்குடா, பூநகரி, வலைப்பாடு என்று பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திருவிழாக்காலங்களில் அந்த ஆலயத்தில் கூடி வழிபடுகின்றனர். மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி என எதுவுமற்ற அந்த ஆலயம் திருவிழாக் காலங்களில் பெரும் அல்லோலகல்லோலப்படவும் செய்கிறது.

சீனர்களிடமிருந்து பெற்றது என்பதை விடவும் சில சிறப்புகள் அந்த ஆலயத்தில் விரவியே கிடக்கின்றன. அதில் முதன்மையானது மாசி மாதத்தில் அங்கு நடக்கின்ற திருவிழாக்களில் பெண்கள்கூடிச் சுவாமி காவுவது...!



சுவாமி காவும் பெண்கள்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியார் வீதியிலுள்ள திரீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org